DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals 416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc. "My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

# உதயன் UTHAYAN

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1435 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 6, 2023

## இவ்வருடத்தின் உதயன் பல்சுவைக் கலைவிழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி! தாயக மண்ணின் பேச்சாளர்கள் இருவர்!

எதிரவரும் ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பல்சுவைக் கலை விழா" வில் நடனம் நகைச்சுவை கவிதா அரங்கு மற்றும் "ஆரோசை" இசைக் குழுவினர் நீண்ட மெல்லிசை நிகழ்ச்சி.

இதில"பொன்னியின் செல்வன்" புகழ் வி. எம். மகாலிங்கம் சிறப்புப் பாடகராக தோன்றுகின்றார்.

"உதயன் பல்சுவைக் கலை விழா"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் தமிழர் வர்த்தக நிலையங்கள்:

1.கென்னடி-எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனத்தில். தொலைபேசி: 416 298 1598

2. மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்பில் அமைந்துள்ள **Majestic City** வர்த்தக வளாகத்தில் **Imma Trading Company** -தொலைபேசி: 416 609 0827

3. கென்னடி-எக்ளிங்டன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில். தொலைபேசி: 416 759 4916

## Grand Opening Ceremony of New Real Estate Brokerage 'LUXURY HOMES WORLD BROKERAGE'

## திரு.திருமதி. இந்திரன் — சுசி தம்பதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதிய 'LUXURY HOMES WORLD BROKERAGE' நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பெற்றது



திரு திருமதி இந்திரன்-சுசி தம்பதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதிய **'LUXURY HOMES WORLD BROKERAGE'** நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 01-10-2023 அன்று பிற்பகல் திறந்து வைக்கப்பெற்றது. **Home Life Future Realty Inc** நிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல் அவர்கள் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அழைக்கப்பெற்ற நண்பர்கள் மற்றும் வீடு விற்பனை முகவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் திறப்பு விழா வைபவத்தில் கலந்து சிறப்பித்து தங்கள் ஆதரவை வழங்கினார்கள். கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தின் சார்பிலும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

**This Brokerage is located at 5762 HWY 7 road -Unit 203, Markham, Ontario. L3P 1A8. 416 706 5000**

(உள்ளே விபரமான செய்தி 27ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE
Acupuncturist Mrs. K. Vsanthakumar
இடமாற்றம் பற்றிய அறிவித்தல்
இதுவரை காலமும் Kennedy & Finch சந்திப்புக்கு அருகில் இயங்கிவந்த மேற்படி அக்குபன்சர் சிகிச்சை நிலையம் தற்போது புதிய இடத்தில் பின்வரும் விலாசத்தில் இயங்கிவருகின்றது:
5200 Finch Ave. East. Suit 349,
Scarborough, ON M1S 4Z5 Tel: 416 754 4024

BIG Billyard Insurance Group
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com


Latika Productions
லதிகாவின்
SAINDHAVI & UNNI MENON
LIVE IN CONCERT
21st OCTOBER | CANADA EVENT CENTRE, WHITBY
TICKETS
From $30 I VVIP $300
GATES OPEN
5.00 PM
A R Reihana
Saindhavi
Ramya Nambisan
Unni Menon
Vijay
Kiki
Anu Anand
Sridhar sena
Aravind
Madhan Band
TICKET BOOKINGS OPEN NOW
tickets.rescounts.com
Latika Gold House
Contact: 647-996-5922 /416 423 7555
2900 Markham Rd Unit L7, Scarborough, ON M1X 1E6
Sponsorship Opportunity Available
அனுசரணையாளர்கள் வரவேற்கப்படுகின்றார்கள்.

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# ஏழ்மையைக் கண்டு ஒதுங்குவதும் துன்பத்தைக் கண்டு விலகுவதும் மனித பண்பல்ல என்றனர் ஆன்றோர்

எமது தாயகத்திலே அரவணைப்போர் என்று எவரும் இன்றி அனாதரவாகவும் நிற்கதியாகவும் போரின் வடுக்களுக்களைச் சுமந்தவாறும் பொருளாதார வெறுமையில் சிக்கித் தவித்த வாறும் உடலியல் உழவியல் என்ற வகையிலும் சொல்லொணா உபாதைகளுக்கு உள்ளாகி எவரேனும் மனமிரங்கி கை தூக்க வாராரோ எனும் அங்கலாய்ப்புடனும் ஏக்கங்களுடனும் அன்றாடம் துயருற்றிருக்கும் எம் பிறந்த மண் உடன் பிறப்புக்களோ எண்ணற்றவை.
அவர்களின் கண்ணீரைப் போக்கி சமூகத்தில் அவர்களும் வாழ்வை இயன்ற வரை பிறரைப் போல் தாமும் வாழந்திட வேண்டும் எனும் நல் நோக்குடனும் சீரிய சிந்தனையுடனும் திரு.செந்தில் குமரன் அவர்கள் கருணையுள்ளம் கொண்டு தமது சுய வாழ்வின் விருப்புகளுக்கு அப்பால் பல ஆண்டுகளா கடினமாக உழைத்து அந்த நலிவுற்றோர் நல் வாழ்வுக்காக இடையறாது தொடர் பணி செய்து வருவது யாவரும் அறிந்த ஒன்றே.

நீண்ட காலமாக தமக்கே உரித்தான "மின்னல் இசை" எனும் அவரது இசைப்பயணங்களின் மூலம் இயல்பாகவே அமைந்த அவரது குரல் வளத்தினை மூலமாகக் கொண்டு இசை பிரியர்களை மகிழ்வித்தும், பின் நிவாரணம் என்னும் இசை நிகழ்வுகளினூடாக ஈழத்தில் இடர் உற்றிருக்கும் அந்த மக்களுக்காக மேடைகள் தோறும் உள்ளங்களை உருக்கும் சிந்தனைப் பாடல்களைப் பாடி சிறுகச் சிறுகச் சேர்க்கும் பொருள் வளங்களைத் திரட்டி அவை பயனாள மக்களைச் சென்றடைவதற்கான பிற செலவுகள் அனைத்தையும் தமது சொந்த பணத்தின் மூலம் குடும்ப சகிதம் தாமே ஈடு செய்து பல விதமான வாழ்வாதார மேம்பாடுகளை இங்கிருந்தும் தாய் நிலத்து மக்கள் முன்னேற சமுகமளித்தும் தொடர் தொண்டாற்றி அவர்களை வருவதுவும் தமிழ் சமூகம் அறிந்த ஒன்றே.

கால ஓட்டத்தில் பெரும் பொருட் செலவினை ஏற்படுத்த வல்ல குணப்படுத்லுக்கு சவாலாக இருக்கக்கூடிய தீவிர நோய்களுக்கு நோகளுக்கு ஆளாகி நின்று தவிக்கும் நோயாள மக்கள் பெருகி வரும் நிலையினை அவதானித்த திரு. செந்தில் குமரன் அவர்கள் கடந்த ஓர் ஆறு ஏழு ஆண்டுகளாக நலிவுற்ற அந்த மக்கள் வாழும் ஊர்ப் பகுதிகள் பலவற்றிலும் இம்மக்கள் முகங் கொடுக்கும் மருத்துவ தேவைகளுக்கும் அவற்றிற்கு ஏற்ற வகையில் அங்குள்ள பல மருத்துவ மனைகளில் குறிப்பிட்ட சிகிச்சைப் பிரிவுகளும், அவற்றிற்கான உபகரணங்கள், இயந்திரங்கள், தேவைக்கேற்ப இல்லாதிருப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் உயிரிழப்புகளை கருத்தில் கொண்டும்.

அக்குறைகளை சரி செய்து மக்கள் உயிர்களை முடிந்த வரை காத்திடும் நோக்குடனும் "நிவாரணம்" எனும் ஓர் உயிர்காப்பு அறக்கட்டளை ஊடாக உயிர் காக்கும் இதய சத்திர சிகிச்சைகள், குருதி சுத்திகரிப்பு நிலையங்கள், நோயுற்றோருக்கான வாழ்வாதாரங்கள் என பல மருத்துவம் சார்ந்த உதவிகளை நல்லிதயம் கொண்ட கொடையாளராகிய அன்பிற்குரிய தமிழ் மக்களின் பேருதவியுடன் அரும்பாடு பட்டு நிவர்த்தி செய்து அவற்றில் வெற்றி கண்டு வருவதுவும் கண்கூடே. கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் கிளிநொச்சி மாவட்டத்தில் இவரது அமைப்பின் நடமாடும் மருத்துவ திட்டம் ஊடாக முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு அவர்கள் வீட்டிற்கே சென்று சேவைகள் வழங்குவதன் மூலம் அவர்களின் போக்குவரத்து நிதி நெருக்கடிகளை தவிர்த்து நோயாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பெரும் பயனை வழங்கி வருகிறது. செந்தில் குமரனின் நிவாரண அமைப்பு சமீபத்தில் மார்க்கம் முல்லை என்று பெயர் சூட்டி மாஞ்சோலை மருத்துவமனையில் ஒரு அவசர இதய சிகிச்சை பிரிவு ஒன்றிற்கான நிதியினை வழங்கி வைத்தனர். அந்த நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வின் சிறப்பு அதீதியாக இலங்கைக்கான கனடிய தூதுவரான திரு எரிக் வால்ஸ் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்தி பேசியது நிவாரண அமைப்பின் மனித நேய செயற்பாடுகளுக்கு கிடைத்த மிகப்பெரிய மிகப்பெரிய அங்கீகாரம் என்பது சிறப்பு. இந்த மனித நேய சேவை எனும் நீள் பயணத்தின் ஒரு மைல்க்கல்லாக தமது மனித நேசிப்பிற்காக தாய்த்தமிழகத்திலும் எமது தமிழ் மண்ணிலும் ஒட்டு மொத்த தமிழினத்தின் உள்ளங்களிலும் அன்பையும் அபிமானத்தையும் பெற்று நிலைத்திருக்கும் அமரர் மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் ஆபுசு அவர்களின் பெயரால் 2018 முதல் ஆண்டு தோறும் "ஆபுசு 101, 102, 106" எனும் இசை மாலை ஒன்றை ஒழுங்கமைத்து எமது உள்ளூர் கலைஞர்களையும் மனித நேயத்தின் பால் பரிவு கொண்ட பிற இசை வல்லுனர்கள் பாடகர்கள் போன்றோருடனும் கை கோர்த்து தமது கம்பீரக் குரலால் மக்கள் வெள்ளத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி எம் மக்களின் ஆறாத்துயர் துடைத்திட அதனூடே அரும் பாடுபட்டு நிதி சேர்த்தன் பயனாக இருதய நோய் முற்றி உயிருக்காக போராடி நின்ற எம் ஊர் உறவுகளில் இது நாள் வரை 105 இளம் உயிர்களை அறுவைச் சிகிச்சைகள் மூலம் காப்பாற்றி அவர்களையும் அவர் சார் குடும்பத்தினரையும் முகம் மலர வாழ வைத்த செயல்கள் வார்த்தைகளால் விளக்கிட முடியாதவை.

அத்தோடு தமது உடல் நலக்குறைகளின் இயலாமை காரணமாக குறிப்பாக சிறுநீரக வருத்தம் முற்றி ரத்த சுத்தீகரிப்பினால் மட்டுமே உயிர் வாழ முடியும் என்ற நிலையில் உள்ள, தொழில் வாய்ப்போ வருவாயோ பெறும் வகையற்றோரின் வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளாக பால் தரக்கூடிய ஆடு மாடுகள் கோழிப் பண்ணைகள் தையல் நிலையம் மற்றும் சிறு கைத்தொழில் மூலம் அன்றாட வாழ்வை நகர்த்தும் உள்ளூர் தயாரிப்புகளுக்கான சிறு தொழில் இயத்திர ஆலைகள் போன்ற எண்ணற்ற உதவித்திட்டங்கள் மூலம் வாழ்வாதார வழிமுறைகளை ஏற்படுத்தி அவர்கள் கண்ணீரைத் துடைதிட்டதில் இவரது நிவாரண அமைப்பின் பங்கு இணையற்றது எனில் மிகையல்ல எனலாம்.
பெருந் தொற்று காலமாகிய 2020-2021 காலப்பகுதிகளில் ஆபுசு வைபாவ போன்ற பொது சமூக நிகழ்வுகள் இல்லாததனால் அந்த அமைதி நிலையிலும் **Online** போன்ற வலைத்தள வழிமுறைகள் ஊடாக ஜனவரி 2021 இல் "பொங்கு மனிதம்" எனும் ஒரு மெய்நிகர் இசை நிகழ்வூடாகவும் மனிதநேய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தி அதனூடே பெற்றுக் கொண்ட $130,287.14 டொலர் நிதிகளை பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்காக ஏழு மாவட்டங்களிலும் உலர் உணவும் வழங்கி பல சத்திர சிகிச்சைகளையும் பல சவால்களுக்கிடையே நிவாரண அமைப்பு செய்து முடித்திருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டின் முற்பகுதியில் ஆபுசு 106 எனும் மாபெரும் இசை நிகழ்வின் ஊடாக $236.658.58 டொலர்களை சேகரித்து வழங்கி இந்த உயிர்காப்பு செயல் வடிவம் உச்சத்தைத் தொட்டிருப்பது உயிர்ப்போர் வாழ்வாதாரப் போர் புரியும் நமது மண் வாழ் மக்களுக்கான மறுவாழ்வின் கலங்கரை விளக்கம் என்றே சொல்ல வேண்டும்.

நிவாரணம் எனும் இந்த நலன் காப்பு அமைப்பின் அதி உச்ச பண்பாக மேற் கூறிய வரவு செலவு அனைத்திற்குமான ஒரு சதம் பிசகாத ஆண்டறிக்கை கணக்கு அட்டவணைப் படுத்தப்பட்டு வழங்குனர் பெயர், வழங்கிய தொகை அவற்றை பெற்றுக் கொண்ட பயனாளிகள் தம் நோய்களுக்கு செலவான தொகை, பயனாளிகளின் பெயர்கள் போன்ற அனைத்து தரவுகளும் தமது முகநூல் ஊடாகவும் ஏனைய சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அனைவரும் காணும் வண்ணம் பதிவேற்றப் பட்டிருப்பது அவரது இந்த இறை நிகர் பணிக்கான சான்றாகின்றது என்றே சொல்வேன்.

மகாத்மா காந்தியை கௌதம புத்தரை சுவாமி விவேகானந்தாவை அன்னை தெரேசாவை மேன்மை சொல்லும் இன்றைய மனித வர்க்கம் குறிப்பாக நமது ஈழ சமூகம் தமது துறை சார் செய்தி ஊடகங்களோ சமூகவலைத் தளங்களோ அன்றி ஊர் சங்கங்களோ அமைப்புக்களோ இவ்வாறான மனிதம் தழைக்க தமது வாழ்நாளை அர்ப்பணித்து செலாற்றும் திரு.செந்தில் குமரன் போன்றோரை தமது நிறுவனங்கள் வாயிலாக உரிய முறையில் நன்றியறிதலையோ அன்றி இச்செயற்பாட்டு வளர்ச்சிக்கான ஊக்கமோ ஆக்கமோ கொடுக்கின்றோமா என்றால் பதில் கேள்விக்குறியாகவே தெரிகிறது.

இதே வேளை எமது ஈழ சமூகத்திற்கோ அல்லது தங்கள் தமிழ்நாடு சமூகத்திற்கோ ஒரு சதத்திற்கும் பயனற்ற தமிழக திரைப்பட நடிகர்களையும் பாடகர்களையும் சாமரம் வீசி தூக்கி வைத்து கொண்டாடும் எம் சமுகத்தில் உள்ள சில ஊடகங்கள் மற்றும் மனிதர்களின் செயல் வெட்கத்தின் உச்சம்.
இந்நிலை மாறவேண்டும்
இதயங்கள் நெகிழ வேண்டும்
இளைய தலைமுறை செந்தில் குமரன்கள் இவ்வாறான வழிகாட்டிகளின் அடியொற்றி மனிதம் காக்க தோள் கொண்டு அணிவகுக்க வேண்டும்.
வாழ்க நிவாரணத்தாய்
வாழ்க செந்தில் குமரன்

வாழ்க கொடையாளர மக்கள்
வாழ்க மனித நேயம்.
"உள்ளம் தேறிச் செய்வினையில்
ஊக்கம் குன்றாது உழைப்போமேல்
பள்ளம் உயர் மேடாகாதோ பாறை
பொடியாய்ப் போகாதோ"
இப்படிக்கு
நிவாரணத் தாயின்
சிறுத் தொண்டன்
க.இராசநாதன்

**Notice**

NOTICE IS HEREBY GIVEN that on behalf of Dexter Seusahai application will be made to the Legislative Assembly of the Province of Ontario for an Act to revive Tribal Carnival Inc. The application may be considered by the Standing Committee on Procedure and House Affairs. Any person who has an interest in the application and who wishes to make submissions, for or against the application, to the Standing Committee on Procedure and House Affairs should notify, in writing, the Clerk of the Legislative Assembly, Legislative Building, Queen's Park, Toronto, Ontario, M7A 1A2. Dated at 4pm, this 30th day of September 2023.

Dexter Seusahai

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

**Cobourg** நகரத்திலும் **Downtown Toronto** விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு **Cook** மற்றும் **Kitchen Help** ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. **Cobourg** நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
*416 294 7887*

**மணமகள் தேவை**

மன்னாரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 32 வயதுடைய கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பெற்றோர் கனடாவில் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். மணமகன் க.பொ.த (உயர்தரம்) கற்றவர். மேலும் விபரங்களை அறிய 365-777-6868 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

**Basement for Rent**

**Markham/Lawrence** சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் உள்ள 3 படுக்கை அறைகள் கொண்ட **Basement** உடனடியாக வாடகைக்கு விடப்படும். **Separate Entrance** உள்ளது. அத்துடன் ஒரு வாகன **Parking** தரப்படும். இரண்டு குளியல் அறைகள் உள்ளன.
மேலதிக விபரங்களுக்கு:
**647-710-0231**

**HELP WANTED**

தமிழ்ப்பூங்காவில் கீழ்வரும் இரண்டு வேலைகட்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
**1. Personal Secretary**
**2. Cleaner**

தொடர்புகட்கு:
**thamilpoonka@gmail.com**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினரும் (2023-2024) 1997 - 2004 க.பொ.த உ/த பழைய மாணவனுமான, அமரர் வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பெற்றோரின் நிதிப்பங்களிப்புடன் பழைய மாணவர் சங்கத்தினால் புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுகாதார மேம்பாட்டு அலகு திறப்பு விழா நிகழ்வு சாரங்கனின் பிறந்த தினமான 2023 புரட்டாதி 30 ஆம் திகதி காலை 8:30 மணி அளவில் நடைபெற்றது.

கல்லூரி ஞானவைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுடன், கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் வைத்திய கலாநிதி கோ. றஜீவ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமரர் வைத்தியகலாநிதி வேலாயுதம் சாரங்கனின் பெற்றோர், கல்லூரி பிரதிஅதிபர் எஸ். பரமேஸ்வரன், வைத்திய கலாநிதி சி. சிவதாஸ், மாணவர் சங்க தலைவர் வைத்திய கலாநிதி கோ. றஜீவ் ஆகியோர் சுகாதார மேம்பாட்டு அலகினைத் திறந்துவைத்து நினைவுக் கல்லினை திரை நீக்கம் செய்து வைத்தனர்.

சாரங்கனின் திருஉருவப்படுத்திற்கு சாரங்கனின் தாயார் விளக்கேற்றி மலர்மாலை அணிவித்தார்.

இந் நிகழ்வில் சாரங்கனின் வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், பெற்றோர், உறவினர்கள், கல்லூரி பிரதி அதிபர், சுகாதார அலகு பொறுப்பாசிரியர், ஆசிரியர் சங்க தலைவர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# சரத்வீரசேகர வடக்கில் கட்டளை தளபதியாக செயற்பட்ட பொழுது அதிகளவு எமது தமிழ் உறவுகள் காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள்



இனவாதத்தை கக்கி இன்று சிங்கள மக்களை தூண்டிவிட்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டினை விட்டு வெளியேறியிருக்ககூடிய நீதிபதி சரவணராஜாவின் வெறியேற்றதிற்கு மூலகாரணமாக செயற்பட்ட சரத்வீரசேகர வடக்கில் கட்டளை தளபதியாக செயற்பட்ட பொழுது அதிகளவு எமது தமிழ் உறவுகள் காணாமலாக்கப்பட்டிருக்க வேண்டும் என்றே சிந்திக்க தோன்றுகின்றது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.


மானிப்பாய் - சுதுமலையில் இடம்பெற்ற இரண்டாம் மொழிக்கற்கைகள் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இந்த மொழியினை நாங்கள் தமிழர்கள் எதிர்க்கவில்லை. எம்மை எதிர்க்க பண்ணினார்கள். பண்டாரநாயக்கா தனிச்சிங்கள சட்டம் கொண்டுவந்த போது நாங்கள் முழுமையாக எதிர்த்தோம். இன்று இதனை ஒரு பாலம் அமைத்து செயற்பட கருஜெய சூரிய தொடர்சியாக செயற்பட்டு வருகின்றார்.

நல்லாட்சி காலத்தில் பல விடயங்களை செய்தருக்கின்றார். நல்லிணக்கம் பற்றி எப்பொழுதும் பேசுபவர் ஒரு இனவாதியாக செயறபடாதவர். சபாநாயகராக இருந்தவர் இருந்த பொழுதும் அவர் சுயநலமாக செயற்பட்டவர் கிடையாது அனைவராலும் அவர் மதிக்கப்பட்டவர். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? சரத் வீரசேகர போன்ற இனவாதி தனது பேச்சுக்கள் மூலம் நீதபதிக்கு எதிராகசிங்கள மக்களினை பௌத்த துறவிகளினை தூண்டிவிட்டு இன்று அவர் உயிர்அச்சுறுத்தல் காரணமாக பதவியினை ராஜினாமா செய்து கொடுத்துவிட்டு நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்.

நான் நினைக்கவில்லை சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாறான ஒரு கடித்தினை இதுவரை காலமும் பெற்றுகொண்டிருக்காது. செம்மணி படுகொலை புதைகுழி மீட்பின் போது செயற்பட்ட நீதிபதி அருள்சாகரன் இவ்வாறு அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி இருந்தார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக வடக்கில் அப்பொழுது கட்டளை தளபதியாக செயற்பட்ட சரத்வீரசேகரவின் காலத்தில் தான் அதிகமானோர்கள் காணாமாலாக்கபட்டிருப்பார்கள் போல தெரிகின்றது.





With President Gotabaya Rajapaksa


With Prime Minister Mahinda Rajapaksa after completing the humanitarian operation

ஆகவே இவ்வாறான பிரிவினைகளை தடுப்பதற்கு இரண்டாம் மொழியின் தேவை இருக்கின்றது. அபிவிருத்தி நோக்கி செல்வதற்கு சிங்களம் தேவையாக இருக்கின்றது மொழிக்கும் எங்களுக்கும் அரசியல் பகைமை இல்லை இது அவர்களால் அன்று உருவாக்கப்பட்ட சட்டமூலங்களினாலே எம்மை எதிர்க்க வைத்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதிபதி பதவி விலகிய விடயம் — ஸ்ரீகாந்தா கருத்து

குருந்தூர் மலை ஆலய விவகாரம் தொடர்பான வழக்கினை கையாண்ட முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி, தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறியதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என்பதை தயக்கம் எதுவும் இன்றி கூறிவைக்க விரும்புவதாக தமிழ் தேசிய கட்சியின் தலைவர் ந. ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ் தேசிய கட்சியின் தலைவர் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில், பாராளுமன்றத்துக்கு உள்ளே எழுப்பப்பட்ட இனவெறிக் கூச்சல்களுக்கு அப்பால், அதிகாரத் தரப்பினால், நேரடியாகவும் மறைமுகமாகவும் நீதிபதி மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் ரீதியான அழுத்தங்களே, அவரை இந்த முடிவுக்கு தள்ளியிருக்கின்றன என்பது தெட்டத் தெளிவானது.

பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அனுசரணையாக, நீதிபதி சரவணராஜா வளைந்து கொடுக்க மறுத்திருந்த காரணத்தினால் தான், அவருக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்கின்றது.

தமது கடமையை நேர்மையுடன் செய்ய விரும்பும் சகல நீதிபதிகளுக்கும் இது ஓர் சிவப்பு எச்சரிக்கை என்பதை, தமிழ், முஸ்லீம் மக்கள் மட்டுமல்லாமல், சிங்கள மக்களும் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமைக்குள் முழு நாடும் இப்போது தள்ளப்பட்டிருக்கின்றது.

நீண்ட பல வருடங்களாக நிலவி வரும் அரச பயங்கரவாதம் என்பது, இப்பொழுது புதிய களம் ஒன்றை திறந்திருக்கின்ற நிலைமையில், சட்டத்தின் ஆட்சி தொடர்பில் எஞ்சியிருந்த நம்பிக்கைகளும் சிதறத் தொடங்கியுள்ளன.

எமது மக்களைப் பொறுத்தமட்டில், குருந்தூர் மலை விவகாரத்தில் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் நேர்மையான நீதிபதிக்கு ஆதரவாகவும், அதற்கும் மேலாக, நீதித் துறையின் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டிருக்கும் பாரிய சவாலுக்கு எதிராகவும், எமது ஒன்றுபட்ட எதிர்ப்பை நாம் வெளிப்படுத்தியே ஆக வேண்டும். உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் அது நிச்சயமாக வெளிப்படுத்தப்படும் - என்றுள்ளது.

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் பின்லாந்து மனித உரிமைகளிற்கான சிறப்புத் தூதுவருக்குமிடையே சந்திப்பு!




பின்லாந்து மனித உரிமைகளிற்கான சிறப்புத்தூதுவர் தீனா ஜோர்டிக்காவிற்கும், (Tiina jortikka) தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களிற்குமிடையில் சிறப்புச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

அனைத்துலக இராஜதந்திர கட்டமைப்பின் (IDCTE) ஒழுங்கமைப்பில், பின்லாந்து தேசத்தின், மனித உரிமைகளிற்கான சிறப்புத் தூதுவர் தீனா ஜோர்டிக்காவிற்கும், (Tiina jortikka) தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களிற்குமிடையில் சிறப்புச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இச்சந்திப்பில், சிறிலங்கா அரசினால் தமிழர் பிரதேசங்களில் நடாத்தப்படும், திட்டமிட்ட மனிதவுரிமை மீறல்கள், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக காத்திரமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. தமிழர் தாயகத்தில் நடைபெறும் மனிதவுரிமை சார்ந்த விடயங்களை, ஐரோப்பிய ஒன்றியமும் பின்லாந்தும் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், தமிழ் மக்கள் அமைதியான பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதையே தாமும் விரும்புவதாகவும், ரீனா ஜோர்டிக்கா அவர்கள் மேலும் தெரிவித்தார்.

பின்லாந்து தேசத்தில் தற்போது தங்கிநிற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இன்றும் நாளையும் வெளிநாட்டு. அமைச்சுப் பிரதிநிதிகளுடனும், அரச, அரசசார்பற்ற அமைப்புகளின் பொறுப்பு வாய்ந்த மேலாளர்களுடனும், பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார்.

இச்சந்திப்புகளினூடாக தமிழர் தாயகத்தில், சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத நடவடிக்கைகளையும். மனிதவுரிமை மீறல்களையும் ஆதார பூர்வமாக விளக்கவுள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சட்டவிரோத சம்பாத்தியம் வேண்டாம் — உலக சிறுவர் தினத்தையொட்டி
## பேசாலை சென் மேரிஸ் மகா வித்தியாலய சிறுவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்



- மன்னார் நிருபர் (04-10-2023)

மன்னார் பேசாலை சென் மேரிஸ் மகா வித்தியாலய சிறுவர்கள் உலக சிறுவர் தினத்தை கொண்டாடி உள்ளனர்.

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலி யை தொடர்ந்து சிறுவர்கள் வர்ண ஆடைகள் அணிந்து கையில் பலூன்களை ஏந்தியவாறு ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக சென்றனர்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட சிறுவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

குறிப்பாக வாதை ஊட்டாதீர்கள், போதையை நிறுத்துங்கள், நல்ல பாதையை காட்டுங்கள், சிறுவர் எமது உரிமையை மதியுங்கள், சிறப்பான வாழ்வை எமக்கு அழியுங்கள், எங்கள் கனவுகள் மெய்ப்பட விடுங்கள், எங்கள் உலகை எங்களுக்கு கொடுங்கள், எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள், சட்டவிரோத சம்பாத்தியம் உமக்கு வேண்டாம், சாபமும் பாவமும் எனக்கு வேண்டாம், உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இருந்து பிரதான வீதி வழியாக சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் கிராமப்புற வீதியூடாக சென்மேரிஸ் பாடசாலையை சென்றடைந்தனர்.

மன்னார் மாவட்ட பகுதியில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனை அதிகரித்து காணப்படும் நிலையில் குறித்த சிறுவர்களினால் விழிப்புணர்வு ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி குறித்த சிறுவர்களை குறித்த பாடசாலை ஆசிரியர்கள் பேண்ட் வாத்தியம் இசைத்து அனைத்து மக்களின் கவனத்தை திருப்பும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலத்தில் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.





# மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிடத்திற்கு மதவாத, அடிப்படைவாதம் அற்ற ஒருவரை நியமியுங்கள் — மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்



- மன்னார் நிருபர் (04-10-2023)

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிடம் ஒரு மாதத்திற்கு மேலாக காணப்படுகின்ற நிலையில் உடனடியாக அரச அதிபர் ஒருவரை நியமிக்குமாறு கோரி மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் புதன்கிழமை (4) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வெற்றிடம் ஒரு மாதத்திற்கு மேலாக காணப்படுகிறது. மாவட்டத்தில் பல்வேறு விதமான பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

குறிப்பாக பெரும்போகம் விவசாய நடவடிக்கைகள் தொடங்கவுள்ளதால் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக பல பிரச்சினைகள் காணப்படுவதுடன் மாவட்ட ரீதியாகவும் பல விடயங்களுக்கு தீர்மானம் எடுப்பதில் பல்வேறு தாமதங்கள் ஏற்படுகிறது.

கடந்த காலத்தைப் போல் அல்லாமல் வலிமையான, ஆளுமையுள்ள, செயல் திறனுள்ள, வல்லமையயுள்ள ஒருவரை மதவாதம், அடிப்படைவாதம், அரசியல் நோக்கு நிலை வாதம் கடந்து நிர்ணய நிலையில் உள்ள சமூக சம நீதியை பின்பற்றக்கூடிய ஒருவரை மிக மிக விரைவாக நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் காணி விடுவிப்பு உட்பட அரசியல் தீர்மானங்கள் யாவும் எமது மாவட்டத்தில் ஒழுங்காக நிகழ்வதில்லை.

மிகப் பலவீனமான அரசியல் தலைவர்கள் உள்ளதால் நிர்வாகத் தலைமைக்கு ஆவது ஆளுமையுள்ள ஒருவரை நியமிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் அபிவிருத்தி குழு தலைவர் மஸ்தானை திட்டி தீர்க்கும் மன்னார் மக்கள்

- மன்னார் நிருபர் (29.09.2023)

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் மீது தொடர்ச்சியாக பல்வேறு விமர்சனங்களை மன்னார் மக்கள் முன் வைத்து வருகின்றனர்.

குறிப்பாக மன்னார் தீவக பகுதியில் நீண்ட நாட்களாக பல அபிவிருத்தி திட்டங்கள் கிடப்பில் இருப்பதாகவும் அது தொடர்பில் அபிவிருத்தி குழு தலைவர் என்ற வகையில் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை எனவும் அதே நேரம் வடக்கில் உள்ள பல மாவட்டங்களில் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வன வள திணைக்களத்தின் கீழ் கையகப் படுத்தப்பட்டுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்ற போதும் மஸ்தான் அது தொடர்பில் அக்கறையீனமாக செயற்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.



இது ஒரு புறம் இருக்க கடந்த வருடம் மன்னார் நகர் பகுதியின் மையத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் பழடைந்து காணப்படும் பல நோக்கு கூட்டுறவு சங்க கட்டிடத்தை அகற்றி தருமாறு முன்னாள் அரசாங்க அதிபரினால் மஸ்தான் மற்றும் நகர திட்டமிடலுக்கு பொறுப்பான அமைச்சர் அர்ஜுன ரன துங்கவிடமும் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.



குறித்த கட்டிடமும் மிகவும் ஆபத்தை ஏற்படுத்த கூடிய வகையில் அவ்வப்போது வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான பல விடயங்களை முக்கியத்துவப்படுத்தி செயல்படுத்தாத மஸ்தான் அவர்கள் தற்போது முசலி வாக்காளர்களை மையப்படுத்தி மீலாத் நபி விழா ஏற்பாடு என்ற பெயரில் முசலி பகுதியின் மக்களின் அவல நிலையை மறைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் மன்னாரில் ஆபத்து நிறைந்த குறித்த கட்டிடத்தை அகற்ற நிதி ஒதுக்கீட்டை பெற்று கொடுக்க முடியாத மஸ்தான் சிலாவத்துறை மக்களை ஏமாற்றுவதற்காக சுற்றுவட்டம் ஒன்றை அமைப்பதற்கு 84 மில்லியன் ரூபாய் ஒதுக்கி உள்ளதாக முகநூலில் பதிவிட்டுள்ளார்.

முசலி மற்றும் மன்னாரில் செய்ய வேண்டிய பல முன்னுரிமையான செயற்பாடுகளில் தொடர்ச்சியாக கவனயீனமாக செயற்படுவதாகவும் மக்கள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

# கிழக்கில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் குடியமர்த்தப்பட்ட சிங்கள விவசாயிகளால் மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு



கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் வெளியூர்களில் இருந்து கொண்டு வந்து குடியமர்த்தப்பட்ட சிங்கள விவசாயிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள, தமிழ் பால் பண்ணையாளர்கள், பல ஆண்டுகளாக தங்கள் மாடுகளுக்கு உணவளிக்க பயன்படுத்திய நிலத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு கோரி கோரி கிழக்கு மாகாணத்தில் பால் பண்ணையாளர்கள் இரண்டு வாரங்களாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நில அபகரிப்பின் பின்னணியில் அரசியல் பின்னணி இருப்பதாகவும், இனவாத மோதல்களை தூண்டி அமைதியின்மையை ஏற்படுத்துவதே காணிகளை அபகரிக்கும் சிங்கள மக்களின் நோக்கம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பால் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

“நிலத்தை அபகரிக்கும் வேலையை இவர்கள் செய்கிறார்கள். எங்களை எப்படியாவது வெளியேற்ற வேண்டும் என்பது இவர்களின் நோக்கம். அம்பாறை மாவட்டத்தில் இருந்து இங்கு வந்து இப்படி நடந்து கொள்கிறார்கள். அங்கே சகல வளங்களும் உண்டு. இங்கு வந்து இப்படி நடந்து கொள்கின்றனர்.

அவர்களின் நோக்கம் இனவாத மோதல்களை உருவாக்கி அமைதியின்மையை உருவாக்குவதுதான். இதற்கு பின்னால் அரசியல் பின்னணியும் உள்ளது.

செப்டெம்பர் 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குழுக் கூட்டத்தில், பாற்பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்க முடியாது என மாவட்டச் செயலாளர் கமலாவதி பத்மராஜா தெரிவித்ததையடுத்து, தமிழ்ப் பால் பண்ணையாளர்கள் செப்டெம்பர் 15 வெள்ளிக்கிழமை முதல் மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக தொடர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மாடுகளை மேய்ச்சலுக்கு பயன்படுத்திய சுமார் இரண்டாயிரத்து ஐநூறு ஏக்கர் நிலம் சிங்கள விவசாயிகளால் விவசாய நடவடிக்கைகளுக்காக சுவீகரிக்க பட்டுள்ளதாகவும் அதனால் பால் பண்ணையாளர்கள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



மட்டக்களப்பு, மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் அமைந்துள்ள புல் நிலம், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் ஆளுநராக நியமிக்கப்பட்ட, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தினால், சோளம் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளும் வகையில், குடியேற்றப்பட்ட 150 சிங்களக் குடும்பங்களுக்கும் பிரதேச பால் பண்ணையாளர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இது புல் வளரக்கூடிய வளமான பூமியெனவும் பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து அதிகாரிகளுக்கு பலமுறை தெரிவித்தும் தீர்வு கிடைக்கவில்லை என மயிலத்தமடு மாதவணை பால் பண்ணையாளர் சங்கத்தின் தலைவர் சீனித்தம்பி நிமலன் வலியுறுத்துகின்றார்.

“992 பால் பண்ணையாளர்கள் உள்ளனர். அவர்களை நம்பி 3,000 குடும்பங்கள் உள்ளன. அவர்களின் பொருளாதாரம் இதை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் ஒரு நாளைக்கு 3,000 லீட்டர் பாலை வழங்குகிறார்கள். கறவை மாடுகளுக்குடி குடி தண்ணீர் இல்லை. அரசிடம் தீர்வைக் கோரினோம். அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் உட்பட அனைத்துக் கூட்டங்களிலும், எங்களின் பிரச்சினைகளை முன்வைத்துள்ளோம். தீர்வைத் தருவதாகச் சொல்கிறார்கள். எனினும் எதுவும் நடக்கவில்லை.”

பாற்பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மாகாண ஆளுநரால் தீர்வுகளை வழங்க முடியாமல் போனது ஏன் எனவும் சீனித்தம்பி நிமலன் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

“மாகாண ஆளுநரால் எமக்கு ஏன் தீர்வை வழங்க முடியாது? இதற்கு தலையீடு செய்யப்போவது இல்லையென மாவட்டச் செயலாளர் கூறுகிறார். 13 நாட்களாக வீதியில் இருக்கின்றோம்”.

கறவை மாடுகளுக்கு தினசரி உணவு கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டதன் காரணமாக கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் கணிசமான அளவு கறவை மாடுகள் உயிரிழந்துள்ளதாக பிதேச ஊடகவியலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

ஒக்டோபர் முதல் பெப்ரவரி வரையான காலப்பகுதியில் பாரம்பரிய கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மாட்டுத் தீவனத்திற்காகப் பயன்படுத்திய மயிலத்தமடு மேய்ச்சல் நிலங்களில் விவசாயிகள் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி நுழைய அரசாங்கம் அனுமதித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம் முன்னர் குற்றம் சுமத்தியிருந்தார்.

# நீதித்துறை ஒரு சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர்

## எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்

நீதித்துறை விசேடமாக ஒரு சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதை குறித்து நாங்கள் கவனம் எடுக்க வேண்டிய ஒரு நிலையிலே இருக்கிறோம் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சூரிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையில் இரண்டாம் மொழியான சிங்கள கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் - சுதுமலையில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில், இந்த கற்கை நெறியின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே. பிரேமராஜா அவர்களது தலைமையில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.




அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், முதன்முதலாக எங்களது நாட்டின் சரித்திரத்திலே நீதிபதி ஒருவர் தன்னுடைய உயிர் பாதுகாப்புக்காக, அதிலும் தான் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் எழுந்திருக்கின்ற அச்சுறுத்தலின் காரணமாக வெளியேறியுள்ளதாக இன்றைய பத்திரிகை செய்திகள் சொல்கின்றன.




இது நீதித் துறைக்கு ஏற்பட்டுள்ள ஒரு அச்சுறுத்தல். நாட்டில் உள்ள சுதாதீன நிறுவனங்களை பாதுகாக்கின்ற கடப்பாடு எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. அப்படியான மிகவும் முக்கியமான சுயாதீனமான நிறுவனமாக நீதித்துறையானது இருக்கிறது.

நீதித் துறையை பாதுகாக்கின்ற போது நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் செய்வதை நாங்கள் கண்டிக்க வேண்டும், தடுக்க வேண்டும். அதே வேளையிலே நீதித் துறைக்கு உள்ளேயே தவறுகள் இருந்தால் அதனை திருத்துகின்ற வகையிலே நாங்கள் செயற்பட்டுக் கொள்ள வேண்டும்.

நீதித் துறைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்ற போது மூன்று விதங்களிலே ஒரு விதமாக அவர்கள் செயற்படலாம். ஒன்று அந்த அச்சுறுத்தலை கணக்கெடுக்காது தாங்கள் செய்ய வேண்டியதை செய்து விடலாம்.

இரண்டாவது அப்படியான அச்சுறுத்தல் வந்தால் அவர்கள் ராஜினாமா செய்து அதில் இருந்து விலகி விடுவார்கள்.





மூன்றாவதாக, நீதிபதிகள் அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி, அதற்கு அடங்கி தங்களுடைய நடத்தையை அல்லது தீர்ப்பை மாற்றி மற்றவர்களுடைய கைப் பொம்மைகளாக மாறி இயங்குவது இவை அனைத்தும் தடுக்கப்பட வேண்டும்.

நீதித்துறையை பாதுகாப்பது என்பது அவர்கள் எது செய்தாலும் பாதுகாப்பது என்பது அல்ல. நீதிபதிகள் சுயாதீனமானதாக செயற்படுவதை நாங்கள் பாதுகாப்பது ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# குருந்தூர்மலை தமிழர்களின் கலாசார சொத்து – துரைராசா ரவிகரன் வலியுறுத்து

- நடராசா லோகதயாளன்

வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.



முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், குருந்தூர்மலை விடயம் தொடர்பில் 18.01.2021 அன்று தொல்லியல் அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவ் அகழ்வாய்வில் லிங்கம் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. குறித்த லிங்கம் தொடர்பாக வரலாற்று பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் குருந்தூர் மலையில் மீட்கப்பட்ட சின்னங்கள் 2300 ஆண்டுக்கு முற்பட்டவை என்பதை சின்னத்தில் உள்ள தமிழ் வரி வடிவ எழுத்துக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன என வெளிவந்திருந்தன.

குருந்தூர்மலை பேசப்படுகின்ற சின்னங்கள் பல்லவர் காலத்திற்குரியன என சிலர் கூறுகின்றனர். ஆனால் பல்லவர் காலத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை இவை அக்காலத்திற்கு முற்பட்டனவாகும்.

அங்கே செங்கற்களால் கட்டப்பட்ட கட்டிடங்கள் தெளிவாக தெரிகின்றது. அவை நாகர் காலத்தோடு தொடர்புடையவையாகும். நாகர்கள் வழிபட்ட சிவலிங்கங்கள் பனங்காமம், ஓமந்தை போன்ற இடங்களில் பெருமளவில் காணப்படுகின்றது. இங்கே காணப்படுவது சிவலிங்கம் என கூறுவது சால பொருந்தும்.

உறுதியாக கூறக்கூடியது என்னவென்றால் இது பழங்காலத்து லிங்க உருவம். லிங்க காலத்து ஆரம்ப வடிவமைப்பினை பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர்களின் கடவுளின் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம் சைவ சமய சின்னமாக அமைகின்றது என்ற கருத்தை பேராசிரியர் தெளிவாக வழங்கியுள்ளார்.

இவற்றையெல்லாம் கூற காரணம். சிங்களவர்களே ஆதிகாலம் தொட்டு இருந்ததென்று பறைசாற்றிகொண்டு இருக்கும் நேரத்தில் இங்கே தமிழர்கள் தான் இருந்தார்கள் தமிழர் பூர்வீக தாயகத்திலே சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தொல்லியல் ஆய்வாளர்கள் இதனை உறுதிபடுத்தி இருக்கும் போது தங்களுடைய கருத்துகளை திணித்து எங்களுடைய மதத்தை அழிக்கும் வேலைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் இவ்வாறான நிலை தான் இங்கே இருக்கிறது.

உறுதியாக சைவ வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட குருந்தூர் மலையில் ஆதிசிவன் ஐயன் ஆலயம் ஆதிகாலம் தொட்டு இருந்து வருகிறது என்பதனை இதனூடாக உறுதிப்படுத்துகின்றோம்.

காணி விடயங்களில் 12.05.1933 ஆம் ஆண்டு 78 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச் காணி தொல்லியல் ஆய்வுக்காக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உண்மை. இதன் பின்னர் 306 ஏக்கர் காணி இவர்கள் தொடர்ச்சியாக கேட்டு வந்த நிலையில் அவ்வளவு ஏக்கர் ஏன் எனவும் 5 ஏக்கர் காணியை எடுக்குமாறு கூறியதாக ஜனாதிபதி கூறியதாக ஊடகங்களில் அறியக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் 2013 ஆம் ஆண்டு வர்த்தமானியில் 229 ஏக்கர் காணி இன்னும் மேலதிகமாக ஒதுக்கப்பட்டதாகவும் அது தொல்பொருள் காப்பு பகுதி எனவும் விவசாயம் அங்கே மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படும் என்றும் கடந்த 2023.09.21 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டதாக ஊடகங்கள் ஊடாக அறியக்கூடியதாக இருந்தது.

தெய்வ நம்பிக்கை உள்ள இடத்தினை கொச்சைப்படுத்த முடியாது. பூர்வீக சைவ இடம் தான் என்பதனை உறுதியாக குறிப்பிடுவதோடு வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீக தாயகம். தமிழர்களின் சொத்தாக குருந்தூர் மலையை நாங்கள் பார்க்கின்றோம். குருந்தூர் மலையில் வெளிப்பட்ட லிங்கமும் அதனை உறுதிப்படுத்துகின்றது.

தற்போது ஒரு ஏக்கர் பௌத்தத்திற்காகவும், ஒரு ஏக்கர் சைவத்திற்காகவும், ஒரு ஏக்கர் பொது தேவைக்காகவும் என கடந்த 21 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது. அதுவும் மலை அடிவாரத்தில் வேறே இடத்தில் தருவதாக கூறுவதற்கு இவர்கள் யார்? என்ற வினாவினை நான் கேட்க விரும்புகின்றேன். உதாரணத்திற்கு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஒரு இடத்திற்கு கொண்டு சென்று வழிபடுங்கள் என்று இவர்கள் கூற முடியுமா?

ஏனென்றால் இது எங்களுடைய பூர்வீக தாயக சைவ வழிபாட்டுக்குரிய இடம். குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் இருந்த இடம்தான் எங்களுடைய வழிபாட்டுக்குரிய இடமே தவிர, இவர்கள் தாங்கள் திட்டமிடுவதற்கும் வேறு இடத்தில் ஆலயம் அமைக்க கூறுவதற்குமான இடங்கள் அல்ல. பூர்வீக இடத்தில் நாங்கள் வழிபட வேண்டும்.

கடந்த 27.01.2021 ஆம் ஆண்டு சூலம் உடைக்கப்பட்டுள்ளதனை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன். அத்தோடு 29 ஆம் திகதி சூலம் இல்லை என்பதையும் முறைப்பாடு மேற்கொண்டிருந்தேன்.

முல்லைத்தீவு பொலிஸார் நேரடியாக பார்த்து உறுதிப்படுத்தியும் சம்பந்தப்பட்ட யாரையும் கைது செய்யாமல் பொலிஸாரும் உடந்தையாக இருந்து எங்களுடைய வழிபாட்டு சின்னங்களை மறைப்பதற்கும், வழிபாடுகளை நிறுத்துவதற்குமான வேலைகளை தான் தொடர்ச்சியாக செய்து கொண்டு வருகிறார்கள் என்றார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4



# யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தொடர்சியாக இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கை

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தொடர்சியாக இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு ஒன்றுகூடி முக்கிய பல தீர்மானங்களை எடுத்துள்ளனர். இதன்போதே முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட்சியை நிலைநாட்டவும் ஏதுவாக எதிர்வரும் இரு வாரங்களுக்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது என தீர்மானித்துள்ளனர்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு,

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தால் எடுக்கப்பட்ட பணிப்பகிஸ்கரிப்பில் இணைவதுடன் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் முல்லைத்தீவு சென்று நீதிமன்றத்தின் முன்னால் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது.

நீ துறைக்கு ஏற்பட்ட இந்த அச்சுதலை கண்டித்து அடுத்து வரும் இரண்டு வாரங்கள் கறுப்பு நிறத்திலான முக்கவசங்களை அணிந்து கடமையில் ஈடுபடுவது.

தமிழ் கட்சிகளினால் மருதனார்மடம் முதல் யாழ்ப்பாணம் வரை குறித்த நீதிபதிக்கு எதிரான அச்சுறுத்தல்களைக் கண்டித்து 4ஆம் திகதி நடத்த இருக்கும் மனிதச் சங்கிலி போராட்டத்திற்கு ஆதரவை தருவதுடன் அதில் அனைத்து சட்டத்தரணிகளும் பங்கு கொள்வது.

நாளையும் நாளை மறுதினமும் சட்டத்தரணிகள் வடமாகாண நீதிமன்ற நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பதுடன் இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கை தொடர்பான விசேட பொதுக்கூட்டத்தினை எதிர்வரும் 4ஆம் திகதி நடாத்துதல்.

கௌரவ நீதிபதிக்கு ஏற்பட்ட அச்சுறுத்த தொடர்பில் பாரபட்சமற்ற உருய சுயாதீன விசாரணை செய்யப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்துலும் நீதித்துறை சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். போன்ற முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளனர்.



# வடமாகாணத்தில் மாணவர்கள் மட்டத்தில் இருந்து கிரிக்கெட் சர்வதேசமட்டத்திற்கு உயர்த்துவதே இலக்கு — ஸ்ரீதரன் கணேஷசமுர்த்தி

வடமாகாணத்தில் மாணவர்கள் மட்டத்தில் இருந்து கிரிக்கெட் சர்வதேசமட்டத்திற்கு உயர்த்துவதே இலக்கு என யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் பயிற்சி நிலைய தலைவர் டாக்டர் ஸ்ரீதரன் கணேஷசமுர்த்தி தெரிவித்தார்.

கிரிக்கெட் போட்டி தொடர்பாக ஊடகவியாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகசந்திப்பு இன்றுமாலை தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இப்போட்டியானது எதிர்வரும் 06,07,08 ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும், வவுனியாவில் நோத் ஸ்டார் செற்றிலும் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தனியார் கல்வி நிறுவனம், பாடசாலை மாணவர்கள் மாவட்ட சங்கங்கள் ஊடாக பெருமளவிலான ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். இக் கிரிக்கெட் போட்டியில் நூறுக்கும் நூற்றி ஐம்பது இடைப்பட்ட மாணவர்களாக தெரிவு செய்யப்படவிக்கின்றனர். மேலும் அடிமட்டத்தில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கான பயிற்சிகளும் வழங்கி வருகின்றோம்.

மாவட்ட கிரிக்கெட் சங்கங்கள் ஊடாக கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றது இப்பயிற்சியானது காலை 09 மணிக்கு ஆரம்பமாகும். இவ் பயிற்சியினை ஆரம்பித்துவைப்பதற்கு இலங்கை கிரிக்கெட் பயிற்சி நிலைய தலைமை அதிகாரி சமிந்தவாஷ் கலந்துகொள்ளார் என்றார்.

# சட்டம் ஒழுங்குகளை கவனத்தில் கொள்ளாத மக்களுடன் நிர்வாகம் செய்ய வேண்டியுள்ளது

## யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்



நாட்டின் சட்ட ஒழுங்குகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளாத விசித்திரமான மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்குவதாக அங்கலாய்ப்பினை வெளியிட்ட யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்ட விரோதச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பான தீர்மானமிக்க விசேட கலந்துரையாடல் 02.10.2023 அன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில், இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த மாவட்ட செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எத்தகைய சவால்கள் ஏற்பட்டாலும் மாவட்டத்தின் சட்ட ஒழுங்குகளை பேணிப் பாதுகாக்கும் வகையில் நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாட்டில் எங்கும் இல்லாத வகையில் சட்டத்துக்கு மாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒரு பகுதியினர் பழக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மரக்கறி சந்தைகளில் விவசாயிகளின் உற்பத்தி பொருட்களுக்கு நிறைக் கழிவு முறைமை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரமே காணப்படுகின்றது. அதேபோன்று பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற ஆட்டோக்கள் கட்டண மீற்றர் பொருத்தியிருக்க வேண்டுமென்பதும் நாடளாவிய ரீதியில் காணப்படும் சட்ட ஏற்பாடாக இருக்கின்ற போதிலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு இங்குள்ளவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.


நாட்டினுடைய சட்ட திட்டங்களை அனைவரும் ஏற்றுக் கொண்டு நடக்க தவறும் பட்சத்தில் அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்று மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் சட்ட விரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது, மணல் அகழ்விற்கு பொருத்தமான இடங்களில் இருந்து மணல் விநி யோகத்தினை மேற்கொள்ளவ தற்கு காணப்படும் சவால்களைக் கட்டுப்படுத்துவது, சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் போதைப் பொருள் பரவலைக் கட்டுப் படுத்துவது ஆட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் செயற்பாடுகளை விரைவுபடுத்துவது உட்பட்ட பல்வேறு விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

# இங்கிலாந்தின் கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் பங்கெடுத்த கஜேந்திரகுமார் எம்.பி!







2023 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி நடைபெற்ற இங்கிலாந்தின் கன்சர்வேடிவ் கட்சி மாநாட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்து கொண்டார்.

அத்துடன் முக்கிய தலைவர்களுடன் பல சந்திப்புகளை நடத்தினார். தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் (APPG-T) கன்சர்வேடிவ் உறுப்பினர்களையும் சந்தித்தார்.



தமிழர்களுக்கான கன்சர்வேடிவ் வரவேற்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராகப் பங்கேற்று, அங்கிருந்த கன்சர்வேடிவ் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆலோசகர்கள் மற்றும் செயற்பாட்டாளர் கள் முன்னிலையில் உரையொன்றையும் நிகழ்த்தினார்.

# சிறுபான்மையினரின் நீதிபதியினை மத்திய பெரும்பான்மையினர் அடக்குகின்றனர்

## - க.வி.விக்கினேஸ்வரன்



தம் இனம் சார்ந்த தீர்ப்புக்களை வழங்கமுடியாமல் போய்விடும் என்பதற்காகவே சிறுபாண்மையின நீதிபதியினை மத்திய பெரும்பான்மையினர் அடக்குகின்றனர் என தமிழ் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான க.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்டதற்கு நீதிவழங்ககோரி யாழ்ப்பாணம் மருதனார் மடத்தில் இருந்து யாழ்ப்பாண நகர் வரை இடம்பெற்ற சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டபின் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கையில் அவர்இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில்,

நீதிபதிகளின் தீர்ப்புக்கள் பிழையாக இருக்கும் பட்சத்தில் அதனை மேல்நீதி மன்றத்திற்கு கொண்டு வரலாம். அதனை விடுத்து தனிப்பட்ட ரீதியாக அச்சுறுத்தல் செய்வது அது நீதித்துறைக்கும் ஆகாது. நாட்டின் வருங்காலத்தினை பாதிக்கும்.

சிறுபான்மையினரின் நீதிபதியினை இவ்வாறு அச்சுறுத்துவது சிறுபான்மையினம் சம்பந்தமான உண்மையான சரியான தீர்ப்புக்களை கொடுக்க முடியாமல் போய்விடும். தம் இனம் சார்ந்த தீர்ப்புக்களை வழங்கமுடியாமல் போய்விடும்.

இவ்வாறு அச்சுறுத்துவது பெரும்பான்மையினரின் அடக்குமுறையினை காட்டுகின்றது. அரசாங்கம் இதனை உரியவகையில் நிறுத்தவேண்டும் என்பதுடன் இதற்கு சரியான முறையில் தீர்ப்புக்களை வழங்கவேண்டும் - என்றார்.

# மொழி என்பது நாட்டின் பொருளாதாரத்தையும், வளர்ச்சியையும் நிலைத் தன்மையையும் உருவாக்குகின்ற ஒரு விடயம் — வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



மொழி என்பது மிக முக்கியமானது. மொழி என்பது இந்த நாட்டின் பொருளாதாரத்தையும், இந்த நாட்டின் வளர்ச்சியையும் இந்த நாட்டின் நிலைத் தன்மையையும் உருவாக்குகின்ற ஒரு விடயமாக இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

சூரிய நிறுவகத்தின் அனுசரணையில் இரண்டாவது மொழிக் கற்கையை நிறைவு செய்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் - சுதுமலை பகுதியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் வைத்து சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது, குறித்த சிங்கள கற்கை நெறியின் வடக்கு மாகாண இணைப்பாளர் தே. பிரேமராஜா தலைமையில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையை பொறுத்தவரை மூன்று இன் மக்கள் வாழுகின்றோம். இரண்டு மொழிகள் மட்டும்தான் இருக்கின்றன. இருந்தாலும் அதனூடாக நாங்கள் பல்வேறு சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்திருக்கின்றோம்.

அதாவது தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியையும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியையும் கற்பிக்கின்ற செயற்பாடானது முக்கியமான, ஒரு இன்றியமையாத செயற்பாடாக நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் இந்நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாகிறது

## - நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்



நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் இந்நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குறியாகிறது அங்கஜன் எம்.பி.

தனக்கு ஏற்படுத்தப்பட்ட உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக தனது பதவிவை துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜா அறிவித்துள்ளமையானது, நாட்டின் நீதித்துறை எத்தகைய சவால்களை சந்தித்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

29-09-2-23 அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் உள்ளதாவது,

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பான நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் மற்றும் கள விஜயங்கள் மீதான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நீதிபதி அவர்களுக்கு விடுக்கப்பட்டு வந்துள்ளது இதனூடாக வெளிப்பட்டுள்ளது. சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதிக்கட்டமைப்பை ஆட்டங்காணச் செய்த குறித்த அச்சுறுத்தல்வாதிகளை ஜனநாயக மாண்பற்றவர்களாகவே கருத வேண்டியுள்ளது.

குருந்தூர்மலை வழக்கு தொடர்பாக நீதிபதி சரவணராஜா அவர்கள் கடந்த 04.07.2023 அன்று குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை சுட்டிக்காட்டி 07.07.2023 அன்றைய பாராளுமன்ற உரையிலும், தொடர்ந்து பொதுவிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக, பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கடுமையான அவதூறுகளை வெளிப்படுத்தியிருந்தார்.

பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியை தருகிறது. குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்தும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமையானது மோசமான அதிகார துஸ்பிரயோகமாக அமைகிறது.

அத்துடன் நீதிபதிக்கான பொலிஸ் பாதுகாப்பு அண்மையில் குறைக்கப்பட்டிருந்ததோடு, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக தன்னைக் கண்காணித்து வந்திருந்ததாகவும் நீதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் (Court of Appeal) தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளதாகவும், இவற்றின் அடிப்படையில் தனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் மிகவும் நேசித்த தனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா அறிவித்துள்ளார்.

இந்த பதவி துறத்தலானது, பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்ற கடும்போக்குவாதத்தை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. அந்த கடும்போக்குவாதத்துக்கு நீதித்துறையும் விலக்கல்ல என்ற துர்ப்பாக்கிய நிலையை கண்டு நான் பெரிதும் கவலையடைந்துள்ளேன்.

தனிநபர்களாலும், அரச கட்டமைப்புகளாலும் வஞ்சிக்கப்படும் மக்கள் சட்டத்தை நம்பி, அதை நடைமுறைப்படுத்தும் நீதித்துறையை நாடுகிறார்கள். நீதித்துறை ஒன்றே சுயாதீனமாக செயற்பட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இத்தனை காலமும் இருந்து வந்துள்ளது.

ஆனால் நீதித்துறையையும் வளைத்துப்போடும் வகையில் சிலர் செயற்படும்போது அதை தடுக்காமல் நீதித்துறைக்கு காவலாக இருக்க வேண்டியவர்களே நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும் போது, நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சம் மக்களிடம் உருவாக்குகிறது.

ஏற்கனவே இந்நாட்டின் சட்டங்கள், வடக்கு - தெற்கு என்ற பேதங்களை பார்க்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் இந்த சம்பவமானது அக்குற்றச்சாட்டுகளை இன்னும் வலுச்சேர்த்துள்ளது.

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பணிப்புரைகளையே மீறிச் செயற்படக்கூடிய தரப்புகள் இந்நாட்டை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநாயக மாண்புகள் தெரியாத, அவற்றை மதிக்காத அரசியல்வாதிகளாலும், நாட்டில் இன ஒற்றுமையை சிதைத்து அதில் இலாபம் பார்க்க நினைக்கும் தரப்புகளாலும் முன்னெடுக்கப்படும் இத்தகைய செயற்பாடுகளை தடுத்துநிறுத்தி, சுயாதீனமான சட்ட, நீதித்துறையின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பணிகளை இச்சந்தர்ப்பத்திலாவது நாம் ஆரம்பிக்க வேண்டும் - என குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பை சொல்லுகின்ற நிலையில் இருக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட்டுள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

- மன்னார் நிருபர் (29-9-2023)

தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பை சொல்லுகின்ற நிலையில் இருக்கக் கூடாது. அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத் தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்பொழுது வெளிப்படையாக தெரிகிறது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (29) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையிலேயே இந்த நாட்டில் நீதித்துறை நேர்மையான முறையாக இருந்ததா என்ற கேள்வி எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி. சரவணராஜா தன்னுடைய பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவருடைய கருத்துக்களை பார்க்கின்ற போது சட்டமா அதிபர் கூட இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார் என்ற செய்தி அதில் அறியக்கூடியதாக உள்ளது. நீதித்துறை எங்கே செல்கிறது? தமிழர்களுடைய பக்கம் அது தீர்ப்பு என்பது ஒரு நடுநிலையானது.

அவர் தமிழ் பிரதேசத்தில் இருந்து கொண்டிருக்கிறார். ஒருவர் நியாயமான தீர்ப்பை வழங்குகின்ற ஒரு நிலையிலேயே இருந்து கொண்டிருக்கும் நிலையில் தென்னிலங்கையிலே இனவாதமாகவும், அவர் ஒரு தமிழராகவும் பார்க்கப்படுகின்ற நிலை காரணமாக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.இதை மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

நீதித்துறை என்பது நியாயமான வகையில் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பாக உள்ளது. மக்கள் நீதித்துறையை நம்பித்தான் இன்றைக்கு நீதிமன்றத்திற்கு சொல்கிறார்கள்.

ஆனால் இப்பொழுது இருக்கின்ற நிலையை பார்க்கும் போது தமிழ் நீதிபதிகளுக்கு அவர்கள் நியாயமாக செயல்படுகின்ற வாய்ப்பை தடுக்கின்ற அவர்களை அச்சுறுத்துகின்ற ஒரு செயல்பாடாக தான் இந்த நீதிபதியின் ராஜினாமா செய்தி கூறுகிறது.

ஆகவே தமிழ் நீதிபதிகள் நியாயமான தீர்ப்பை சொல்லுகின்ற நிலையில் இருக்கக் கூடாது. அவர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகின்ற அல்லது வேறு யாரும் சொல்கின்ற தீர்ப்பைத் தான் வாசிக்க வேண்டும் என்ற நிலை இப்பொழுது வெளிப்படையாக தெரிகிறது. ஆகவே நீதித்துறைக்கு விட்ட சவாலாக அமைந்துள்ளது.

ஆவே நிதியமைச்சர் இந்த விஷயத்தை ஆராய்ந்து இது உண்மையாக அதாவது அவருடைய ராஜினாமாவில் அழுத்தம் உயிர் அச்சுறுத்தல் இருக்குமாக இருந்தால் நீதி அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்.



ஏனென்றால் அவர் அமைச்சராக இருக்கும் போது ஒரு நீதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. எனவே இச் செயற்பாடுகளை வன்மையாக கண்டிக்கின்றோம். பாராளுமன்றத்தில் ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

சில வேளைகளில் எல்லா எங்களுடைய எதிர்கட்சியில் இருக்கும் தமிழ் பேசுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இதில் உள்ளடக்கி என்ன செய்யலாம் என்று நாங்கள் ஆராய்ந்து நிச்சயமாக நீதித்துறைக்கு விடுக்கப் பட்டிருக்கின்ற இந்த சவாலை முறியடிக்க வேண்டும்.

ஏனென்றால் நீதி நடுநிலையானது. அது யாருக்கும் தலை சாய்வதில்லை. அந்த வகையில் எங்களுடைய நீதிபதி அவர்கள் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளார்.

அதற்காகவே இத்தனை அச்சுறுத்தல்களும்.புத்த பிக்குகள் நீதித்துறையை மதிப்பதில்லை என்பது இந்த விடையத்திலே பார்க்கக் கூடியதாக உள்ளது.

இதில் குறுந்தூர் மலை தீர்ப்பு என்பது பல அழுத்தங்களை கொடுக்கும் வகையில் நீதிபதி அவர்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இதில் புத்த பிக்குகளின் கூட்டமும் அடங்குகின்றது என எண்ணுகின்றேன். ஏன் என்றால் இந்த நாட்டை ஆளுகின்ற புத்த பிக்குகளா? என்ற சந்தேகம் எழுகின்றது.

எனவே இந்த விடயத்தில் நாங்கள் அனைத்து நீதிபதிகளையும் காப்பாற்றுகின்ற பொறுப்பு எங்களுடைய மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே தீர்ப்பு நியாயமாக வழங்கப்பட வேண்டும் என்றால் நீதித்துறைக்கு தலைக்குனிவை ஏற்படுத்தி உள்ளவர்கள் தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.


சட்டமா அதிபரின் அழுத்தம் உள்ளதாகவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். எனவே அவரும் ராஜினாமா செய்வது சிறந்தது என கருதுகிறேன். எனவே நாங்கள் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதன் ஊடாகவே நீதித்துறையை நடு நிலமைக்கு கொண்டு வர முடியும்.

எனவே நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்,மற்றும் அவர் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்கின்ற அளவிற்கு மிக மோசமான அச்சுறுத்தல் இருந்ததினால் தான் அவர் ராஜினாமா செய்துள்ளார்.

ஜனாதிபதி இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.தற்போதைய நீதியமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமூக ஊடகங்களுக்குக் கடிவாளம்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



சமூக ஊடகங்கள் வாயிலாக போலியான செய்திகளைப் பரப்புதல், அவதூறு பரப்புதல், தனி மனிதர்களை இலக்கு வைத்துத தாக்குதல் நடத்துதல், அகௌரவத்தை ஏற்படுத்துதல், வெறுப்பு பேச்சுக்களைப் பேசுதல் உள்ளிட்ட செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை அவசியமாக உள்ளது. இதன்மூலம் சமூக ஊடகங்களையும் எதிர்கால சமூகத்தினையும் பாதுகாக்க முடியும் என்று அரசாங்கம் கருதுகின்றது. அந்த அடிப்படையில்தான் நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம் வரையப்பட்டுள்ளது என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கூறியுள்ளார். நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் அண்மையில் அரச வருத்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாகவே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஆனால் அமைச்சர் கூறுவதில் உள்ள அடிப்படை முரண் என்னவென்றால், நாட்டின் அதி உயர் சட்டமன்றம் ஆகிய நாடாளுமன்றம் தமிழ் மக்களுக்கு எதிரான பொறுப்பு பேச்சைப் பாதுகாக்கும் ஒரு களமாக காணப்படுகின்றது என்பதுதான். அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தன் பதவியைத் துறந்து விட்டு நாட்டை விட்டுச் சென்று விட்டார். அவரை நாடாளுமன்றத்தில் வைத்து சரத் வீரசேகர இரண்டு தடவைகள் கீழ்த்தரமான வார்த்தைகளால் அவமதித்திருக்கிறார். நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற மறைவில் நின்றபடி சரத் வீரசேகர அவ்வாறு கூறினார். அவர் நாடாளுமன்றத்திற்கு வெளியே வந்து அவ்வாறு கூறட்டும் பார்க்கலாம் என்று சட்டத்தரணிகள் சங்கம் சில வாரங்களுக்கு முன் சவால் விட்டது.

நாடாளுமன்ற சிறப்புரிமையை ஒரு கவசமாகப் பயன்படுத்தி வெறுப்புப் பேச்சுக்களை உமிழ்வது சரத் வீரசேகர மட்டுமல்ல, கடந்த பல தசாப்தங்களாக இலங்கை நாடாளுமன்றம் எனப்படுவது தமிழ் மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களை கக்கும் ஓரிடமாகத்தான் காணப்படுகிறது. வெறுப்புப் பேச்சு தொடர்பாக ஐநா நிபுணர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்... "யூத இனப்படுகொலை எனப்படுவது நச்சு வாயு கிடங்குகளில் இருந்து தொடங்கவில்லை. அது வெறுப்புப் பேச்சுகளில் இருந்தே தொடங்கியது" என்று.

யூத இனப்படுகொலை மட்டுமல்ல மியான்மர், ருவண்டா போன்ற இடங்களில் நிகழும் இனப்படுகொலைகள் வெறுப்புப் பேச்சுக்களால் தூண்டப்படுகின்றன என்று ஐநா சுட்டிக்காட்டுகின்றது.

வெறுப்புப் பேச்சுக்களை இலகுவாகப் பரப்பக்கூடிய ஒரு களமாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன என்பது உண்மை. ரோகியங்கா முஸ்லிம்களுக்கு எதிரான படுகொலையில் ஐநா முகநூலை குற்றம் சாட்டியதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

சமூக ஊடகளுக்கு இரண்டு முக்கியத்துவங்கள் உண்டு.முதலாவது, தகவல் உடனடியாக பகிரப்படும். இரண்டாவது, சாதாரண மக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புகளை அவை வழங்குகின்றன.

ஆனால் சாதாரண மக்கள் அவ்வாறு தங்களுக்கு தோன்றியதை எல்லாம் பகிரங்கமாக வெளிப்படுத்தும் ஒரு போக்கினால் நிபுணர்கள் சமூக ஊடகங்களை விட்டு வெளித்தள்ளப்படுகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. எனது நண்பர் ஒருவர் சொல்லுவார்... தனக்குத் தெரியாத ஒன்றைப் பற்றிக் கருத்துக்கூறும் துணிச்சலை முகநூல் வழங்குகின்றது என்று. உண்மை. பாரம்பரிய ஊடகங்களைப் பொறுத்தவரை கருத்தைத் தெரிவிப்பதற்கு ஒரு முதிர்ச்சி வேண்டும்தகைமை வேண்டும். ஒரு காலம் பொதுவெளியில் கருத்தைத் தெரிவிக்கும்போது அவைக்கூச்சம் இருந்தது; அவையடக்கம் இருந்தது. ஆனால் சமூக சமூக ஊடகங்களில் அவை அரிதாகி விட்டன. இணையத் தொடுப்பு இருந்தால் போதும், ஒரு பேக் ஐடியை உருவாக்கிவிட்டு யாரும் எந்த மொட்டைக் கடிதத்தையும் சமூக ஊடகங்களில் உடனடியாகப் பிரசுரிக்கலாம் என்ற நிலைமை அதிகரித்துவிட்டது. இதனால் அபிப்பிராயங்கள் உடனடியாகவும் அதிகரித்த அளவிலும் பகிரப்படும் வாய்ப்புகள் அதிகரித்துவிட்டன.

சாதாரண ஜனங்கள் எல்லா விடயங்களிலும் அறிவுபூர்வமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்திப்பார்கள் என்று இல்லை. அவர்கள், தாம் சார்ந்த இனம், மதம், மொழி, பிரதேசம், பால் போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டு கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள். இவ்வாறு அறிவு சாராத முதிர்ச்சியற்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகையில் அவை பல சமயங்களில் இன, மத, நிற, மொழி, பிரதேச, பால் வேறுபாடுகளை தூண்டத்தக்கவைகளாக காணப்படுகின்றன. கும்பல் மனோநிலை என்பது அநேகமாக புத்திசாலித்தனமானதாகவோ அல்லது அறிவுபூர்வமானதாகவோ நிதானமானதாகவோ இருப்பது குறைவு. இதனால் சாதாரண ஜனங்கள் கும்பல் மனநிலையோடு பகிரும் கருத்துக்கள் இன, மத, மொழி, நிற, பிரதேச, பால் வேறுபாடுகளைத் தூண்டுபவைகளாக அமைந்து விடுவதுண்டு. மியான்மரில் ஆபிரிக்காவில் அவ்வாறு சமூகஊடகங்கள் இன முரண்பாடுகளை, வெறுப்பைத் தூண்டியதாக ஐநா குற்றம் சாட்டுகின்றது

பல ஆண்டுகளுக்கு முன் அம்பாறையில் இருந்து தொடங்கி கண்டி வரையிலும் பரவிய முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளின்போது அரசாங்கம் சமூக வலைத்தளங்களை முடக்கியதை இங்கு சுட்டிக்காட்டலாம். மேலும் வலதுசாரிப் போக்கு அதிகமுடைய தலைவர்கள் தமது சமூக ஊடகங்களுக்கு ஊடாக இன, மதமொழி, நிற பிரதேச உணர்வுகளைத் தூண்டி, அவற்றை வாக்குகளாக அறுவடை செய்கிறார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான டிரம்ப் தன்னுடைய ருவிட்டர் தளத்தை அவ்வாறு பயன்படுத்தியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இவ்வாறு சமூக ஊடகங்கள் சமூகங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தூண்டும் கருத்துக்களையும் வலதுசாரி கருத்துக்களையும் உடனடியாகவும் அதிகமாகவும் பகிரும் வாய்ப்புகளைக் கொண்டிருப்பதனால், அவை வெறுப்பு பேச்சுக்களை அதிகமாக பகிர்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால் இதை இவ்வாறு எழுதுவதன்மூலம் இக்கட்டுரையானது அரசாங்கத்தின் உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டத்தை ஆதரிப்பதாக வாசகர்கள் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. சமூக ஊடகங்களை நிதானத்திற்கு கொண்டு வருவது என்பது ஒரு விதத்தில் சட்ட விவகாரம்தான். ஆனால் அதைவிட ஆழமான அர்த்தத்தில் அது பண்பாட்டு ரீதியிலானது. அதை சட்டரீதியாக அணுக முற்பட்டால் ஒரு கட்டத்தில் அது கருத்து சுதந்திரத்தின் குரல்வளையை நசுக்குவதில் போய் முடியும். எனவே இதுவிடயத்தில் ஆழமான கலந்துரையாடல்கள் தேவை. அவற்றைக் கட்டுப்படுத்தும் பொழுது அதை ஒரு சட்ட விவகாரமாக மட்டும் பார்க்காமல், பண்பாட்டு விவகாரமாகவும் பார்க்க வேண்டும். தொடுதிரைக்கும் விரலுக்கும் இடையில் இருப்பது வெறுமனே சட்ட வெளி மட்டுமல்ல, அது பொறுப்புக்கூறப் பழக்கப்படுத்தப்பட்ட ஒரு பண்பாட்டு வெளியாகவும் இருக்க வேண்டும். இந்த விளக்கத்தின் பின்னணியில் இனி உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபைப் பார்க்கலாம்.

"நிகழ்நிலை காப்பு ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கும்: இலங்கையில் நிகழ்வு பற்றிய குறித்த சில கூற்றுக்களின் நிகழ்நிலை தொடர்பாடலைத் தடை செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும்தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள் மட்டும் மெய்யுறுதிப் படுத்தப்படாத நிகழ்நிலை கணக்குகளின் பயன்பாட்டை தடுப்பதற்கும் இலங்கையில் தடை செய்யப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிகழ்நிலை அமைவிடங்களை அடையாளம் கண்டு வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கும் நிகழ்வு பற்றிய பொய்யான கூற்றுக்களின் தொடர்பாடலுக்கு நிதியளித்தல் மற்றும் வேறு ஆதரவை ஒடுக்குவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்..." என்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் நிகழ்நிலை காப்பு ஆணைக் குழு ஒன்றை ஜனாதிபதி நியமிப்பார். அதில் ஐந்து பேர் இருப்பார்கள். அந்தக் குழு சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் விடையங்களைத் தவறானவை என்று கருதினால் அப்பதிவுகளை பிரசுரித்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும். அணைக்குழுவின் தீர்ப்புக்கு எதிராக, அல்லது அறிவுறுத்தல்களுக்கு எதிராக, இணைய சேவை வழங்குனர்களோ அல்லது பயனாளிகளோ நீதிமன்றத்தை நாட முடியாது.

இணையத் தளங்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு அல்லது நிறுத்துமாறு இணைய சேவை வழங்குனர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கவும் இணைய சேவை வழங்குனர்களுக்கு எதிராகவோ அல்லது சமூக ஊடகங்களுக்கு எதிராகவோ நடவடிக்கை எடுக்கவும் மேற்படி ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

எனவே, இச்சட்டமூலமானது பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை பறிக்கவும் மாற்றுக் கருத்துக்குரியவர்களை ஒடுக்கவும் பயன்படுத்தப்படும் அபாயம் காணப்படுவதாக சுதந்திர ஊடக இயக்கம் கருத்து தெரிவித்துள்ளது. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவை ஒரு சுயாதீன ஆணைக் குழு என்று அழைப்பது நியாயமானதா என்றும் சுதந்திர ஊடக இயக்கம் கேள்வி எழுப்பியுள்ளது. மேலும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களுக்கு பரந்த விளக்கங்கள் கொடுக்கப்படலாம் என்பதால், அதைப் பயன்படுத்தி மாற்றுக் கருத்துக்களை முடக்குவதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்படும். மேலும் சமூக ஊடக வசதிகளை வழங்கும் இணையத் தளங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உத்தேச சட்டமூலம் கூறுகின்றது. இதனால் பதிவு செய்யப்படாத சமூக ஊடகத் தளங்களை இந்நாட்டு மக்கள் இழக்கும் ஆபாயம் காணப்படுகிறது என்றும் சுதந்திர ஊடக இயக்கம் கருத்து தெரிவித்துள்ளது.

மேற்கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால், ஒன்று தெளிவாகத் தெரிகிறது. உத்தேச சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், சமூக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்களுக்காக அரசாங்கம் சேவை வழங்குனர்களையும் பயனர்களையும் சட்டரீதியாகத் தண்டிக்க முடியும். இது சமூக வலைத்தளங்கள் மற்றும் கைபேசிச் செயலிகள் மூலம் பகிரப்படும் தகவல்களை பெருமளவுக்கு கட்டுப்படுத்தும். அது அதன் தர்க்கபூர்வ விளைவாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் கழுத்தை நெரிக்கும்.

எனவே அண்மையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் ஆகிய இரண்டும் அவற்றின் இறுதி விளைவுகளைப் பொறுத்தவரை கருத்து சுதந்திரத்தையும் போராடும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தக் கூடியவை. அதாவது அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் எழுச்சிகளை கட்டுப்படுத்தும் நோக்கம் இந்த சட்டமூலங்களில் உண்டு.

அரசாங்கம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு மேற்கு நாடுகள் இந்தியா சீனா போன்றவற்றிலும் உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் போன்றவற்றிலும் தங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில், இச்சட்டமூலங்கள் குறித்து நாட்டில் விவாதிக்கப்படுகிறது. இவ்வாறு உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியும், மேற்கு நாடுகள் ஜப்பான் போன்றவற்றில் தங்கியிருக்கும் ஒரு காலகட்டத்தில், இது போன்ற சட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த விளைகிறது என்றால், அதன் பொருள் என்ன?

அடுத்த ஆண்டு இறுதிக்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். ஜனாதிபதி அவருடைய அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் எதிர்பாராமல் கிடைத்த வாய்ப்பைக் கைவிடத் தயாரில்லை.எனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இடையில் நாட்டை யாரும் குழப்பி விடக்கூடாது என்பதற்காகத்தான் அவர் இது போன்ற சட்டங்களை கொண்டு வருகிறார்.

கடந்த ஆண்டு நிகழ்ந்த மக்கள் எழுச்சிகளை பெருமளவுக்கு ஒருங்கிணைத்தது சமூக வலைத்தளங்களை என்று நம்பப்படுகிறது. மீண்டும் அப்படி நடக்கக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு தான் நிகழ்நிலை காப்புச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. அதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்கள் பரவுவதை தடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம். மாறாக, வெறுப்பு பேச்சை தடுப்பது அல்ல.வெறுப்பு பேச்சைத் தடுப்பது என்றால் அதை முதலில் நாடாளுமன்றத்தில் இருந்து தொடங்க வேண்டும். எந்த நாடாளுமன்றம் வெறுப்பு பேச்சுக்கு எதிரான நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறைவேற்றப் போகின்றதோ, அதே நாடாளுமன்றத்தில் முதலில் வெறுப்பு பேச்சை நிறுத்த வேண்டும்.

### வீணாவின் கவிக்கணை

வாழ்ந்தோர் கெட்டோர்
மட்டுமல்ல,
சிறியோர் பெரியோர்
என்று எவருக்குமே
பிறப்பும் இறப்பும்
ஒருமுறை மட்டுமே,
பிறக்கையில் குழந்தை
என்பதும்,
இறந்த பின் பிணம்
என்பதும்,
உலக வழக்கே,
இதை நாம் ஒவ்வொருவரும்
உணர்ந்த பின்னரே
ஒழிந்திடும் ஜாதிகளும்,
மதங்களும், பொறாமையும்,
பாகுபாடுகளும் மனிதரிடையே!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா் நீதித்துறையை மேலாதிக்க சிந்தனைக்குள் புகுத்த முனைந்தால் நெருக்கடிகளே ஏற்படும்" — மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் கண்டனம்!



- மன்னார் நிருபர் (02-10-2023)

நீதித்துறைக்கு ஏற்படுத்தப்படும் அழுத்தங்களால், சர்வதேச உதவிகளை நம்பியுள்ள நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய நெருக்கடிகள் ஏற்படலாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கவலை தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் இராஜினாமா குறித்து அவர் 02-10-2023 அன்று விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

"மேலாதிக்கச் சிந்தனையில் சில அரசியல்வாதிகள் இன்னும் செயற்படுவதையே நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் மீதான அழுத்தங்கள் புலப்படுத்துகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஏற்பட்டுள்ள இழுபறிகள், வங்குரோத்துக்குச் சென்றுள்ள நிதி நிலைமைகளால் நாட்டின் மீது சர்வதேசத்தின் கவனம் குவிந்துள்ள சூழலிது. இவ்வாறுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் கடன் நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலும் சர்வதேசம் திருப்தியில் இல்லை. பல்வகையான பொறிக்குள் நாடுள்ளபோது அரசியல்வாதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷகளுக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துவதனூடாகவே சர்வதேசத்தின் அபிமானத்தை வெல்ல முடியும்.

ஆணைக்குழுக்களை நிறுவுதல், அரசியலமைப்பில் திருத்தம் செய்தல் என்பவை கண்துடைப்புக்காகவா செய்யப்படுகிறது என்ற சந்தேகங்களைக் கிளறும் வகையிலே சிலரின் செயற்பாடுகள் உள்ளன. பாராளுமன்ற நிலையியற் கட்டளையையும் மீறி பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தெரிவித்த கருத்துக்கள், நீதித்துறையை பாரபட்சத்துக்குள் புகுத்துவதற்கான முயற்சியா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

அதிகாரவர்க்கத்துக்குள் அல்லது பெரும்பான்மை விருப்புக்குள் நீதிமன்றங்களையோ அல்லது அரச நிர்வாகத்தையோ கொண்டுவர முயல்வது ஆரோக்கியமாக அமையாது. முல்லைத்தீவு நீதிபதிக்கு நடந்த கதிபோன்று எவருக்கும் நடைபெறக்கூடாது. அரசாங்கம் இதற்கு உத்தரவாதம் வழங்க வேண்டும்.

நிதி மற்றும் நீதித்துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். இல்லாவிடின் பாரிய நெருக்குதல்களுக்கு நாடு உள்ளாவதை தவிர்க்க முடியாது போகும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# திருமலை இலுப்பைக்குள விகாரை அமைப்பு அரச சர்வாதிகாரம்

திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் தமிழர்கள் முழுமையாக வாழும் இடத்தில் மக்களின் எதிர்ப்பின் மத்தியில் அமைக்கப்படும் விகாரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன விரோத செயற்பாட்டின் தொடர்ச்சியாக அரச இயந்திரத்தால் முன்னெடுக்கப்படுகின்றது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் உள்ளதாவது,

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பத்தில் இந்த விகாரை அமைப்பு இனமுரண்பாடுகளை உருவாக்க கூடும் என்பதால் அதனை தடுத்தார். ஆனால் பின்னர் அவரை மீறி சட்டவிரோதமாக இரவோடு இரவாக விகாரையின் பெயர்ப்பலகை நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது. இதற்கு நியாயம் கேட்டு அகிம்சை வழியில் போராடிய மக்களை நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்று விரட்டியுள்ளனர். காவல்துறையினர் அத்துடன் ஊடகவியலாளர்களை அனுமதிக்காது தடுத்துள்ளனர்.

வெளிநாடுகளுக்கு சென்று இன நல்லிணக்கம் பற்றி பேசும் ரணில் அரசாங்கம் உள் நாட்டில் அதற்கு எதிரான இன முரண்பாடுகளை அரச இயந்திரத்தின் உதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தீவிரப்படுத்தி வருகின்றனர் மட்டக்களப்பு மாவட்ட மேச்சல் தரை நிலங்களை அபகரித்தல் குருந்தூர் மலை விவகாரம் திருமலை இலுப்பைக்குள விகாரை அமைப்பு என நீண்ட பட்டியல் தமிழர்களின் இருப்பை கபளீகரம் செய்ய அரச இயந்திரத்தினால் திட்டமிட்டு மேற் கொள்ளப்படுகின்றன.

வடக்கு கிழக்கில் நீதிமன்றங்களின் சுயாதீனம் அரச தலையீடு காரணமாக கேள்விக்குள்ளான நிலையில் நல்லிணக்கம் என்ற வெற்று வார்த்தை அத்துமீறிய விகாரைகளை அமைப்பதன் மூலம் இனவாத கோர முகம் தமிழ் மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளது. அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிவில் நிர்வாகம் பெயரளவில் இயங்க தென்னிலங்கை அரச நிர்வாகமும் பௌத்த பிக்குகளும் தாம் நினைத்ததை சட்ட எல்லையை தாண்டி அரங்கேற்றுகின்ற நிலை உருவாகியுள்ளது இது தமிழர் பிரதேசங்களில் அரச சர்வாதிகாரமாக மாறியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தின் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சுற்றுச்சூழல் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை மண்டபத்தில், இயக்குனர் அருட்பணி ச. இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர் தினத்திற்கான "இயற்கையோடு இணைந்த நம வாழ்வு" எனும் தலைப்பிலான ஓவியப் போட்டி மூன்று பிரிவுகளில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து சமாதான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுவர் களுக்கான மகிழ்வூட்டும் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யுனிசெப் நிறுவன இணைப்பாளர் திருமதி. சர்மினி அவர்களும், சிறப்பு விருந்தினராக வலயக்கல்வி பணிப்பாளர் திரு. P. ரவீந்திரன், அவர்களும் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை, புனித யாகப்பர் ஆலய மகளிர் பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறுவர்களினால் கலை நிகழ்வுகளும், விருந்தினர்களால் சிறுவர்களை ஊக்கப்படுத்தும் கருத்துக்களும், ஓவியப்போட்டிக்கான சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கலும் நடைபெற்றது.







# நீதி துறைக்கு ஏற்பட்டுள்ள சவாலுக்கு எதிராக மன்னாரில் ஒன்று திரண்ட சிவில் சமூக அமைப்புக்கள்

- மன்னார் நிருபர் (10.03.2023)

நாட்டில் நீதித்துறைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவும் அதே நேரம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கோரியும் செவ்வாய்க்கிழமை மன்னார் சிவில் சமூக அரசியல் பிரதிநிதிகள் கவனயீர்ப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

மன்னார் நகர பேருந்து நிலையத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய சிவில் சமூக மற்றும் அரசியல் பிரதிநிதிகள் இலங்கையில் தொடர்ச்சியாக சட்டத்துறை மற்றும் நீதித்துறை எதிர்கொண்டு வரும் அழுத்தங்கள் மற்றும் சவால்கள் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அத்துடன் அரசாங்கம் ஒவ்வொரு பிரச்சனைக்கும் அமைக்கும் விசாரணைக் குழுக்களில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் சர்வதேச விசாரணை ஒன்றே எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் அதே நேரம் நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரியும் விரைவில் மன்னாரில் பாரிய போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் மெசிடோ நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ, மன்னார் நகரசபை முன்னாள் தலைவர் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகர சபை முன்னாள் உப தலைவர் ஜான்சன், சிவில் சமூக அமைப்பினர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னாள் நகரசபை,பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

# முல்லைத்தீவு சட்டத்தரணிகளுக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் சட்டத்தரணிகளும் போராட்டம்



- மன்னார் நிருபர் (10.03.2023)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும் சட்டத் துறையிலும் நீதித்துறையிலும் இடம் பெறும் அத்துமீறல்களை நிறுத்த கோரியும் செவ்வாய்கிழமை மன்னார் சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

அதே நேரம் முல்லைத்தீவில் இடம் பெற்று வரும் போராட்டத்திலும் கலந்து கொண்டு நீதிபதி சரவணராஜவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிரான முல்லைத்தீவு சட்டத்தரணிகளின் போராட்டத்திற்கு வலு சேர்த்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் எந்த ஒரு நீதி மன்றத்திலும் ஆஜராகவில்லை என்பதுடன் வழக்குகளுக்காக சமூகளித்த பொது மக்களும் பல்வேறு பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர்.





# உயிர் அச்சுறுத்தல் காரணமாக மாவட்ட நீதிபதி ராஜினாமா

## சட்டத்தை நிலைநிறுத்துவதற்காக தனது கடமைகளைச் செய்யும் நீதித்துறையின் உறுப்பினர் ஒருவர் மீதான அச்சுறுத்தலை கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட தமிழர் உரிமைகளுக்கான குழுமம் கண்டிக்கிறது.

**மா**க்கம், கனடா - இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், பிற அரச அதிகாரிகளிடமிருந்து எழுந்துள்ள உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. டி. சரவணராஜா பதவியை ராஜினாமா செய்துவிட்டு நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

குருந்தூர்மலையில் பண்டைய தமிழச் சைவ சமயத் தலம் தொடர்பான வழக்கு மற்றும் லெப்டினன்ட் கேணல் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான மனு, ஆகியவற்றிற்கு சமீபத்தில் தீர்ப்பு வழங்கியிருந்த மதிப்பிற்குரிய நீதிபதி, "எனது உயிர் மீதான அச்சுறுத்தல் மற்றும் அதீத மன அழுத்தம்" காரணமாக எனது பதவியிலிருந்து விலகுகிறேன் என்று இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ள பதவி விலகல் கடிதம் ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

தொடர்ச்சியாக நீதியின் போக்கைத் திசைதிருப்புவதற்கு இலங்கையில் இடம்பெறும் முயற்சிகள் குறித்து தமிழர் உரிமைக்கான குழுமம் தனது கடுமையான விசனத்தை வெளிப்படுத்துகிறது.

சட்டத்தை நிலைநிறுத்துவதற்காகப் பாரபட்சமற்ற வகையில் தனது கடமைகளைச் செய்யும் நீதித்துறையின் உறுப்பினர் ஒருவர் மீது, இலக்கு வைக்கப்பட்டுள்ள இந்த சமீபத்திய அச்சுறுத்தலை கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட தமிழர்களுக்கான உரிமைகள் குழுமம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்தத் துன்புறுத்தல் இலங்கைத் தீவில் தமிழ் மற்றும் முஸ்லீம்களை ஓரங்கட்டுவதற்கான பெரும்பான்மை சிங்கள - பௌத்த அரசின் நோக்கங்களை மேலும் முந்நகர்த்திச் செல்கிறது.

உள்நாட்டுப் போரின் விளைவுகளாலும் இலங்கையின் ஆயுதப்படைகள் மற்றும் அரசாங்கங்களால் (GoSL) இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களாலும் தமிழ் மக்கள் இன்னும் அவதிப்பட்டுக்கின்றதும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டதுமான முல்லைத்தீவு மாவட்டத்தில் மூத்த நீதிபதியாகவும், நீதவானாகவும் இருந்தவரே திரு. சரவணராஜா ஆவார்.

நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமாகத், தமிழ் மக்கள் போராடிவரும் நிலையிலும், முல்லைத்தீவு உட்பட. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் அதிகரித்த மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன.

சில நாட்களுக்கு முன் நகர்த்திச் - ஏற்கனவே பண்டைய சைவத் தமிழ்க் கோவிலான, ஆதி ஐயனார் கோவில் அமைந்திருந்த குருந்தூர் மலையின் உச்சியில், சட்டவிரோதமாக கட்டப்பட்ட கோவில் உட்பட அனைத்துப் புதிய கட்டுமானங்களும் அகற்றப்பட வேண்டுமென்று, நீதிபதி சரவணராஜா தலைமையில் முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நீதிமன்றத் தடை உத்தரவு இருந்த நிலையிலும், சட்டத்தை அப்பட்டமாகப் புறக்கணித்து, தொல்பொருள் திணைக்களத்தின் உச்சபட்ச உதவியுடன் கோவில் நிலத்தில். சிங்கள பௌத்த பிக்குகள் சட்டவிரோத புத்த விகாரை கட்டுமானத்தைத் தொடர்ந்தனர்.

மேற்படி தீர்ப்பு தவிர, நீதிபதி சரவணராஜா, கொக்குதொடுவாயில் உள்ள மனிதப் புதைகுழிக்கு முல்லைத்தீவு மாவட்ட பொலிஸாருடன் சென்று அகழ்வுப் பணிகளுக்கும் உத்தரவிட்டிருந்தார்.

முன்பு கண்டுபிடிக்கப்பட்ட பல பாரிய மனிதப் புதைகுழிகளைப் போலவே கொக்குத்தொடுவாய்ப் பாரிய மனிதப் புதைகுழிகளும், சட்டத்திற்குப் புறம்பாக கொல்லப்பட்ட தமிழர்களின், உடல்களைக் கொண்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இது தொடர்பில் இலங்கை அரசு சர்வதேச கண்காணிப்புடனான பாரபட்சமற்ற விசாரணைகளைச் செய்ய மறுத்துவருகிறது, என்பதும், இலங்கையில், நீதித்துறையின் சுதந்திரமும், சட்டத்தின் ஆட்சியும் வலுவாக நலிந்து போயுள்ளது என்பதும், இங்கு கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

கடுமையான அச்சுறுத்தல்களுக்கும் உயிர் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ள நீதிபதி சரவணராஜா, இனவாதக் கருத்துக்கள் மூலம் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டுள்ளார்.

சரத் வீரசேகர போன்ற, இலங்கை அரசவை உறுப்பினர்கள், அவருக்கு எதிராக தனிப்பட்ட தாக்குதல்களை நடத்துவதற்குப் பாராளுமன்ற சிறப்புரிமையை கீழ்த்தரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும், *2023* செப்டெம்பர் *21*ஆம் திகதி சட்டமா அதிபரின் அலவலகத்திற்கு அழைக்கப்பட்ட நீதிபதியிடம் குருந்தூர்மலை தொடர்பான அவரது தீர்ப்புகளை மாற்றி எழுத வேண்டும் எனச் சட்டமா ஆதிபரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும். தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான மிரட்டல் மற்றும் நீதியின் போக்கை சிதைக்க திட்டமிடப்படுகின்ற நடவடிக்கை ஒன்றும் இலங்கையில் புதியது அல்ல. இது மனித உரிமைகளை மீறவும் தமிழர்களை ஓரங்கட்டி அடிபணிய வைக்கவும், இலங்கை சிங்கள-பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற பெரும்பான்மை மனப்பான்மையால் உந்தப்பட்டு, சிங்கள-பௌத்த பெரும்பான்மை அரசாங்கங்களால் தொடர்ச்சியாகப் பின்பற்றப்படும் ஒரு உத்தியாகும்.

இலங்கையில் நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மீட்டெடுக்கவும், அங்கு ஆழமாக வேரூன்றியிருக்கும் தண்டனையிலிருந்து தப்பித்தலை முடிவுக்குக் கொண்டு வரவும், தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச சமூகம் மற்றும் இந்த உலகின், நியாயமான எண்ணம் கொண்ட அரசாங்கங்களிடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். - நவரத்தினம் சிறீ நாராயணதாஸ், தலைவர்.

**எமது விடுதலை எமது கையில்**

**கற்பனா நாகேந்திரா**, பொதுச்செயலாளர்
katpana@tamilrightsgroup.org
*1(778) 870-5824*



---

## District Judge Resigns Due to Threats to Life and Intimidation

### Tamil Rights Group expresses grave concerns regarding the continued attempts in Sri Lanka to pervert the course of justice.

Markham, Canada – District Judge Mr. T. Saravanaraja from Mullaitivu in Sri Lanka has been forced to resign and flee the country due to the ominous threats to his life and intimidation from elected representatives and other officials in the country.

In his letter of resignation which has now been published in the media, the esteemed judge who has recently ruled on cases relating to an ancient Tamil Hindu religious site in Kurunthurmalai and a remembrance event to commemorate Lt Col Thileepan, had written to the Sri Lanka Judicial Services Commission that he was resigning due to "threat to my life and due to lot of stress" forced upon him.

Tamil Rights Group (TRG) expresses grave concerns regarding the continued attempts in Sri Lanka to pervert the course of justice. TRG vehemently condemns this latest threat where a member of the judiciary performing his impartial duties to uphold the law has been targeted. This persecution furthers the aims of the majoritarian Sinhala – Buddhist state to marginalise the Tamil and Muslim people of the island.

Mr. Saravanaraja was a senior judge and magistrate in the war torn Mullaitivu district, where Tamils are still suffering from the effects of the civil war and the atrocity crimes perpetrated against them by the Armed Forces and Governments of Sri Lanka (GoSL). As the Tamil citizens struggle to seek justice and accountability, the military occupation and exacerbated human rights violations continue in the North and East of Sri Lanka, including in Mullaitivu.

Some time ago, the Mullaitivu court with Judge Saravanaraja presiding had ordered the removal of all new construction, including the illegally built shrine on Kurunthurmalai, a hill top site that already contained an ancient Tamil Hindu temple, the revered Athi Aiyanar temple. Despite this court injunction, Sinhala Buddhist monks with the active help of the Archaeological Department continued to construct an illegal Buddhist shrine on the temple land, in blatant disregards of the law. Separate to the above ruling, Judge Saravanaraja had also visited a mass grave site in Kokkuthodavai, Mullaitivu district with the area police and ordered excavations. In this context, it should be noted here that the Kokkuthodavai site like many other mass graves that have been discovered are believed to contain bodies of Tamils killed extrajudicially, for which the GoSL has refused to conduct internationally supervised impartial investigations.

The independence of the judiciary together with the rule of law has been severely eroded in Sri Lanka. While Judge Saravanarajah has been hounded continuously through racist comments and disgraceful used parliamentary privilege to conduct personal attacks against him by MPs such as Sarath Weerasekera, he has also been subjected to severe intimidation and threats to life. Further, it has been reported that he was summoned by the Attorney General to his office on 21 September 2023 and that pressure was exerted on him to amend his judgments regarding the Kurunthurmalai case.

This type of intimidation and systematically planned action to pervert the course of justice is nothing new in Sri Lanka. This has been a strategy adopted by successive Sinhala-Buddhist majoritarian governments to allow the continued human rights abuses undertaken to marginalise and subjugate Tamils, driven by the majoritarian mindset that the country belongs to the Sinhala-Buddhist only.

"We appeal to the international community and fair-minded governments of this world to take appropriate action against Sri Lanka to end the entrenched impunity and use their influence to help restore justice and accountability in Sri Lanka." - Navaratnam Srinarayanathas, President

For all enquiries:
Katpana Nagendra
General Secretary and Spokesperson
katpana@tamilrightsgroup.org | 1(778) 870-5824



# தமிழ் மக்கள் 'தலைவரைத்' தேடுகின்றனர். தென்னிலங்கை காந்திக்காக மன்றாடுகின்றது.

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- தமிழ் மக்களைக் காப்பாற்றுமாறு செல்வா அன்று கோரினார். இன்று சிங்கள மக்கள் தம்மைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் மன்றாடுகின்றனர்.
- வின்சன் சர்ச்சில் "புள்ளடியால்" தோற்றார். ராஜபக்ஷக்களை மக்கள் எழுச்சி தோற்கடித்தது.

இனம் சமூகம் என்ற அடிப்படையில் இலங்கை கடந்த 75 வருடங்களாக பிளவுண்டு கிடக்கின்றது. இந்தப் பிளவுகளை ஒட்ட வைக்க அரசியல் சமூக ரீதியில் எந்தவித வழி முறைகளும் ஆக்கபூர்வமாக மேற் கொள்ளப்படவில்லை. அத்தி பூத்தாற்போல் இனங்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் உறவுப் பாலங்கள் அமைக்க முயற்சிகள் காலத்துக்குக் காலம் மேற் கொள்ளப்பட்ட போதும். அத்தகைய முயற்சிகளை முளையிலேயே கிள்ளிவிடும் செயற்பாட்டாளர்களின் செயல்கள் வெற்றி பெற்று விடுகின்றன. இதனையும் மீறி மேற்கொள்ளப்படும் செயல்கள் சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத் துர்வுவதற்கான செயற்பாடுகளாக அமைந்துவிடுகின்றன.

இதற்கும் அப்பால் காலத்துக்குக் காலம் ஆட்சி பீடம் ஏறும் அரசியல் சக்திகளின் தாரக மந்திரமாக உச்சரிக்கப்படும் இன சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் உறவு என்பன உயிரற்ற பொம்மைகளாகவே காட்சிப்படுத்தலில் பிரசன்னமாகி வருகின்றன. எனவே இலங்கையில் இனங்களுக்கிடையில் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கம் பரஸ்பர உறவு என்பன இன்று ஒட்டு மொத்தமாக "காணாமல் ஆக்கப்படும்" ஆளும் வர்க்கத்தின் பட்டியலில் நிரந்தரமாக இடம்பிடித்துவிட்டது.

இந்த ஒரு பின்னணியில் இருவேறு எதிர்த் திசைகளில் பயணிக்கும் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் தற்போது தமக்கான தலைமைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பலம் பெற்றிருந்த காலத்தில் தமிழர்களுக்கும் பிரச்சனை இருக்கின்றது. அது தீர்க்கப்பட வேண்டும். அவர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் சிங்கள மக்களிடையே எழுந்த போது ஆட்சியாளர்கள் ஒஸ்லோ உடன்படிக்கை மூலம் அதிகாரப் பகிர்வில் சமஷடிக்குக் கீழ் இறங்கி வந்தனர். ஆனால் 2009 ஆம் ஆண்டு கிளிநொச்சி இலங்கைப் படைத் தரப்பின் கைகளுக்கு வந்தபோது ஒஸ்லொ உடன்படிக்கை அதிகாரப் பகிர்வு என்ற விடயங்களைத் தென்னிலங்கை தூக்கி வீசியதுடன் தமிழர்களுக்கென விசேட பிரச்சனைகள் இல்லை தென்னிலங்கை மக்களுக்கும் தமிழர்களுக்கும் பொதுவான பிரச்சனைகளே உள்ளன என்ற வாதங்கள் தென்னிலங்கையில் முன்வைக்கப்பட்டு பேசு பொருளாகியது.

ஆனால் தமிழர்கள் தென்னிலங்கையின் இந்த நிலைப்பாட்டுடன் ஒத்துப்போக மறுத்ததுடன் தமக்கான "தலைவரைத்" தேடியதுடன் தமிழ் மக்களிடையே இருந்த தலைமைகளை தமது எதிர்ப்பின் தற்காலிக குறியீடாக தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெறச் செய்தனர். இந்த வெற்றிகளுக்குள் தமிழர்களுக்கென உண்மையான நேர்மையான தலைமை கட்டி எழுப்பப்படலாம் என்ற நப்பாசை மாத்திரமல்ல வேறு தெரிவு என்பது தமிழர் தாயகத்தில் இல்லாதிருந்ததையும் தமிழ் மக்கள் உணர்ந்ததன் வெளிப்பாடே ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரையாக மக்களின் இந்த தெரிவுகள் இருந்தன.

ஆனால் இந்த வெற்றிகள் விழலுக்கிறைத்த நீராகப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்த தமிழ் மக்கள் தற்போது தமக்கான தமது "தலைவரைத்" தேடிக் கொண்டிருக்கின்றனர்.

மறுபுறம் தென்னிலங்கையும் தமக்கான தலைவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றது. இதில் விசித்திரம் என்னவெனில் அரகலயாக்களின் எழுச்சியுடன் சிங்கப்பூரின் சிற்பியான லி குவான் யூ போன்ற தலைவரே தமக்குத் தேவை என குரல் எழுப்பிய தென்னிலங்கை தற்போது "எங்களுக்கு ஒரு காந்தியைத் தந்தருளும்" என கடவுளிடம் மன்றாடி நிற்கின்றது.

சுதந்திர இலங்கையில் கடந்த 75 வருட கால வரலாற்றில் தமிழர்கள் தமது அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ள கையில் எடுத்த ஆயுதம் அகிம்சையாகும். ஆனால் இந்த அகிம்சை மொழியை தென்னிலங்கை அரசியல் சக்திகள் கேலிக்கள்ளாக்கியதுடன் அரச பயங்கரவாதம் மற்றும் அரசியல் சக்திகளின் காடைத்தனத்தாலும் பதிலளித்தன. அந்த வரலாறு இன்று வரை அதாவது மகாத்மா காந்திக்குப் பின் அஹிம்சைக்கு உயிர் கொடுத்த திலீபனின் ஊர்தியைத் தாக்கும் வரை தொடர்கின்றது. இவ்வாறு வரலாற்று ரீதியில் அகிம்சையை காலில் போட்டு மிதித்த தென்னிலங்கை பரம்பரை இன்று கடவுளிடம் "எங்களுக்கு ஒரு காந்தியைக் தந்தருளும்" என இறைவனிடம் மன்றாடி நிற்கின்றது.

சிங்கள ஆளும் வர்க்கம் தமது அரசியல் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கிய "அரகலய" எழுச்சியை அடக்க ரணில்விக்ரமசிங்கவுடன் கைகோர்த்த ராஜபக்ஷ அணியினரின் வெற்றிக்குள் அமிழ்ந்து போன தென்னிலங்கை தமது மீட்சிக்கு காந்தி மகானைத் தருமாறு இறைவனிடம் மன்றாடும் நிலைக்குத் தென்னிலங்கையை தள்ளியுள்ளது. இத்தகைய கையறு நிலையே தென்னிலங்கை ஊடகங்களில் ஆசிரியர் தலையங்கமாக வெளிப்பட்டுள்ளது.

ஏனெனில் இன்னொரு "அரகலய" எழுச்சி ஏற்படும். அந்த எழுச்சி தென்னிலங்கைக்கு மீட்சியைத் தரும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் இருந்த தென்னிலங்கை மக்களுக்கு ரணில் - ராஜபக்ஷ அணியினரின் நகர்வுகள் பலத்த அடியைக் கொடுத்துள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஒரு "அரகலய" எழச்சிக்கு இடமில்லை என்ற யதார்த்தத்தை ரணில் - ராஜபக்ஷ அணியினரின் நகர்வுகள் உணர்த்தியதன் விளைவே தென்னிலங்கையை "எங்களுக்கு ஒரு காந்தியைத் தந்தருளும்" என்று இறைவனிடம் மன்றாட வைத்துள்ளது என்று கூறுவதே பொருந்தும்.

மகாத்மா காந்தி அடுத்த தேர்தலுக்காக அன்றி அடுத்த தலைமுறைக்காக உழைத்தவர். எனவேதான் மகாத்மா காந்தியின் நினைவுகள் இன்றுவரை வாழ்கின்றது என்று சம்பிக்க முனிதாச என்பவர் ஆங்கில நாளிதழில் தமது கருத்தாகப் பதிவிட்டுள்ளார்.

இன்றைய அரசியல்வாதிகள், குறிப்பாக இங்குள்ளவர்கள், இதற்கு நேர்மாறாகச் செய்கிறார்கள். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், அவர்கள் அளித்த வாக்குறுதிகள் என்ன என்பதை அவர்கள் முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். மேலும் இயற்கை பேரழிவுகளுக்கும் ஏன் அனைத்து குறைபாடுகளுக்கும் பொதுமக்களே காரணம் என்று குற்றம் சுமத்தும் அளவுக்கு அரசியல்வாதிகள் சென்றுவிடுகின்றனர் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

அதிகாரம் இருக்கும் போது அரசியல்வாதிகளுக்கு மூளை பறி போய்விடும். எதிர்கட்சியில் இருக்கும் போது அரசியல்வாதிகளுக்கு எல்லா மூளையும் இருக்கிறது. ஆனால் அதிகாரம் இல்லை என்று கூறப்படுகிறது. இது நமது அரசியல் வட்டாரத்தில் கசப்பான உண்மை என்றும் பதிவிட்டுள்ளார்.

இலங்கையின் இன்றைய மிக முக்கியமான தேவைகளில் ஒன்று, நமது நாட்டிற்கு தலைமைத்துவத்தை அல்லது வழிகாட்டலை வழங்குவதற்கு மகாத்மா காந்தி போன்று திறமையான ஒரு அரசியல்வாதி தோற்றம் பெற வேண்டும் என தென்னிலங்கை இன்று எதிர் பார்க்கின்றது.

உலகின் மிகப்பெரிய மற்றும் சக்திவாய்ந்த பேரரசுகளில் ஒன்றான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை வீழ்த்துவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார்.

பிரிட்டிஷ் போர்க்கால பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மகாத்மா காந்தியை "அரை நிர்வாண பக்கிரி" என்று குறிப்பிட்டு அவரை இழிவுபடுத்தினார்.

அரசியல் தலைவர்கள் மத்தியில், வின்ஸ்டன் சர்ச்சில் வகித்த போர்க்கால தலைமைக்காக பரவலாக போற்றப்பட்டவர். ஆனால் போரைத்தொடர்ந்து நடந்தபொதுத் தேர்தலில் அவர் தோற்கடிக்கப்பட்டார் என்று ஆங்கில நாளிதழ் தனது அசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனின் போர்க்கால பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் மக்களின புள்ளடியால் தோற்கடிக்கப்பட்டார். அனால் இலங்கையில் "அரகலயா" என்ற மக்கள் எழச்சி போர்க் கால தலைமைகளைத் தூக்கி வீசினர்.

"அகிம்சை என்பது மக்களின் வசம் உள்ள மிகப்பெரிய சக்தி. மனிதர்களின் புத்திசாலித்தனத்தால் உருவாக்கப்பட்ட அழிவுகரமான ஆயுதத்தை விட இது வலிமையானது." என்பதை தென்னிலங்கை மக்களுக்கு அந்த ஆசிரியர் தலையங்கம் சுட்டிக் காட்டுகின்றது.

தென்னிலங்கையின் இந்த மன நிலை இன்னொரு அரகலய எழுச்சி இன்றைய ரணில் - ராஜபக்ஷக்களின் கூட்டாட்சியில் சாத்தியமாவது கடினம். மகாத்மா காந்தி போன்ற ஒரு தலைவரின் வழி காட்டலில் உருவாகும் அகிம்சை வழி போராட்டமே தென்னிலங்கை மக்களுக்கு விடிவையும் விமோசனத்தையும் தரும் என்பதையே இது சுட்டிக் காட்டுகின்றது.

பிரெட் என்ற பொது மகன் கடவுளுக்காக காத்திருக்காமல், அடுத்த தேர்தலில் அதை நீங்களே செய்யுங்கள் என்று பதிவிட்டுள்ளார்.

மொத்தத்தில் தமிழ் மக்கள் மாத்திரமல்ல தென்னிலங்கையும் தமது ஒட்டு மொத்த தலைமைகளில் நம்பிக்கை இழந்து தமக்கான தலைமைத்துவத்தைத் தேடிக் கொண்டிருக்கின்றது.

ஆனால் தமிழ்த் தலைமைத்துவங்களும் தென்னிலங்கை சிங்களத் தலைமைகளும் வேறு விதமான சிந்தனைகளுக்குள் மூழ்கி தமக்கான அரசியல் கனவில் சுகம் காண்கின்றனர்.

தமிழ் மக்களின் மன நிலை அறியாது தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுத்துவிட தீவிரமாகக் களத்தில் போராடி வருகின்றனர். ஆனால் இந்தத் தலைமைகள் எவருமே தமிழ் மக்கள் இன்று தேடும் "தலைவர்" அல்ல என்பதை உணர மறுக்கின்றனர். அத்துடன் இவர்கள் அனைவருமே அடுத்த தேர்தலுக்கான அஞ்சல் ஓட்டப் போட்டி கிரீடக் கனவில் மிதந்து கொண்டிருக்கின்றனர். 2009 க்குப் பின் "வெறும் கையுடன் முழம் போடும்" தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் மனதில் தாமே இருக்கின்றோம் மக்களின் தெரிவு தாமே என்ற மிதப்பில் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகளைப் போன்றே தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் அடுத்த தேர்தல் கனவில் மிதந்து கொண்டிருக்கின்றனர்.

ரணில் - ராஜபக்ஷக்களின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர காந்திய வழியிலான பாரிய அகிம்சை வழிப் போராட்டத்தைக் கட்டி எழப்புவது குறித்த சிந்தனையில் தென்னிலங்கை மூழ்கிக் கிடக்கின்றது. ஆனால் இன்னொரு "அரகலயா அலை" வரும் ஆட்சி மாற்றம் ஏற்படும் அந்த மாற்றத்தில் ஆட்சிக் கிரீடத்தை மக்கள் தமக்கே வழங்குவர் என்ற நப்பாசையில் ஆளுக்கு ஒரு மூலையில் நின்று மனப் பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர்.

"அரகலயா" எழுச்சியின் போது ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தது மாத்திரமல்ல "அரகலயாக்களை" ரணில் - ராஜபக்ஷக்களின் இரும்புக் கரத்தில் சிக்க வைத்தனர். "அரகலயா எழச்சி" போன்றதொரு இன்னொரு எழச்சிக்கு மக்களை அணி திரட்டி செல்ல திராணியற்ற இந்தத் தலைமைகள் தமது அரசியல் நலன்களுக்காக ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இன்னொரு "அரகலயா" எழுச்சிக்காகக் காத்திருக்கின்றனர்.

மொத்தத்தில் தமிழர்களும் சிங்களவர்களும் பிரிந்த நின்று தமக்கான தலைமைகளைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்கள் தமக்கான "தலைவரைத்" தேட தென்னிலங்கை தமக்கு காந்தி மகானை தமக்குத் தந்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சி நிற்கின்றனர்.

தமிழ் மக்களின் தெரிவாக இன்றைய தமிழ்த் தலைமைகளில் எவரும் இல்லை எனபதினாலேயே அவர்கள் "தலைவரைத்" தேடுகின்றனர்.

அதேபோல் தென்னிலங்கையின் தெரிவில் தற்போதைய எந்த அரசியல் தலைமையும் இடம்பெற முடியவில்லை என்பதினாலேயே அவர்கள் காந்தி மகானை தருமாறு இறுதியில் கடவுளிடம் தஞ்சமடைய வேண்டியதாயிற்று.

மொத்தத்தில் இலங்கையில் பொருளாதார நெருக்கடி உணவுப் பற்றாக் குறை மருந்து தட்டுப்பாடு என மக்களின் பஞ்ச வாழ்க்கைக்குள் மக்களும் நாடும் தலைவர்களுக்கான பஞ்சத்தையும் எதிர் நோக்கியுள்ளனர்.

சிங்கள பேரினவாத சக்திகளிடம் இருந்து தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென தந்தை செல்வா அன்று கூறினார். தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் சக்திகளுடன் கூட்டணி வைத்துப் பயணித்த சிங்கள மக்களும் தம்மைக் காப்பாற்றுமாறு கடவுளிடம் மன்றாட வேண்டிய நிலைக்கு அவர்களை வரலாறு இன்று கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

Email : vathevaraj@gmail.com
29th September 2023

# அச்சுறுத்தல் காரணமாக நீதிபதி சரவணராஜா பதவி விலகிய சம்பவம் குறித்து விசாரிக்க ரணில் உத்தரவு

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த சம்பவத்திற்கான மூல காரணத்தை உடனடியாக ஆய்வு செய்யுமாறு தனது செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ் ஆகியோருடன் சம்பவம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் உயிர் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நீதவான் முறைப்பாடு செய்யவில்லை என தெரியவந்துள்ளது.

கடந்த 24ஆம் திகதி வெளிநாடு சென்ற நீதவான், தனது இராஜினாமா கடிதத்தை செப்டெம்பர் 23 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

சட்டமா அதிபருக்கு எதிராக நீதவான் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் சட்டமா அதிபரிடம் வினவியதோடு, நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஊடாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீதவானுடன் தனது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் கலந்துரையாடியதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

குருந்தூர்மலை தொடர்பில் அவர் அளித்த தீர்ப்பிற்காக, சரத் வீரசேகர போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர் மீது இனவாத கருத்துக்களையும், அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் பேசினர்.

"இது சிங்கள பௌத்த நாடு, அதை முல்லைத்தீவு தமிழ் நீதிபதி மனதில் கொள்ளவேண்டும்" என்று தனது நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி சரத் வீரசேகர பேசியது பதிவாகியுள்ளது.

# ஆயுதப் போராட்டத்தை கைவிட்டது குறித்து வருந்துகிறோம் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன்

- நடராசா லோகதயாளன்

ஆயுதப்போராட்டத்தினை முன்னெடுத்த நாங்கள் அதனை ஏன் கைவிட்டோம் என எண்ணி இன்று வருந்துவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாவின் 60வது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற "ஜனாவின் வாக்குமூலம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையில் இன்று எங்கு பார்த்தாலும் புத்த பிக்குகளின் நாட்டாமைத்தனத்தையும், முப்படைகள் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் அடாவடித்தனத்தையுமே காணக்கூடியதாக உள்ளது.

இதனையெல்லாம் பார்க்கும் போது எமக்கு ஏன் ஆயுதப் போராட்டத்தினைக் கைவிட்டோம் என வருத்தமாக உள்ளது. மீண்டும் ஆயுதப் போராட்டத்தினை ஆரம்பித்தால் என்ன? என்ற எண்ணமும் தோன்றுகின்றது என்றார்.



# நீதிபதி சரவணராஜாவுக்கான உயிர் அச்சுறுத்தல் விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் மனித சங்கிலி போராட்டம்

- நடராசா லோகதயாளன்

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மருதனார்மடம், கொக்குவில் பகுதியில் மனித சங்கிலி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் அரசியல் கட்சி பிரமுகர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பங்குபற்றினர்.

இந்த போராட்டம் காலை 9 மணியளவில் மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற வகையில் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டு, அவர் நாட்டை விட்டு வெளியேறிய விவகாரத்தில் உரிய நடவடிக்கையெடுக்க வலியுறுத்தியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் போராட்டத்திற்கு ஆதரவளித்ததுடன் பல பொது அமைப்புகளும் இணைந்தனர்.



எனினும், புதன்கிழமை இடம்பெற்ற இந்த போராட்டத்தில் எதிர்பார்த்தளவு மக்கள் கலந்து கொண்டிருக்கவில்லை. மருதனார்மடம், கொக்குவில், யாழ் நகரம் ஆகிய இடங்களில் மட்டும் சிறிது தூரத்துக்கு மக்கள் வீதியோரமாக வரிசையில் நின்றிருந்தனர்.



மருதனார்மடத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடைப்பட்ட தூரத்தில் மிக பெருமளவு பிரதேசத்தில் போராட்டம் நடக்கவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போராட்டம் முன்னெடுக்கப்படும் பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக்கோரும் பரிந்துரைப்பு மனு ஐ.நா அலுவலகத்தில் கையளிப்பு

- நடராசா லோகதயாளன்



இலங்கையில் நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்த ஐ நா பொதுச்செயலர் தலையிட வேண்டும் என்று பொதுமக்கள் கோரும் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மூலம் இந்த முன்னெடுப்பு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தனக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக கூறி பதவியிலிருந்து விலகி நாட்டைவிட்டு வெளியேறிய சம்பவம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிருவாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட கௌரவ நீதிவான் ரி. சரவணராஜா அவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் பங்கேற்போடு 2023.10.02 ஆம் திகதி கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் மாண்புமிகு அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து, புதன்கிழமை (04) நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கையளிக்கப்பட்டது.

நாட்டில் ஒரு தமிழ் நீதிபதிக்கே பாதுகாப்பு இல்லை என்றால் சாதாரண தமிழ் மக்களின் பாதுகாப்பு என்னவாகும் என்று தமிழர்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

குருந்தூர்மலை தொடர்பில் நீதிபதி சரவணராஜா அளித்த தீர்ப்பை இனவாதிகள் என்று அறியப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, உதய கம்மன்பில ஆகியோர் கடுமையாக விமர்சித்து, அவரை நாடாளுமன்றத்திற்குள்ளேயே அவருக்கு எதிராக இனவாத கருத்துக்களை வெளியிட்டனர்.

"அந்த தமிழ் நீதிபதி ஒரு சிங்கள பௌத்த நாட்டில் வசிக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.



SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed, B.A, PGDE(Me), Sp.Tr.(Ag)
Jaffna Electoral District,
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
www.shritharan.com

பாராளுமன்றம்
PARLIAMENT

2023.10.02.

My No.: MP/JF/KN/Si.Sh/Gen/2023

Mr. Marc Andre Franche
UN Resident Coordinator,
United Nations Compound,
No. 202-204, Bauddhaloka Mw,
Colombo 07.

**Recommendation for the Government interferences on the Sri Lankan Judiciary.**

An attention seeking demonstration is conducted in Kilinochchi Town on 2023.10.02 in the arrangement of the Kilinochchi District branch of the Tamil National Alliance party (Ilankai Thamil Arasu Kadchy) with the participation of Kilinochchi district Attorneys-at-law requesting for justice and protection to the Mullaitivu District Magistrate Hon.T.Saravanarajah who has left the country due to the various difficulties performed by the Government Authorities within the Sri Lankan Judiciary and to protect the independence of the Judiciary.

Hence, I herewith attach the 'Memorandum of Recommendation for seeking reliefs to the Government hindrances on the Sri Lankan Judiciary' which was submitted to me to being forth to your attention and for taking proper measures so that I can send it to the General Secretary-General of the United Nations Honourable Antonio Guterres.

Thanking You,

Sivagnanam Shritharan
Member of Parliament,
Jaffna Electoral District,
Kilinochchi.

S.Shritharan,
Member of Parliament
Jaffna Electoral District,
No:882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi.

# UTHAYAN CULTURAL SHOW - 2023 and 27th Year Celebration

www.uthayannews.ca
UTHAYAN உதயன்

COMPUTEK COLLEGE Presents

# உதயன் பல்சுவைக் கலைவிழாவும் விருது வழங்கலும்-2023

**DATE:** 15-10-2023 Sunday
**TIME:** 6:00 PM

**VENUE:**
Thamil Isai Kalaamanram of Ontario
1120 Tapscott Road #3
Scarborough, ON M1X 1E8

கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுவான
AAROSAI "WHERE MUSIC BEGINS..."
வழங்கும் மெல்லிசை



இவ்வருடத்தின் சிறப்புப் பாடகராக
"பொன்னியின் செல்வன்" புகழ்
வி. எம். மகாலிங்கம் அவர்களும்
கனடியப் பாடக பாடகிகளும்
மேடையை அலங்கரிப்பார்கள்

POWERED BY: VIBRANT HOSPITALITY GROUP | Latika Gold House | RAGEEP SUBRAMANIAM FINDER | Sugshe Finance Canada Inc. Ganesan Sugumar Tel: 416 363 2624

TICKETS VIP | $15

**For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512**

WINSMART FACILITY MAINTENANCE SERVICES
President: Kamalraj Kathirkamanathan
416 821 7870

BUY | INVEST | SELL
RECASH REALTOR RAJEEV SEBARASHA REALTOR
www.recashrealtor.com
905.226.8515 RE/MAX

15 years of Success 500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel Broker of Record 416.568.4301
Rishani Vettyvel 416.261.1544

MRS. SASIKALA NARENTHIRA

NKS Drapery & Blinds
Decorated more then 100,000 windows with more than 1,000,000 yards of fabric.
Call Us For Free In Home Consultation
Ketha Nadarajah
416 321-6420
210 Silver Star Blvd, Unit # 825 Scarborough, ON, M1V 5J9

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON. M1P 2L5

வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah Sales Representative
Dir: 416.333.6115

JRB universal inc
Home Mortgage
2nd Mortgage
Re-Financing
Commercial Mortgage
Business Loan
Line of Credit
All Approved
R.R.Rajkumar
647-289-6164

Amma Pawn Broker
1.0% 1.5%
416-757-0034
416-994-3861

First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
Dir: 416-908-5656 T. NESAN

CROSSROAD SHUTTLE BUS SERVICES
www.crossroadshuttles.com
647-801-7725

SRI NADARAJASUNDARAM Broker
416-276-6666
RE/MAX ACE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

TechSource Computer Liquidators
416-757-9111
416-757-5666
www.techsourcecanada.ca
1260 Kennedy Rd, Unit #364, Scarborough, ON M1P 2L3 (Kennedy & Shropshire)

THINKING SELLING YOUR HOUSE?
Please call me for FREE EVALUATION FREE STAGING
GET A HOME improvement and real estate expert in your corner!
Pratheep Kumariah

TIMES IRON WORKS INC. Fabricators & Erectors
Structural Steel Design | Miscellaneous Steel
Structural Steel Fabrication | Staircase and Railing
Structural Steel Erection | On Site Welding
Steel Buildings Construction | "STEEL MATERIALS FOR SALE"
38 Gormley Industrial Avenue, Stouffville, ON L0H 2G0
Thass 416 817 1114, Tel:905-888-9696

OPTIMART
AUTHORIZED DEALER FOR BRAND NAME GLASSES, 4 LOCATIONS TO SERVE YOU BETTER,
EYE EXAM AVAILABLE AT ALL LOCATION
CALL FOR AN APPOINTMENT
&
WE ACCEPT MOST INSURANCE COVERAGE
www.optimart.ca

Tasty தமிழா

லவ்லி
$70 €50 £43
+1 647-833-5131

உதயன் பல்சுவைக் கலை விழா"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் தமிழர் வர்த்தக நிலையங்கள் எதிர்வரும் ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுரோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பல்சுவைக் கலைவிழா" வில் நடனம் நகைச்சுவை கவிதை அரங்கு மற்றும் "ஆரோசை" இசைக் குழுவினர் நீண்ட மெல்லிசை நிகழ்ச்சி. இதில்"பொன்னியின் செல்வன்" புகழ் வி. எம். மகாலிங்கம் சிறப்புப் பாடகராக தோன்றுகின்றார்.

உதயன்"விழாவிற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் தற்போது பின்வரும் தமிழர் வர்த்தக நிலையங்களில் விற்பனையாகின்றன.

1.கென்னடி-எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனத்தில். தொலைபேசி:416 298 1598

2. மார்க்கம்-மெக்னிக்கல் சந்திப்பில் அமைந்துள்ள Majestic City வர்த்தக வளாகத்தில் Imma Trading Company தொலைபேசி: 416 609 0827.

3. கென்னடி-எக்லிங்டன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில். தொலைபேசி: 416 759 4916

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மது ஒழிப்பு தினம்!

03-10-2023 அன்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினமானது சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது விருந்தினர்கள் மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வானது ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், க.பொ.த. உயர்தரப் பரீட்சை ரயில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு கௌரவிப்பு, உலருணவுப் பொதிகள் வழங்கல் என்பன இடம்பெற்றன. இதன்போது மரக்கன்றும் நாட்டி வைக்கப்பட்டது.







வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் க. புஸ்பராசா அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன் அவர்களும், சிறப்ப விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் திருமதி. பொ. பிரேமினி, சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் திரு. நோபேட் உதயகுமார், சங்கானை தெற்கு கிராம உத்தியோகத்தர் து. சுபேஸ், சங்கானை லயன்ஸ் கிளப் தலைவர் ஆ.குணசேகரம், சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் பொது முகாமையாளர் திருமதி. கோ. கிருஸ்ணவேணி, சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு.கேசவதாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், பெற்றோர்கள், மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# மக்களுடைய கருத்து சுதந்திரத்தை பறிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்தவிடக்கூடாது என்கிறார் சட்டத்தரணி மணிவண்ணன்




மக்களுடைய கருத்து சுதந்திரம் என்பது இலங்கையில் அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பிலே உட்புகுத்தப்பட்டிருக்கின்ற ஒரு விடயம். அதை கேள்விக்கு உட்படுத்துகின்ற விதமாக புதிய சட்டம் கொண்டுவரப்படுகிறது. என தமிழ் தேசியக் கூட்டணியின் உறுப்பினரும், முன்னாள் யாழ்ப்பாண மாநகர முதல்வருமான சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்த காலகட்டத்திலே இரண்டு விதமான சட்டங்களை அரசாங்கம் முன்மொழிந்து அதை நிறைவேற்றுவதற்கு துடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். ஏற்கனவே இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு புதிதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்கின்ற பேரிலே புதிய ஒரு சட்டத்தை கொண்டு வருகின்ற முனைப்பிலே அரசாங்கம் இருக்கிறது. அதேபோன்று ஆன்லைன் என்று சொல்லப்படுகின்ற நிகழ்நிலைக்காப்பு சட்டமன்ற இன்னுமொரு சட்டத்தையும் கொண்டுவர அரசாங்கம் புரிகிறது.

அரசாங்கத்தின் மீது இருக்கக்கூடிய விமர்சனங்களை பொதுமக்கள் முன்வைக்க விடாமல் தடுக்கின்ற ஒரு மோசமான ஒரு சட்ட ஏற்பாடாக தான் நிகழ்நிலை காப்பு சட்டம் இருக்கிறது. இது மக்களுடைய கருத்து சுதந்திரத்தை அப்பட்டமாக விழுங்குகிறது.

மக்களுடைய கருத்து சுதந்திரம் என்பது இலங்கையில் அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பிலே உட்பகுத்தப்பட்டிருக்கின்ற ஒரு விடயம். அதை கேள்விக்கு உட்படுத்துகின்ற விதமாக இந்த சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதன் ஊடாக அந்த சட்ட ஏற்பாடுகளை மீறுகின்றவர்கள் தண்டிக்கப்படக்கூடிய வாய்ப்புகளும் இங்கு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை காலமும் கருத்து சுதந்திரத்தின் ஊடாக ஒருவர் பாதிக்கப்பட்டால் அவர் நட்ட ஈடு கோரி அவமானம் செய்து விட்டார்கள் என்ற நட்டவடு கோரி வழக்கு தாக்கல் செய்கின்ற உரிமை இருக்கின்ற நிலை இன்று அவர் அந்த சட்ட ஏற்பாடுகள் கூடாக தண்டிக்கப்படுகின்ற ஒரு நிலைமையும் தண்டனை வழங்கப்பட்டது கூடிய நிலைமையும் அல்லது சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படக்கூடிய நிலைமையில் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.

அரசாங்கம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு அல்லது மக்கள் எதிர்க்க கூடாது என்று கட்டுப்படுத்துவதற்கு செய்கின்ற ஒரு மோசமான ஒரு வேலைத்திட்டமாக தான் நாங்கள் இதை பார்க்கின்றோம். இந்த சட்டம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்படக்கூடாது இந்த சட்டத்துக்கு எதிராக பொதுமக்கள் கலந்துரையாட வேண்டும். ஏனென்றால் அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் வாய் திறந்தால் அவர்கள் தண்டிக்கப்படக்கூடிய ஒரு அவல நிலைமை இந்த சட்டத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட போகிறது.

இதற்கு எதிராக முழுமையான எதிர்வினை ஆற்ற வேண்டிய தருணமாக நாங்கள் பார்க்கின்றோம். அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் ஏற்கனவே இருந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எந்த விதத்திலும் குறைச்சல் ஆனது அல்ல அல்லது அதைவிட மோசமானது என்று விமர்சிக்கப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அதை நாங்கள் எதிர்க்கின்றோம். அந்த சட்டம் இயற்றப்படக்கூடாது அதற்கு எதிராகவும் தமிழ் மக்கள் மட்டுமல்ல இலங்கை தீவில் வாழக்கூடிய சட்டத்தை நேசிக்கின்ற சட்டவாட்சியை நேசிக்கின்ற அல்லது விரும்புகின்ற அனைத்து தரப்பும் இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

உலகம் முழுவதும் இருக்கக்கூடிய நிறுவனங்கள் இந்த சட்டங்கள் இரண்டையும் வன்மையாக எதிர்க்கின்றன. இவற்றை உலகத்தினுடைய சட்ட கோட்பாடுகளுக்கு முரணான சட்டங்களாகவே பார்க்கின்றன. அந்த வகையில் அரசாங்கம் தங்களுடைய அராஜகங்களை முன்னெடுப்பதற்கான கவசங்களாக இந்த இரண்டு சட்டங்களையும் உபயோகிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதினால் இதில் சட்டமாக நிறைவேற்றப்படுவதை தடை செய்ய வேண்டும். அதற்காக அனைவரும் போராடவும் என்றார்.



# சட்டங்கள் மட்டுமல்ல நீதிமன்ற தீர்ப்புக்களும் தமிழருக்கு எதிரானதாக வேண்டும் என இனவாதிகள் அதிகாரம் செலுத்துகின்றனர்

## - மனித சங்கிலி போராட்டத்தில் நிரோஷ்

தமிழ் மக்களின் உரிமைகளை அடக்குவதற்காக சட்டங்களை இயற்றி அதன் வாயிலாக பாரிய மனித உரிமை மீறலை மேற்கொண்ட இலங்கை அரச கட்டமைப்பு தற்போது ஒரு படி மேலே சென்று, தமிழ் மக்களின் இருப்பினை அழிப்பதற்கு நேரடியாகவே நீதிபதிகளின் தீர்ப்புச் சுதந்திரத்திலும் கைவைத்துள்ளமை நீதிபதி சரவணராஜாவுடன் அப்பட்டமாக வெளித்தெரிய வந்துள்ளதாக ரெலோவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான தியாகராஜா நிரோ‘ தெரிவித்தார்.

நீதித்துறையின் சுதந்திரத்திற்காக மருதனார்மடம் முதல் யாழ்நகர் வரை பேரணியின் இறுதியில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும், நீதித்துறையின் சுதந்திரத்திற்காக தமிழ் மக்கள் இந்தளவு தூரம் போராடுகின்றனர் என்பதில் இருந்து எம்மிடத்தில் காணப்படும் ஜனநாயகத்தின் மீதான பற்றுறுதியை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசு நீதித்துறையின் சுதந்திரத்தினை மீறி ஏனும் தமிழ் மக்களின் இருப்பினை அழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ் மக்கள் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதற்காகப் போராடுகின்றார்கள். ஆனால், இலங்கை அரச கட்டமைப்பு பயங்கரவாதச் சட்டம், அவரகாலச்சட்டம், தற்போது கொண்டுவரப்படவுள்ள சமூக ஊடகங்களை கட்டுப்படுத்தும் சட்டம் மற்றும் பிற்போக்கானதும் இனவாத நோக்கத்தினை நிறைவேற்றக்கூடிதுமான தொல்லியல் சட்டங்கள் என எமக்கு எதிராக பல சட்டங்களை பிரயோகிக்கித்துவருகின்றது. பாராளுமன்றில் காணப்படும் இனவாத பெரும்பான்மைப் பலத்தினைக் கொண்டு எண்ணிக்கையில் குறைவானதேசிய இனங்களை ஒடுக்குவதற்கான சட்டங்களை இயற்றி அவற்றை நீதிமனங்களின் வாயிலாக எம்மீது அரச கட்டமைப்பு பிரயோகித்தது. இவ்வாறான சட்டங்களினால் தமிழ் மக்கள் சொல்லெணாத் துன்பங்களை எதிர்கொண்டுள்ளார்கள். நாட்டில் உள்ள சட்டங்கள் மாத்திரமல்ல நீதிமன்றத்தின் தீர்ப்புக்களும் சிங்கள பேரினவாத கட்டமைப்பிற்கு சாதகமாகக் கணப்பட வேண்டும் என்று தான் அரசும் சிங்கள பேரினவாதிகளும் அதற்காக உச்ச அதிகாரத்தை பிரயோகிக்கின்றார்கள்.

தற்போது தமிழ் மக்களின் இருப்பினை அழிப்பதற்காக குருந்தூர்மலை போன்ற இடங்களில் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்களை தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் அவமதித்துள்ளன. பேரினவாத சிந்தனைகளின் அடிப்படையில் நீதிபதிகளை அச்சுறுத்தி தீர்ப்பினை அவமதிக்கின்றனர். நீதித்துறையை அவமதிக்கின்னர். இந்த நாட்டை ஏனைய இனங்கள் வாழ முடியாத தனிச்சிங்கள பௌத்த இனவாத தேசமாகக் கட்டியெழுப்பவே இவை அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு எதிரான எந்த நெருக்கடிக்கும் பொறுப்புக்கூறலுக்கும் உள்நாட்டுப்பொறிமுறை தீர்வாகது என்பது பட்டவர்த்தனமாகப் புலப்பட்டுள்ளது என ரொலோவின் யாழ் மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் வலகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ்பத்திரி கிராம பகுதியில் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் கைது



- மன்னார் நிருபர் (04-10-2023)

பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள காட்டாஸ்பத்திரி கிராம பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா பொதியுடன் பெண் ஒருவர் புதன்கிழமை (4) மதியம் கைது செய்யப்பட்டுள்ளார்.


பேசாலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் குறித்த வீட்டிற்குச் சென்று சோதனை யை முன்னெடுத்தனர்.

இதன் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கேரள கஞ்சா பொதியை மீட்டனர்.

குறித்த பொதியில் சுமார் 2 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த வீட்டில் இருந்த 44 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதி மற்றும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பெண் பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.




Canada | EMPLOYMENT ONTARIO | Ontario

SCAN TO REGISTER

தொழில் அமைச்சு, குடிவரவு, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு (MLITSD) ஆகியவற்றுடன் இணைந்து CSI 'ஸ்காபரோ ஹப்' நிகழ்ச்சித் திட்டம்' முன்னெடுக்கப்படுகிறது.

இலத்திரனியல் தொழிநுட்ப துறையில் பயிற்சி அளித்து வேலைவாய்ப்புக்குத் தயாராகும் விதத்தில் அதி நவீன நடைமுறைப் பயிற்சியுடனான கல்வித் திட்டம்.

சிக்கலான சர்க்யூட் போர்டுகளை எவ்வாறு பொருத்துவது, பழுதைக் கண்டறிவது, சரி பார்ப்பது மற்றும் திருத்துவைத்து பற்றிய அறிவைப் பங்கேற்பாளர்கள் பெறுவார்கள்.



இந்நிகழ்ச்சித் திட்டம் MLITSD இன் முக்கிய நோக்கோடு ஏற்புடையதாகும்:

- வேகமாக மாறி வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப அதை எதிர்கொள்ளக் கூடிய பணியாளர்களை உருவாக்குதல்
- வேலை தேடுபவர்களுக்கு பணி நுழைவுக்கான தடைகள் நீக்க வழி வகுத்தல்
- அதிகரித்து வரும் தொழிலாளர் சந்தையின் தேவைகளை சந்திக்க வேலை வழங்குவோருடன் நேரடியாக கூட்டுச் சேர்த்தல்

## CSI இலத்திரனியல் தொழிநுட்பப் பயிற்சி

**இலவச பயிற்சி வழங்கப்படுகிறது**

- 4-மாத பாடத் திட்டம்
- எங்கள் அதிநவீனத்தில் பயிற்சி கூடத்தில் நடைமுறைப் பயிற்சி
- வேலைவாய்ப்பு உதவி



மேலும் விவரங்கள் அறிய மற்றும் விண்ணப்பிக்க:

https://www.thecsi.com/skills-development-program.html


HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
புரட்டாசி சனி
விரத சாப்பாடு
SPECIAL BUFFET at Scarborough
SPECIAL THALI at Mississauga
செப்டம்பர் 30, அக்டோபர் 07 மற்றும் 14
ஆகிய தேதிகளில்
Order Online: www.saravanabhavan.ca
SARAVANAABHAVANCANADA
SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575
SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2
MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9
DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4

# மரண அறிவித்தல்



சங்கானையைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. திலகவதி ஞானசபாபதி அவர்கள் 05-10-2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துகுமாரசாமி அன்னலஷ்மி ஆகியோரின் அருமை மகளும்,
ஞானசபாபதி அவர்களின் அன்பு மனைவியும்,
விரதசானுணி, சத்தியவதி, குணசீலன், அற்புதராணி, கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,
கோகுலதீபன், பிரியாழினி, காந்தரூபன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,
அஷ்வின், அஷ்ஷிகா, தனுஷன், ஹசினி, நத்தானியல், நாராயா ஆகியோரின் பேத்தியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் Ajax Crematorium Visitation Centre (384 Finley Ave., Ajax L1S 2E3 - Phone: (289) 372-3300 இல் *08-10-2023* ஞாயிற்றுக்கிழமை மாலை *5:00* மணிமுதல் *9:00* மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுநாள் திங்கட்கிழமை *09-10-2023* அன்று காலை *8:00* மணி முதல் *11-00* மணியளவில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**திருமதி. திலகவதி ஞானசபாபதி**
(சங்கானை-கனடா)

பிறப்பு: **03-07-1945**
இறப்பு: **05-10-2023**

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
தீபன்: (647) 293-6854
பிரியா: (647) 291-9093
ரூபன்: (647) 330-6565



# மரண அறிவித்தல்



**தோற்றம்:** 23 - 12 - 1955

**மறைவு:** 29 - 09 - 2023

## திருமதி. றமணி கருணானந்தன

(மானிப்பாய், நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி)

**யாழ்ப்பாணம், மானிப்பாய் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. றமணி கருணானந்தன் அவர்கள் 29-09-2023 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்புசாமி - சாவித்திரி தம்பதிகளின் அன்பு மகளும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற பவளரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும்,

கருணானந்தனின் அன்பு மனைவியும்,

ரூபினி, அகிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், Mark, தாரணி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

Gia வின் அன்பு பேத்தியும்,

காலஞ்சென்ற திரு. ரவீந்திரன், றஜனி, அசோகன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி. உதயராணி, திருமதி. ரஞ்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பவானந்தன், சுத்தானந்தன் காலஞ்சென்ற ஜெயானந்தன் ஆகியோரின் மைத்தனருமாவார்.

**அன்னாரின் பூதவுடல்** Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave., Markham Ont. L3R 5Gl) **இல் *08-10-2023* ஞாயிற்றுக்கிழமை மாலை *5:00* மணிமுதல் *9:00* மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு, மறுநாள் திங்கட்கிழமை அதே இடத்தில் *09-10-2023* அன்று காலை *7:00* தொடக்கம் *8:00* மணி வரை பார்வைக்கு பின் *8:30* தொடக்கம் *10.30* வரை கிரியைகள் நடைபெற்று, பின்னர்** Highland Hills Crematorium (12492 Woodbine Ave., Gormley Ont.) **இல் தகனக்கிரியை நடைபெறும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்:**

வீடு - குடும்பத்தினர்: (416) 269-8380

அசோகன் (சகோதரன்): (416) 837-0927 (Cell)

சுத்தானந்தன் (மைத்துனர்): (416) 356-5436 (Cell)

NEWS RELEASE
From the Office of Member of Parliament of Sri Lanka for Colombo District - Leader of Tamil Progressive Alliance (TPA)
Mano GANESAN
01/10/23/Sunday/Colombo

# பௌத்தம் சிங்களத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல

## மனோ, கம்மன்பில, இந்திய தூதர் மத்தியில் கலாநிதி வல்பொல தேரோ

- நடராசா லோகதயாளன்

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දෙමළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka



**பௌ**த்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகிற்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் தொட்டு பாரிய பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டு நாம் பெருமை அடைய வேண்டும் என கொழுப்பு பாமன்கடை ஸ்ரீமகாவிஹாரையின் பிரதம தேரர் மற்றும் அமெரிக்கா கலிபோர்னியா லொஸ் ஏஞ்சலஸ் தர்ம விஜய பௌத்த விகாரையின் ஸ்தாபக பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரர், எம்பிக்கள் மனோ கணேசன், உதய கம்மன்பில, இந்திய தூதர் கோபால் பாகலே ஆகியோர் முன்னிலையில், பெருந்தொகையான விகாரை பக்தர்கள் மத்தியில் கூறியுள்ளார்.

கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரரின் 80 அகவை நிறைவை ஸ்ரீமகாவிஹாரை பக்தர்களின் நிறைவேற்று சபையும், பெருந்தொகையான அண்மைய விகாராதிபதிகளும் இணைந்து பௌத்த தத்துவ நிகழ்வாக கொண்டாடினார்கள். இந்நிகழ்வில் விசேட அழைப்பின் பேரில் எம்பிக்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிவிதுரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில, இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாகலே ஆகியோர் கலந்துக்கொண்டார்கள். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய வண. வல்பொல பியனந்த தேரர் மேலும் கூறியதாவது;



கணிசமான பண்டைய தமிழ் சங்க கால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்கு பெரும் பங்களிப்புகள் வழங்கி உள்ளார்கள். முதலாவது, வண. புத்தகோஷ மகா தேரர் மற்றும் வண. அனுருத்த மகா தேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள். அமெரிக்காவிலும், ஆனந்த குமாரசுவாமி அவர்களே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்த கல்வியை, 1930 களில் போதிக்க ஆரம்பித்தார். ஆகவே பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது உலகத்துக்கு சொந்தமானது. பண்டைய காலங்களில் தமிழ் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்க வேண்டும்.



# ஆசிரியர் தினத்தையொட்டி மன்னார் அல் – அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இரத்த தானம்

- மன்னார் நிருபர் (04-10-2023)





ஆசிரியர் தினத்தையொட்டி மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இணைத்து புதன்கிழமை (4) காலை பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் செய்து வைத்துள்ளனர்.

மன்னார் அவ்-அஸ்ஹர் ம.வி தேசிய பாடசாலையின் சென் ஜோன்ஸ் கழகம் மற்றும் சுகாதார கழகம் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த இரத்ததான முகாம் பாடசாலை அதிபர் எம்.வை.மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் இடம்பெற்ற குறித்த இரத்த தான முகாமில் குறித்த பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொடுக்கும் சுமார் 20 ஆசிரியர்கள் இரத்த தானம் செய்து வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# "சட்டமா அதிபர், பொலிஸ் திணைக்களங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டதால் நம்பிக்கை இழந்துவிட்டோம்" – ரிஷாட் எம்.பி!

(04-10-2023)

சட்டமா அதிபர் திணைக்களம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதால், சிறுபான்மை சமூகங்களின் நம்பிக்கைகள் சீர்குலைந்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற குடியியல் நடவடிக்கைகள் சட்டக்கோவை திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் (03) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர், "அரசியலமைப்புக்கு அடுத்தபடியாக பொலிஸ் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தையே பாதுகாப்புக்காக மக்கள் நம்பியுள்ளனர். குறிப்பாக, சிறுபான்மையினருக்கு நம்பிக்கையாக இத்திணைக்களங்களே உள்ளன. ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இத்திணைக்களங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டிருந்தன. என்னுடைய கைதில் இதை நான் உணர்ந்தேன். நட்ட நடுநிசியில் ஒரு பயங்கரவாதியைப் போல் என்னைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். எந்த விசாரணையும் இல்லாமல் சிறையென்றும் சி.ஐ.டி. என்றும் என்னை அலைக்கழித்தனர்.

கைதானவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றவியல் கோவைகள் சகலதும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. விசாரணைகளை தாமதப்படுத்தி, சிறையில் வைக்கும் நோக்குடன்தான் சட்டமா அதிபர் திணைக்களம் செயற்பட்டது. அரசியல் அழுத்தத்தின் நிகழ்ச்சிநிரல் இதற்குப் பின்னால் இருந்தது.

கைதாகி விடுதலையான எனது சகோதரர் ரியாஜ் பதியுதீனை மீண்டும் கைது செய்யுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பலர் வற்புறுத்தினர். இரு மௌலவிகளைக் கைது செய்து, பொய் சாட்சியம் சொல்லாவிடின் கொலை செய்து விடுவோம் என்றும் சி.ஐ.டி யினர் அச்சுறுத்தியுள்ளனர். பாடசாலை நிகழ்வுக்கு பிரபல சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுடன் பயங்கரவாதி சஹ்ரானும் வந்ததாக பொய் சாட்சியம் கூறும்படியே இம்மௌலவிமார் அச்சுறுத்தப்பட்டனர்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் மஹர சிறைச்சாலைக்கு அருகிலிருந்த பள்ளிவாசலை மூடியுள்ளனர். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில், 1903இல் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட இப்பள்ளிவாசலை மீளவும் திறக்குமாறு கோருகிறேன்.

அல்ஆலிம் பட்டம் பெறுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. இஸ்லாமிய கிதாபுகள், புத்தகங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதும் நிறுத்தப்பட்டுள்ளது.

டொக்டர்களான ரிஷ்வி ஷெரீப், ஷாபி ஷிஹாப்தீன் ஆகியோரைக் கேவலப்படுத்த உச்சளவில் முயற்சித்தது சி.ஐ.டி. இதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் உடந்தையாக கருமமாற்றியது.

தற்போதைய ஜனாதிபதியான ரணில், பிரதமராக இருந்தபோது அவருக்காக சிறப்புடன் வாதாடியவர்தான் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா. ஒரு வரிக் கவிதை எழுதியதற்காக அஹ்னாப் ஜெஸீம் உள்ளிட்ட முஸ்லிம் கவிஞர்களை சிறையிலடைத்தனர். இவை அனைத்துக்குப் பின்னாலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய செயற்பட்டார். சஹ்ரான் என்ற ஒருவனுக்காக முழு முஸ்லிம்களையும் பழிவாங்கும் மனநிலையில் அன்றைய அரச நிர்வாகம் இருந்தது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டை விட்டு ஓடுமளவுக்கு நீதித்துறையில் அழுத்தங்கள் நுழைந்துள்ளன. எமது நாட்டை இன்று பிச்சை எடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றதும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் நிர்வாகம்தான்." என்றும் தெரிவித்துள்ளார்.

# 69% இட ஒதுக்கீட்டை பாதுகாக்க தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

இந்திய செய்திகள்

69% இட ஒதுக்கடு வழங்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கில், சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏன் நடத்தப்படவில்லை? என்று உச்சநீதிமன்றம் வினா எழுப்பினால் அதற்கு தமிழக அரசிடம் பதில் இல்லை. 69% இட ஒதுக்கீட்டை பாதுகாப்பதற்காகவாவது தமிழகத்தில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்'' என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,''பிஹார் அரசைத் தொடர்ந்து ஒடிசா மாநில அரசும், கர்நாடக அரசும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களை வெளியிட முடிவு செய்திருக்கின்றன.

ஒடிசாவில் மே 1 முதல் ஜூலை 10 வரை நடத்தப்பட்ட சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்த விவரங்கள் அம்மாநில அரசிடம் அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதை விரைவில் வெளியிட இருப்பதாக ஒடிசா அரசு அறிவித்துள்ளது.அதேபோல், 2018ம் ஆண்டில் நடத்தப்பட்ட சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்கள் அடிப்படையிலான புதிய அறிக்கையை கர்நாடக அரசிடம் நீதிபதி ஜெயப்பிரகாஷ் ஹெக்டே தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அடுத்த மாதத்துக்குள்ளாக தாக்கல் செய்யும்; அதன்பின் அதன் விவரங்களும் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சமூகநீதியைக் காப்பதற்கான ஒடிசா மற்றும் கர்நாடக அரசின் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை.சமூகநீதியின் தொட்டில் தமிழகம் தான் என்று பெருமைப்பட்டுக் கொள்கிறோம். சமூகநீதி வழங்குவதற்கான பல முன்முயற்சிகள் தமிழகத்தில் இருந்து தான் தொடங்கியுள்ளன.



அதேபோல், சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துதல் என்ற சமூகநீதித் தென்றலும் தென் எல்லையான தமிழகத்திலிருந்து தான் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி, அதனடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கும்படி கடந்த 44 ஆண்டுகளாக நான் வலியுறுத்தி வரும் போதிலும், அதை செய்ய சமூகநீதியின் தொட்டிலான தமிழகத்தை ஆண்ட, ஆளும் அரசுகள் முன்வரவில்லை.பிஹார் மாநிலத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டதை ஒட்டுமொத்த இந்தியாவும் வரவேற்கும் நிலையில், அதுகுறித்து தமிழக அரசோ, தமிழகத்தை ஆளும் திமுகவோ இதுவரை அதிகாரப்பூர்வமாக எந்த நிலைப்பாட்டையும் எடுக்காதது ஏமாற்றம் அளிக்கிறது.

சமூகநீதி சார்ந்து மிகப்பெரிய அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கும் மாநிலம் தமிழகம் தான். சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி அதனடிப்படையில் 69% இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்ற 2010ம் ஆண்டு உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக பழைய புள்ளிவிவரங்களின் அடிப்படையில் 69% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது.அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு, சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஏன் நடத்தப்படவில்லை? என்று உச்சநீதிமன்றம் வினா எழுப்பினால் அதற்கு தமிழக அரசிடம் பதில் இல்லை. 69% இட ஒதுக்கீட்டை பாதுகாப்பதற்காகவாவது தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இட ஒதுக்கீட்டின் அளவு 50 விழுக்காட்டுக்குள் தான் இருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை என்று உயர்வகுப்பு ஏழைகளுக்கான 10% இட ஒடுக்கீட்டு வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நிலையில், தமிழகத்தில் இட ஒதுக்கீட்டின் அளவை அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு மிகவும் அவசியம் ஆகும்.தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்துவது கடினமான ஒன்றல்ல. தமிழக அரசுக்கு இருக்கும் கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி ஒரு மாதத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தி முடிக்க முடியும். ஆனால், அவ்வாறு செய்ய தடையாக இருப்பது எது என்பது தெரியவில்லை. சமூகநீதிக்கு எதிரான தடைகள் எவையாக இருந்தாலும் அவற்றை உடைத்து தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இதற்கான ஆணையை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக பிறப்பிப்பார் என்று நம்புகிறேன்'', என்று அவர் கூறியுள்ளார்.

# ஏ.ஆர்.ரஹ்மானின் நற்பெயருக்கு களங்கம்: அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்துக்கு ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு பதில் 'நோட்டீஸ்'



இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக மன்னிப்பு கேட்பதுடன் ரூ. 10 கோடி இழப்பீடு வழங்க வேண்டுமென இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்துக்கு, ஏ.ஆர்.ரஹ்மான் சார்பில் வழக்கறிஞர் நர்மதா சம்பத் பதில் நோட்டீஸ் பிறப்பித்துள்ளார்.கடந்த 2018ம் ஆண்டு இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்க (அசிகான் 2018) தேசிய மாநாட்டுக்காக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆனால் போலீஸார் உரிய அனுமதி வழங்காததால் அந்நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது. இதற்காக ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழங்கப்பட்ட ரூ.29.50 லட்சத்தை திருப்பிக்கேட்டபோது அதற்காக ஏ.ஆர். ரஹ்மான் வழங்கிய காசோலை பணமின்றி திரும்பியதாக கூறப்படுகிறது.அதையடுத்து ஏ.ஆர்.ரஹ்மான் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் சார்பில் சென்னை மாநகர காவல் ஆணையரிடம் கடந்த சில தினங்களுக்கு முன்பாக புகார் அளிக்கப்பட்டது. மேலும், அந்த சங்கத்தின் சார்பில் வழக்கறிஞர் ஷப்னம் பானு ஏ.ஆர்.ரஹ்மானுக்கு வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பினார்.இந்நிலையில் அந்த நோட்டீஸூக்கு பதிலளிக்கும் வகையில் ஏ.ஆர். ரஹ்மான் சார்பில் வழக்கறிஞர் நர்மதா சம்பத் தற்போது அந்த சங்கத்துக்கு பதில் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது: இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் இந்த வழக்கறிஞர் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2018ல் இசை நிகழ்ச்சி நடத்த திட்டமிட்ட அசிகான் 2018 அமைப்புக்கும், ஏ.ஆர். ரஹ்மானுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஏ. ஆர்.ரஹ்மான் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை. மூன்றாவது நபர்களிடம் இதற்கான தொகையை கொடுத்துள்ள அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கம், தேவையில்லாமல் ஏ.ஆர். ரஹ்மானின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளது. எனவே ஏ.ஆர்.ரஹ்மானுக்கு அனுப்பியுள்ள வழக்கறிஞர் நோட்டீஸை 3 நாட்களில் திரும்பப் பெற்று மன்னிப்பு கோர வேண்டும்.

அத்துடன் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக ரூ.10 கோடியை இழப்பீடாக வழங்க வேண்டும். தவறும்பட்சத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் ரீதியாக சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு வழக்கறிஞர் நர்மதா சம்பத் அந்த நோட்டீஸில் தெரிவித்துள்ளார்.காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசும், மத்திய அரசும் அறிவித்து, தேசிய பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து நிதியைப் பெற்று விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக, மத்திய அரசு அறிவிக்க தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தை முழுமையாக விலக்கிக் கொண்டு புதிதாக முதல்வரின் பயிர் காப்பீடு திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிவித்திட வேண்டும். நீதிமன்ற உத்தரவை மதிக்காத கர்நாடக அரசுக்கு தமிழகத்தின் நெய்வேலியில் இருந்து மின்சாரம் வழங்க மாட்டோம் என்கிற அறிவிப்பையும் தவறாமல், தயங்காமல் வெளியிட வேண்டும்.

மேலும் நிகழாண்டு காவிரி ஆற்று நீரை முழுமையாக நம்பி சம்பா, தாளடி சாகுபடி செய்யலாமா? வேண்டாமா என்பதையும் அதற்கு மாற்று என்ன என்பதையும் தங்களுடைய தஞ்சாவூர் வருகையின் போது அறிவித்திட வேண்டும்'' என கூறியுள்ளார்.

# காவிரி பிரச்சினையில் முதல்வரிடம் எதிர்பார்ப்பது என்ன? தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்கம் பட்டியல்



"நீதிமன்ற உத்தரவை மதிக்காத கர்நாடக அரசுக்கு தமிழகத்தின் நெய்வேலியில் இருந்து மின்சாரம் வழங்க மாட்டோம் என்கிற அறிவிப்பை, தஞ்சாவூருக்கு வருகை தரும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தவறாமல், தயங்காமல் வெளியிட வேண்டும்'' என்று தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு காவிரி உழவர்கள் பாதுகாப்பு சங்கச் செயலாளர் சுவாமிமலை சுந்தர. விமலநாதன், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் உயரதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மனுவில், "நிகழாண்டு கர்நாடகா அரசால், தமிழகத்தின் காவிரி டெல்டா மாவட்டங்களில் சுமார் 2 லட்சம் ஏக்கர் குறுவை சாகுபடி பொய்த்துப் போய்விட்டதால் லட்சக்கணக்கான விவசாயிகள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்கு தொடர்ந்தமைக்காக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அதே வேளையில் காவிரி மேலாண்மை ஆணையம், ஒழுங்காற்று குழு, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை மதிக்காமல் கர்நாடக அரசு அங்குள்ள விவசாயிகளை தூண்டிவிட்டு அந்த மாநிலம் முழுவதும் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்புகள், வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றை மேற்கொண்டு நாடகம் நடத்தியுள்ளது.எனவே, தமிழகத்தில் உள்ள அனைத்து பொதுமக்கள், காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள், தொழிலாளிகளின் ஆதரவுடன் தமிழக அரசின் ஒத்துழைப்போடு, தமிழகம் தழுவிய கடையடைப்பு மற்றும் முழு பொது வேலை நிறுத்தத்துடன் கூடிய முழு பந்துக்கான அறிவிப்பினை தஞ்சாவூருக்கு வரும் தமிழக முதல்வர் அறிவிக்க வேண்டும்.

குறுவை, சம்பா, தாளடி சாகுபடியில் எதிர்கொள்ள இருக்கும் வாழ்வாதாரம், பொருளாதார இழப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உச்ச நீதிமன்றத்தில், கர்நாடக அரசின் மீது மற்றொரு சிறப்பு வழக்கு தொடர்வதற்கான அறிவிப்பினையும் வெளியிட வேண்டும்.


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
26th ANNIVERSARY
தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்துவான் இஞ்சிகுடி திரு. E.M.சுப்ரமணியன் அவர்கள்
தவில் வித்துவான் லயஞானதிலகம் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்
நாதஸ்வர வித்துவான் திரு. T.P.N ராமநாதன் அவர்கள்
தவில் வித்துவான் கோண்டாவில் R. முருகானந்தம் அவர்கள்
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
காலம் : Oct-09-2023 திங்கள்கிழமை
(Thanksgiving Holiday)
நேரம் : மாலை, 4.00 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாதஸ்வர வித்துவான் திரு. G.யுகராஜ் அவர்கள்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 26வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 09ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க Toronto நாதஸ்வர தவில் கலைஞர்களும், நாதஸ்வர வித்வான் இஞ்சிகுடி திரு. E.M. சுப்பிரமணியன் அவர்களின் கெஞ்சிற் கச்சேரி வயலின், மிருதங்கம் கடம், மோர்சிங் பக்கவாத்தியத்துடன் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. அத்துடன் இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் திருமஞ்ஞானம் T.P.N. ராமநாதன் அவர்களும் நாதஸ்வர வித்துவான் G. யுகராஜ் அவர்களும் வருகை தந்து விழாவை சிறப்பிக்க உள்ளார்கள். அத்துடன் Toronto ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை

(3-10-2023)

கிழக்கு மாகாணத்தில் பௌத்தர்கள் இல்லாத பிரதேசத்தில் உள்ளூராட்சி சபையின் அனுமதியின்றி புதிய பௌத்த விகாரை நிர்மாணிப்பதற்கு எதிராக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் குழுவினால் முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த போராட்டத்திற்கு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிலாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதீப் நிஷாந்த குமார செய்த முறைப்பாட்டினை பரிசீலித்த முல்லைத்தீவு நீதவான், பொரலுகந்த விகாரைக்கு அருகாமையில் போராட்டம் நடத்துவதற்கு தடை விதித்து ஒக்டோபர் முதலாம் திகதி உத்தரவிட்டுள்ளார்.

"நிலாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, 6ஆம் மைல்கல், இலுப்பைக்குளம் பொரலுகந்த விகாரை அமைந்துள்ள காணிக்கு முன்னால் உள்ள வீதியிலும் அதனைச் சுற்றியும் 01.10.2023 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த நாளிலோ, நீங்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கவும், அதற்கு நெருக்கமான திகதியில் போராட்டம் நடத்த வேண்டாம் எனவும் இதன்மூலம் உங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது".

திருகோணமலை நீதவான் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள 8 பேரில் தமிழ் பேரவை அமைப்பின் பிரதிநிதிகள் இருவர் அடங்குகின்றனர். நீதிமன்ற உத்தரவில், அந்த அமைப்பு "அடிப்படைவாத சிவில் அமைப்பு" என அழைக்கப்படுகிறது.

செப்டெம்பர் 2ஆம் திகதி மேலதிக நீதவான் தர்ஷனி அண்ணாதுரை பிறப்பித்த உத்தரவில், தமிழ் பேரவை அமைப்பு "அடிப்படைவாத சிவில் அமைப்பு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருகோணமலை பொரலுகந்த விகாரை நிர்மாணப் பணிகளை மக்களின் எதிர்ப்பினால் தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுத்த கிழக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக ஓகஸ்ட் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக திருகோணமலை கோகன்னபுர பாதுகாப்பு அமைப்பு உள்ளிட்ட சில அமைப்புகளின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டதோடு, சில பௌத்த தேரர்கள், திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை முற்றுகையிட்டு ஆளுநரை அச்சுறுத்தினர்.



இது தொடர்பில் விளக்கமளித்த ஆளுநர் செந்தில் தொண்டமான், உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதியின்றி நிர்மாணப்பணிகளுக்கு அனுமதி வழங்க முடியாது தெரிவித்தார்.

அதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய திம்பிரிவெவ ரஜமஹா விகாராதிபதி, வடக்கு, கிழக்கு பிரதான சங்கநாயக்கர் பொல்ஹேன்கொட உபரதன தேரர், பொரலுகந்த ரஜமகா விகாரையின் நிர்மாணப் பணிகளுக்கு உள்ளூராட்சி சபையின் அனுமதி தேவையில்லை என தெரிவித்தார்.

"உள்ளே நுழைய அனுமதி கொடுத்ததாகவும், ஆனால் நிர்மாணப்பணிகளுக்கு அனுமதி கொடுக்கவில்லை எனவும் கூறினீர்கள். ஆளுநர் அவர்களே, உங்களிடமிருந்து கட்டுமான அனுமதி தேவையில்லை. உள்ளூராட்சி மன்றச் சட்டத்தில் விகாரை கட்டுவதற்கு உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதியைப் பெறுமாறு குறிப்பிடப்படவில்லை.சட்டத்தை கவனமாக படியுங்கள். வணக்க ஸ்தலங்ளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மத வழிபாட்டுத் தலங்களுக்கு வரி விலக்கு உண்டு. வரிவிலக்கு பெற்ற பின்னர், அந்த வழிபாட்டுத் தலங்களை நாம் விரும்பியபடி அமைக்க முடியும். அர்ச்சகரின் விருப்பப்படி கோயில் கட்டப்படுகிறது. பிக்குகளின் விருப்பத்திற்கு அமையவே விகாரை அமைக்கப்படும். இவை இரண்டையும் அமைக்க ஆளுநரிடம் சென்று அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. அனுமதிப் பெற வரப்போவதும் இல்லை. எங்களுக்கு அனுமதி தேவையில்லை. நாங்கள விகாரையை நாங்கள் கட்டியெழுப்புவோம்".

# பொலிஸ் ஓய்வறையில் இருந்தவேளை மரணமான சார்ஜன்ட் ஹனீபா தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, நீதியினை நிலைநாட்டுமாறு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுப்பு!



(05-10-2023)

பொலன்னறுவை, வெலிகந்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ஏறாவூரைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் முஹம்மது மக்பூல் ஹனீபா, பொலிஸ் விடுதியில் இரத்தம் தோய்ந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் எமது கட்சியின் உயர்பீட உறுப்பினருமான எம்.எஸ். சுபைர் அவர்கள் என்னிடம் முன்வைத்த வேண்டுகோள் தொடர்பில், தங்களது கவனத்தை செலுத்துமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ் மா அதிபர் சீ.டி.விக்ரமரத்ன ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வேண்டியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்படுள்ளதாவது, "கடமை செய்யும் தமது பொலிஸ் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பொலிஸாரின் விடுதியில் வைத்து இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது, நீதியினை நிலைநாட்டும் பொலிஸாருக்கே இந்த நிலையா? எனக் கேட்கத் தோன்றுகின்றது.

நாட்டின் தற்போதைய நிலையில், காவல்துறையினர் மீது பொதுமக்கள் கொண்டுள்ள சந்தேகங்களுக்கு மத்தியில், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கும் சிறுபான்மை காவல்துறை அதிகாரிகளுக்கு இழைக்கப்படும் இவ்வாறான கொடூரங்கள் நிறுத்தப்படல் வேண்டும் என்பது மட்டுமல்லாது, இப்படிப்பட்ட ஈனச்செயல்களை செய்பவர்கள் எவராக இருந்தாலும் தராதரம் பாராது சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகிய தங்களது கடமையாகும்."

அதேவேளை, வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி இந்த மரணம் தொடர்பில் கொடுத்துள்ள அறிக்கையானது, கூறிய ஆயுதத்தால் குத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குறிப்பிட்டுள்ளதால், இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் இருக்கும் திட்டம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மர்ஹூம் மக்பூல் முஹம்மது ஹனீபா மிகவும் நேர்மையான ஒரு அதிகாரி என்றும் ஊழல், மோசடிகளை வன்மையாக எதிர்க்கும் மனப்பக்குவத்தை கொண்ட ஒருவராகவும் காணப்பட்டதாக பிரதேச மக்கள் சான்றுபகர்ந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள அவர், மக்பூல் ஹனீபா பொலிஸ் நிலையத்தின் அவசர அழைப்பு பிரிவான 119க்கு பொறுப்பாக செயற்பட்டு வந்துள்ளதாகவும் இதனை கவனத்தில் கொள்ளுமாறு தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான கொடூரங்கள், இனியும் இடம்பெறாதவாறு சட்ட நடவடிக்கையெடுக்குமாறும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பநிலையினை கவனத்திற்கொண்டு, அவர்களுக்கான நீதியினை உறுதிப்படுத்துமாறும் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் பொதுமக்கள் பாதுகாப்பு.

# இலங்கையின் நீதித்துறை நாட்டை சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும் சுதந்திரமாக நடமாட வைத்துள்ளது

- சுகாஷ் சீற்றம்!



முல்லைத்தீவு நீதிபதி திரு. சரவணராஜா அவர்களுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் மற்றும் அவரது பதவி விலகல் என்பவை, சிறீலங்காவின் நீதித்துறைக் கட்டமைப்புச் சுயாதீனமாக இல்லை என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் நீதித்துறை சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கும், அதே மேலாதிக்கத்தின் பெயரால் நாட்டை நாசம் செய்தவர்களையும் சூறையாடியவர்களையும் கொலையாளிகளையும் சுதந்திரமாக நடமாட வைத்துள்ள து.

இந்த விடயங்களை வெளிச்சம் போட்டுக்காட்டும் சம்பவமாக நீதிபதி திரு. சரவணராஜாவின் சுயாதீன செயற்பாட்டுக்கு இடையூறான சட்டமா அதிபரின் தலையீடு மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் அமைந்திருந்தன.

இலங்கையின் நீதித்துறையில் அரசியல் தலையீடு, சிங்கள - பௌத்த தேசத்தின் நலன்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாகவே சிறீலங்கா அரசால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவழிப்புக்கும் நடைபெற்றுவரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கும் சர்வதேச நீதி விசாரணையை எமது அரசியல் இயக்கம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையின் அரச கட்டமைப்பு, நீதி கோரும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களையும் அதற்காகக் குரல் கொடுத்த சட்டத்தரணிகளையும் அச்சுறுத்தி வந்ததன் தொடர்ச்சியாக இன்று நீதிபதிக்கே அச்சுறுத்தல் விடுத்து தீர்ப்பை மாற்றக் கோரும் அளவுக்கு மோசமாகச் செயற்பட்டிருக்கிறது.

இந்த மோசமான நிலைமைக்கு எதிராகத் தமிழ் மக்கள் எழுச்சியடைய வேண்டும். இதற்கான நீதி கோரிய போராட்டங்களில் தமிழ் மக்களைக் கலந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# ஈழத்துத் திருக்கோயில்கள்

1068



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
## கொக்குவில், யாழ்ப்பாணம்

இவ்வாறான ஆலயத்திற்கு, தீர்த்தக்கேணியொன்று தேவையென்பதை அன்பர்கள் உணாந்தனர். கோயிலின் வடகிழக்குப்பக்கமாக அமரர் பொன்னம்பலம் காசிப்பிள்ளை அவர்களால் தர்மசாசனம் செய்யப்பட்ட நிலப்பரப்பிலே, கோயிலுக்குரிய தீர்த்தக்கேணியை அமைக்க எண்ணங்கொண்டனர். திரு. காசிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்களின் ஒத்துழைப்புடன், அமரர் வல்லிபுரம் நவரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது துணைவியார் சிவஞானவல்லி அம்மையாராலும், அவரது குடும்பத்தினராலும் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டது. இத்தீர்த்தக்கேணியில் 2001 ஆம் ஆண்டு, மஞ்சவனப்பதியில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் தீர்த்தமாடியமை குறிப்பிடத்தக்கதாகும். இதே ஆண்டில் பொறியிலாளா இராசரத்தினம் நடராசா அவர்களாலும், அவர்தம் குடும்பத்தினராலும் ஆரம்பிக்கப்பட்ட கோபுர முன்மணி மண்டபப்பணி, நிர்வாகத்தினரதும் முயற்சியாலும், இளந்தொண்டர்களது சரியைத் தொண்டினாலும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தின் வெளிவேலைகள் பல நிறைவுபெற்ற வேளையில், உட்பிரகார மண்டபவேலைகளை நிறைவேற்ற வேண்டிய நிலை காணப்பட்டது. இப்பணிக்காக, 2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சினால், எம். பி. தவராஜா அவர்களால் உட்பிரகாரப்பணிக்காக பதினைந்து இலட்சரூபா வழங்கப்பட்டது. இதன்பின்னர் இரண்டரை இலட்சரூபா பெறுமதியான காசோலை, மேற்படி அமைச்சினால் பிரதேசசபைத் தலைவராக இருந்த மணிபல்லவராஜன் அவர்களால் வழங்கப்பட்டது.

இப்பணிகளின் மேற்பார்வையாளர்களாக பொறியியலாளர் திரு. இ. நடராசா, பிரதேசசபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் மற்றும் பிரதேச உதவிச் செயலர் வேன்முருகோன்பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களோடு நிர்வாகசபையின் ஒத்துழைப்புடனும், முருகனடியார்கள் மனமுவந்தளித்த நிதியுதவியுடனும் உட்பிரகார முன்பகுதி மண்டபம் கொங்கிறீற்றால் கட்டிமுடிக்கப்பட்டது. இவ்வாறான பலபணிகள் நிறைவேற்றப்பட்டு, புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா நூதன இராஜகோபுரபிரதிஷ்டா நவகுண்டபட்ஷ மகாகும்பாபிஷேகம், 2002 ஆம் ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கும்பாபிஷேகத்தினை பிரதிஷ்டாபூஷணம் சிவாச்சாரியமணி சிவப்பிரம்மஸ்ரீ இரங்க. வரதராஜக்குருக்கள் தலைமையில், மற்றும் பல சிவாச்சாரியார்களின் ஆதரவுடன் சிறப்பாக நிறைவேற்றிவைத்தார்கள். இதன் பின்னரும் காலத்திற்குக் காலம் இன்றுவரை பல பணிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்திலே இலங்கையில் உள்ள யோகிகளும், ஞானிகளும் கால்பதித்துச் சென்றுள்ளனர். இந்தியாவிலிருந்தும் பல மகான்கள் காலத்திற்குக் காலம் வருகை தந்து சிறப்பித்துள்ளனர். 1916 ஆம் ஆண்டு இவ்வாலயத்திற்கு வருகை தந்த சங்கர சுப்பையர் என்னும் கல்விமான், மஞ்சவனப்பதியிலே உபந்நியாசம் செய்யும்பொழுது, "இத்தேவஸ்தானம் பலவழிகளிலும் சிறந்தோங்கப் போகின்றது" என்று குறிப்பிட்டார்கள். அப்பெரியவரின் வாக்குப் பலித்து இவ்வாலயம் இன்று பல வழிகளிலும் சிறப்புற்றோங்கும் ஆலயமாக விளங்குகின்றது. இலங்கையைச் சேர்ந்த கோடாலிச் சாமியார், பண்டிருட்டிச் சாமியார், சின்னையாச் சாமியார், குடைச் சாமியார், யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள், போன்றவர்கள் இவ்வாலயத்திற்கு வருகைதந்து பெருமைப்படுத்தியுள்ளனர். யோகர்சுவாமிகளின் அருள்நோக்கத்தால், ஆறுமுகக் கடவுளுடைய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டது. இவர்களோடு இந்தியாவிலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார்சுவாமிகள், பன்றிமலைச்சுவாமி, அத்வர்யு சுவாமிகள், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த திருஞானசம்பந்தபிள்ளை போன்றவர்களும் இங்கு வருகை தந்து தேவஸ்தானம் வளர உதவியுள்ளார்கள்.

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன்மீது கிருபானந்தவாரியார் சுவாமிகளும், கொக்குவில் குமாரசாமிப்புலவர் அவர்களும் பல பாடல்களை இயற்றியுள்ளனர். வாரியார் சுவாமிகள் மஞ்சவனப்பதி பஞ்சரத்தினப்பா என்றும், திருப்புகழ்சந்த மெட்டில் முருகன்மீது குகப் புகழும் பாடியுள்ளார். கொக்குவில் குமாரசாமிப் புலவர் அவர்கள், மஞ்சவனப்பதிகம், திருவூஞ்சல், ஏசல் என்பவற்றைப் பாடியுள்ளார். வாரியார் சுவாமிகள் எழுதிய திருப்புகழ் அமிர்தக் கட்டுரையில், "கண்டேன் கந்தனை" என்று மஞ்சவனப்பகுதி முருகன் திருவருளை வியந்து எழுதியமை குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நல்ல பக்தனாக, கல்விமானாக, ஒழுக்கசீலராக, மகாஞானியாக தேவதெண்டுகள் செய்தவராக இன்றுவரை இந்துமக்களால் போற்றப்படும்வாரியார் சுவாமிகள், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தோடு ஆழ்ந்த தொடர்பு கொண்டவராக விளங்கியுள்ளார். ஆதிகாலத்தில் ஒருவேளை பூசை மாத்திரமே நடைபெற்ற கோயிலாகக் காணப்பட்ட கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், இன்று பெருவளாச்சி கண்டு காணப்படுகின்றது. இவ்வாறான வளர்ச்சிக்கு காலத்திற்குக் காலம் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகசபை, திருப்பணிச்சபை, முருகபக்தர்களின் தொண்டு என்பவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. காலத்திற்குக் காலம் இவ்வாலயத்தில் பல்வேறு மாற்றங்களும், பணிகளும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆலயங்கள் வெறும் வழிபாட்டிடங்களாக அமையாது, வழிபடுவோரையும் இறைவனையும் இணைக்கின்ற பக்தி நிலையங்களாகவும் அமைந்து, இந்துக்களுடைய கலாச்சார, பண்பாட்டை வளர்க்கின்ற பணிகளையும் உலகெங்கிலுமுள்ள இந்து ஆலயங்கள் செய்து வருகின்றன. இவ்வாறான ஆலயங்கள் தாயகத்தில் தொடர்ந்தும் வளர்ச்சி பெறவும், தமிழர்களுடைய எஞ்சிய வாழ்விட அடையாளங்களைத் தொடர்ந்து காப்பாற்றவும் உதவும் ஆலயங்களைப் பேணுவது, புலம்பெயர்ந்த தமிழ் மக்களுடைய பெரும்பணியாகக் காணப்படுகின்றது.

"பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி".

**- வளரும்...**

# அன்பின் தொனி - 707

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**ஒப்புகொடுத்தல் (அற்பணிப்பு)** Commitment

**கனி கொடுக்கிற கிறிஸ்தவனுக்கான ஏழு வகையான ஒப்புக்கொடுத்தல்**

Seven types of Commitments of Highly Fruitful Christians

### 1. முழு இருதயத்தோடு இயேசு கிறிஸ்துவின் ஆழுகைக்கு தன்னை அர்ப்பணித்தல்

Wholehearted surrender to the Lordship of Jesus Christ

*அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை ரட்சிக்க விரும்பு கிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.*

**- மத்தேயு 16: 24-25**

### 2. தேவனுடைய இராட்சியத்திற்காக சேவிக்கின்ற வாழ்க்கை

Proactive living as a Kingdom servant

*அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களி ன்படி போதிக்கக்கடவன், ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன், எல்லாவற்றி லேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக, அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.* **-1 பேதுரு 4: 10-11**

### 3. கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழ வேண்டுமென்ற வைராக்கியமுள்ள வாழ்க்கை

Intentional and contagious witness for Christ

*சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையா யிருக்கிறது, சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ. நான் உற்சாகமாய் அப்படிச் செய்தால் எனக்குப் பலன் உண்டு, உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதே. ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப் பதே எனக்குப் பலன். நான் ஒருவருக்கும் அடிமைப் படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.* **- 1 கொரிந் 9: 16-19**

### 4. துயாள குணமுள்ள உள்ளத்தோடு பொருளாதாரத்தை கட்டுப்படுத்திய வாழ்க்கை

Generous financial stewardship

*பின்னும் நான் சொல்லுகிற தென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன், உற்சா கமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரண முடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாய் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.* **- 2 கொரிந். 9: 6-8**

### 5. வாராவாரம் ஐக்கியமாக ஒன்று கூடி ஆராதிப்பது

Gathering weekly for fellowship and worship

*என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலைவிலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மன மகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன், கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.* **- ஏசாயா 58: 13-14** **தொடரும்...**

2000 அருள்நிறை மரியே செபத்தொடர் ஐப்பசி 14ம் திகதி

2001ம் ஆண்டிலிருந்து இவ் பக்தி முயற்;சியானது நடைபெற்று வருகிறது. இவ்வருட செப வழிபாடானது எம் உள்ளத்திலும், இல்லத்திலும,; பல இடர்பாடுகள் மத்தியில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களின் துன்பதுயரங்கள் மற்றும் நெருக்கடிகளிலும் இருந்து விடிவு பெறவும் முழுதின வழிபாட்டை ன்னெடுத்துள்ளோம். இதில் நாம் அனைவரும் பங்குபற்றி செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்கிறோம்.

திகதி: அக்டோபர் 14ம் திகதி சனிக்கிழமை,2023
இடம்: தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு ஆலயம்
நேரம் காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை

கிறஸ்தவர்கள் அனைவரும் இத்தொடர் செபமாலையில் ஓரே குடும்பமாக பங்குபற்றி மேல் சொல்லப்பட்ட கருத்துக்களுக்காக செபிப்போம்.

மேலதிக விபரங்களுக்கு

அருட்திரு. கொலின்ஸ் சார்ள்ஸ் அடிகளார் 416 264 6544

கனடிய செய்திகள் Canadian News

## A New Real Estate Brokerage named 'LUXURY HOMES WORLD BROKERAGE' owned and operated by Susie & Inthiran had their Grand Opening Ceremony on Sunday, October 1st, 2023

## திரு.திருமதி. இந்திரன் – சுசி தம்பதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதிய 'LUXURY HOMES WORLD BROKERAGE' நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பெற்றது

திரு.திருமதி. இந்திரன்-சுசி தம்பதியின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் புதிய 'LUXURY HOMES WORLD BROKERAGE' நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 01-10-2023 அன்று பிற்பகல் திறந்து வைக்கப்பெற்றது.

Home Life Future Realty Inc, நிறுவனத்தின் அதிபர் செல்வா வெற்றிவேல் அவர்கள் நாடாவை வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தார்.

அழைக்கப்பெற்ற நண்பர்கள் மற்றும் வீடு விற்பனை முகவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் திறப்பு விழா வைபவத்தில் கலந்து சிறப்பித்து தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

கனடா உதயன் உட்பட பல ஊடக நண்பர்களும் கலந்து சிறப்பித்து புகைப்படங்களை எடுத்து தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

இந்த நிறுவனம் 5762 HWY 7 Road - Unit 203, Markham, Ontario L3P 1A8 என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது. தொலைபேசி இலக்கம்: (416) 706 5000.
















## "உதயன் பல்சுவைக் கலை விழா"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் கிடைக்கும் தமிழர் வர்த்தக நிலையங்கள்

எதிரவரும் ஒக்டோபர் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ள "உதயன் பல்சுவைக் கலை விழா"வில் நடனம் நகைச்சுவை கவிதா அரங்கு மற்றும் "ஆரோசை" இசைக் குழுவினர் நீண்ட மெல்லிசை நிகழ்ச்சி.

இதில் "பொன்னியின் செல்வன்" புகழ் வி.எம். மகாலிங்கம் சிறப்புப் பாடகராக தோன்றுகின்றார்.

உதயன்"விற்கான 15 டாலர்கள் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்கள் தற்போது பின்வரும் தமிழர் வர்த்தக நிலையங்களில் விற்பனையாகின்றன.

1. கென்னடி - எல்ஸ்மெயர் சந்திப்புக்கு அருகில் உள்ள சாமி அன் சன்ஸ் நிறுவனத்தில். (416) 298-1598
2. மார்க்கம் - மெக்னிக்கல் சந்திப்பில் அமைந்துள்ள Majestic City வர்த்தக வளாகத்தில் Imma Trading Company. (416) 609-0827
3. கென்னடி - எக்ளிங்டன் சந்திப்புக்கு அருகில் உள்ள சங்கர் அன் கோ நிறுவனத்தில். (416) 759-4916




# மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணைமைந்தனின் நான்கு நூல்கள் ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன

மொன்றியால் வாழ் எழுத்தாளரும் நூலாசிரியருமான சண்முகராஜா வீணைமைந்தன் எழுதிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 23ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன.

நான்கு நூல்கள் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பெற்ற சில புகைப்படங்கள் இங்கு காணப்படுகின்றன.

மேற்படி நான்கு நூல்களின் வெளியீட்டு விழா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரைகள் மற்றும் நூல்கள் பற்றிய ஆய்வுரைகள் ஆகிய இடம்பெற்றன.


முதலில் ஆரம்ப உரையாற்ற கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் அழைக்கப்பெற்றார். தொடர்ந்து அவர் விழாவிற்கு தலைமை தாங்கும் வண்ணம் "உதயன்" லோகேந்திரலிங்கம் அவர்களை மேடைக்கு அழைத்தார்.


தொடர்ந்து வாழ்த்துரைகள் மற்றும் நூல்களின் ஆய்வுரைகள் ஆகியன இடம்பெற்றன. காத்திரமான நூல்களாக விளங்கிய எழுத்தாளர் வீணைமைந்தனின் படைப்புக்கள் நேர்த்தியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றன.

அழைக்கப்பட்ட நண்பர்கள் மற்றும் இலக்கியவாதிகள் வர்த்தகப் பிரமுகர்கள் நூலின் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். முதற் சிறப்புப் பிரதியை முன்னாள் கனடிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.




























































# இது எப்படி இருக்கு! ஓடாத உழவு இயந்திரங்களுக்கு ஒரு கோடி செலவு

- நடராசா லோகதயாளன்

Irrigation Department - Regional Workshop - Rambewa
Ministry of Irrigation
REPAIR INVOICE

| | | | |
|---|---|---|---|
| Subject | Detailed invoice for the Repair Of RB-9015 Mahindra 575 DI Farm Tractor | Ref : | SMID/55/02 |
| Date: | 2022.08.05 | Job. No : | VV/1/2023/T-01 |
| Attention: | GA, Vavuniya District | Invoice No | RME/Ram/Trac/IN/2022/001 |

Repairs Completed.
1 Gear box overhaul work.
2 Brake, Steering, Cooling, Fuel Systems repair work, Tinkering and Painting work, Electrical System repair and Other necessary works.

| SE. NO | DESCRIPTION | UNIT | QTY | RATE | AMOUNT |
|---|---|---|---|---|---|
| 1.0 | Space Parts | | | | |
| 1.1 | Battery, 12v/90Ahs | No | 01 | 24,900.00 | 24,900.00 |
| 1.2 | Operator Seat Assy | No | 01 | 19,500.00 | 19,500.00 |
| 1.3 | Engine Oil Filter | No | 01 | 980.00 | 980.00 |
| 1.4 | Fuel Filter set | No | 01 | 530.00 | 530.00 |
| 1.5 | Hydraulic Filter | No | 01 | 1,275.00 | 1,275.00 |
| 1.6 | Air Cleaner Filter | No | 01 | 1,100.00 | 1,100.00 |
| 1.7 | Coolant Box | No | 01 | 1,590.00 | 1,590.00 |
| 1.8 | Radiator Hose, Top | No | 01 | 1,350.00 | 1,350.00 |
| 1.9 | Radiator Hose, Bottom | No | 01 | 1,395.00 | 1,395.00 |
| 1.10 | By-pass Hose | No | 01 | 390.00 | 390.00 |
| 1.11 | Air Cleaner Hose | No | 01 | 1,950.00 | 1,950.00 |
| 1.12 | Alternator Belt | No | 01 | 1,150.00 | 1,150.00 |
| 1.13 | Fan Belt | No | 01 | 2,150.00 | 2,150.00 |
| 1.14 | Gear Box Packing Set | No | 01 | 1,250.00 | 1,250.00 |
| 1.15 | Top Cover O'Ring Kit | No | 01 | 1,200.00 | 1,200.00 |
| 1.16 | Brake Pedal Spring | No | 02 | 390.00 | 780.00 |
| 1.17 | Brake Activating Disc | No | 02 | 5,560.00 | 11,120.00 |
| 1.18 | Brake Plate | No | 04 | 1,280.00 | 5,120.00 |
| 1.19 | Brake Boot | No | 02 | 380.00 | 760.00 |
| 1.20 | Brake Bolt | No | 04 | 60.00 | 240.00 |
| 1.21 | Brake Plate Attachment Set | No | 02 | 590.00 | 1,180.00 |
| 1.22 | Bull Pinion Housing | No | 01 | 13,900.00 | 13,900.00 |
| 1.23 | Bull Pinion Shaft | No | 01 | 11,200.00 | 11,200.00 |
| 1.24 | Bull Pinion Seal | No | 02 | 390.00 | 780.00 |
| 1.25 | Diff Lock Shaft | No | 01 | 1,350.00 | 1,350.00 |
| 1.26 | Diff Lock Bushing | No | 01 | 370.00 | 370.00 |
| 1.27 | Diff Lock Spring | No | 01 | 270.00 | 270.00 |
| 1.28 | Diff Lock seal | No | 01 | 400.00 | 400.00 |
| 1.29 | Clutch Pin & Cottor Pin | No | 05 | 30.00 | 150.00 |
| 1.30 | Clutch Spring | No | 01 | 390.00 | 390.00 |
| 1.31 | Lift Arm Bushing | No | 04 | 890.00 | 3,560.00 |
| 1.32 | Lift Arm Seal | No | 02 | 550.00 | 1,100.00 |
| 1.33 | PTO Seal | No | 01 | 590.00 | 590.00 |
| 1.34 | PTO Liver Seal | No | 01 | 355.00 | 355.00 |
| 1.35 | Spider Washer Set | No | 01 | 2,150.00 | 2,150.00 |

16 வயதினிலே படத்திலே வரும் “இது எப்படி இருக்கு” இன்றளவும் மிகவும் பிரபலம். அந்த செலவடை, முறையற்ற செயல்களை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் வழக்கம் வந்துவிட்டது. அப்படித்தான் ஒரு நிலை வவுனியாவில் ஏற்பட்டுள்ளது.

11 உழவு இயந்திரங்களின் திருத்த செலவு 99 இலட்சத்தைக் கடந்தது தொடர்ந்தும் பயன்பாடற்ற நிலையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள அவலம் அந்த மாவட்டத்தில் நீடிக்கின்றது.

வவுனியா மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்திற்கு சொந்தமான 11 உழவு இயந்திரங்கள் 99 இலட்சத்து 90 ஆயிரத்து 912 ரூபா 50 சதம் செலவில் திருத்தம் செய்யப்பட்ட நிலையில் அவை தற்போதும் பாவனையின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை கள விஜயத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.36 | Dowel Pin, Large | No | 08 | 60.00 | 480.00 |
| 1.37 | Dowel Pin, Small | No | 08 | 55.00 | 440.00 |
| 1.38 | Tie Rod, RH | No | 01 | 3,450.00 | 3,450.00 |
| 1.39 | Tie Rod, LH | No | 01 | 2,950.00 | 2,950.00 |
| 1.40 | Tie Rod Set | No | 01 | 3,800.00 | 3,800.00 |
| 1.41 | Rear Axle Seal | No | 04 | 560.00 | 2,240.00 |
| 1.42 | Front Axle | No | 02 | 6,950.00 | 13,900.00 |
| 1.43 | Front Hub Seal | No | 02 | 390.00 | 780.00 |
| 1.44 | King Pin Bearing | No | 02 | 650.00 | 1,300.00 |
| 1.45 | King Pin Bushing | No | 04 | 1,350.00 | 5,400.00 |
| 1.46 | Front Support Bush Set | No | 01 | 2,250.00 | 2,250.00 |
| 1.47 | Center Pin | No | 01 | 3,650.00 | 3,650.00 |
| 1.48 | Center Pin Bushing | No | 02 | 795.00 | 1,590.00 |
| 1.49 | Bearing, NJ309 | No | 02 | 3,950.00 | 7,900.00 |
| 1.50 | Bearing, 6213 | No | 02 | 3,950.00 | 7,900.00 |
| 1.51 | Orifice Filter | No | 01 | 890.00 | 890.00 |
| 1.52 | O-Ring | No | 01 | 70.00 | 70.00 |
| 1.53 | Mud Guard Bolt | No | 04 | 390.00 | 1,560.00 |
| 1.54 | Hose Clip, 2" | No | 04 | 50.00 | 200.00 |
| 1.55 | Hose Clip, 1" | No | 02 | 30.00 | 60.00 |
| 1.56 | Washer, 5/8" | No | 24 | 10.00 | 240.00 |
| 1.57 | Bolt, 5/8"x5" | No | 08 | 165.00 | 1,320.00 |
| 1.58 | Bolt, 5/8"x6" | No | 08 | 230.00 | 1,840.00 |
| 1.59 | Meter Cable | No | 01 | 1,760.00 | 1,760.00 |
| 1.60 | Alternator IC Regulator | No | 01 | 690.00 | 690.00 |
| 1.61 | Starter Switch | No | 01 | 2,950.00 | 2,950.00 |
| 1.62 | Fender Lamp, Front | No | 02 | 1,490.00 | 2,980.00 |
| 1.63 | Fender Lamp, Rear | No | 02 | 1,960.00 | 3,962.00 |
| 1.64 | Fuse Box | No | 01 | 1,090.00 | 1,090.00 |
| 1.65 | Wire, 14G | m | 24 | 50.00 | 1,200.00 |
| 1.66 | Wire Casing, 1" | m | 05 | 140.00 | 700.00 |
| 1.67 | Wire Casing, 3/4" | m | 05 | 120.00 | 600.00 |
| 1.68 | Wire Casing, 1/2" | m | 05 | 90.00 | 450.00 |
| 1.69 | Wire Casing, 1/4" | No | 05 | 90.00 | 450.00 |
| 1.70 | Insulation Tape | No | 10 | 80.00 | 800.00 |
| 1.71 | Wire Socket, 2 Pin | No | 08 | 75.00 | 600.00 |
| 1.72 | Wire Socket, 3 Pin | No | 04 | 170.00 | 680.00 |
| 1.73 | Wire Socket, 6 Pin | No | 04 | 135.00 | 540.00 |
| 1.74 | Wire Socket, 8 Pin | No | 03 | 195.00 | 585.00 |
| 1.75 | Wire Lug | No | 40 | 26.25 | 1,050.00 |
| 1.76 | Horn Clip, Large | No | 10 | 25.00 | 250.00 |
| 1.77 | Horn Clip | No | 60 | 10.00 | 600.00 |
| 1.78 | Horn Boot | No | 30 | 10.00 | 300.00 |
| 1.79 | Fuse | No | 10 | 20.00 | 200.00 |
| 1.80 | Fuse Holder | No | 03 | 190.00 | 570.00 |
| 1.81 | Signal Flasher | No | 01 | 390.00 | 390.00 |
| 1.82 | Wire Tie | No | 20 | 20.00 | 400.00 |
| 1.83 | Side Link Bar | No | 02 | 14,000.00 | 28,000.00 |

வவுனியா மாவட்டத்தின் கமநல சேவை நிலையங்களிற்கு இந்தியத் தூதரகத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 103 உழவு இயந்திரங்கள் உரிய பாவனையோ அல்லது போதிய பராமரிப்போ இல்லாத நிலைமைகள் நீடித்திருக்கையில் அவற்றில் 11 உழவு இயந்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு திருத்தப் பணிகளை முன்னெடுப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டது.

அவ்வாறு அளிக்கப்பட்ட அனுமதிக்கு அமைவாக, வவுனியா மாவட்ட செயலகத்தினால் 11 உழவு இயந்திரங்களும் வவுனியாவில் இருந்து அநுராதபுரத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்டு திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த 11 உழவு இயந்திரங்களிற்கும் திருத்த அனுமதி கோரப்பட்டபோது அரச நியமங்களிற்கு ஏற்ப கொள்வனவு அல்லது திருத்தங்கள் தனியாரிடம் எனில் கூறுவிலை கோரலின் அடிப்படையிலும் சக அரச திணைக்களம் எனில் நேரடியாகவே செல்ல முடியும் என்ற பொது நியதி உள்ளது.

அதனடிப்படையில், அநுராதபுரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வாகனத் திருத்தப் பிரிவினால் குறித்த 11 உழவு இயந்திரங்களுக்கான திருத்தச் செலவு மதிப்பீடு வழங்கப்பட்டு அதனடிப்படையில் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த உழவு இயத்திரங்களை ஏற்றிச் சென்றமைக்கான செலவாக 3 இலட்சத்து 41 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதோடு அதன் திருத்தக் கூலியா 45 இலட்சம் ரூபாவும், எஞ்சியவை உதிரிப்பாக கொள்வனவனவாகவும் செலவிடப்பட்டுள்ளதாகவும் அதற்கான நிதியை விவசாயத் திணைக்களம் வழங்கியுள்ளதாகவும் சிட்டையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியா கமநல சேவை நிரையத்தின் 11 உழவு இயந்திரங்களையும் திருத்தப்பணிகளுக்காக வவுனியா மாவட்ட செயலகம், நீர்ப்பாசன வாகனத்திருத்தற் பிரிவுக்கு அனுப்பி வைத்திருந்த நிலையில், அதற்கான 9 மில்லியன் 990 ஆயிரம் 912 ரூபா 50 சதம் திருத்தப்பணிச் செலவை விவசாயத் திணைக்களம் வழங்கி குறித்த உழவு இயந்திரங்கள் மீண்டும் கமநல சேவை நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனினும், கமநல சேவைத்திணைக்களத்தின் உழவு இயந்திரங்களை திருத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நேரடியாக விவசாயத்திணைக்களம் நேரடியாக நிதியளிக்காது, மாவட்டச் செயலகத்தின் ஊடாக திருத்தப்பணிகள் எடுக்கப்பட்ட முயற்சிகளின் அடிப்படையில் திருத்தப்பணிகள் செய்யப்பட்டதன் பின்னர் அதற்கான நிதியை விவசாயத் திணைக்களம் வழங்கியமைக்கான காரணம் என்ன என்பது குறித்து கேள்விகள் கட்டுரையாளரால் எழுப்பப்பட்டது.

அதன்போது, குறித்த உழவு இயந்திரங்கள் விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளிற்காக நியாயமான விலையில் உழவுப் பணியை மேற்கொள்வதற்காக திருத்தம் செய்து தருமாறு கமநல அபிவிருத்தி திணைக்களம் கோரியதன் பெயரில் திருத்தப்பணிகளை நிறைவு செய்து வழங்கியதாக மாவட்டச் செயலகம் அளித்துள்ள எழுத்து மூலமான பதிலில் தெரிவிக்கின்றது.

இதில் சிறப்பு என்னவென்றால், உழவு இயந்திரங்களை திருத்துவதற்கும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரே அனுமதியும் வழங்கியுள்ளார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய டயமாகும்.

இதேவேளை, திருத்தம் செய்யப்பட்ட ஒவ்வொரு உழவு இயந்திரங்களிற்குமாக கொள்வனவு செய்த உதிரிப்பாகங்களின் பெறுமதியினைவிடவும் திருத்தச் செலவு, ஏற்றி இறக்கல் செலவு, கண்காணிப்புச் செலவு, ஊழியர் செலவு, எதிர்பாராச் செலவு எனப் பட்டியலிடும் தொகைகளே மிக அதிகமாக காணப்படுகின்றன.

இதிலே 11 உழவு இயந்திரங்களிற்கும் றிம், மக்காட் உள்ளிட்டவைக்கு வர்ணம் பூசியதா 550 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக காணக்கு காண்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு திருத்தம் செய்த உழவு இயந்திரங்கள் அனைத்தும் 2022ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் திருத்தம் செய்தபோதும் அதற்கான சிட்டையாக வழங்கப்பட்ட விலைப்பட்டியல் இலக்கங்கள் அனைத்தினதும் தொடரிலக்கங்கள் அப்போது தான் இலக்கம் ஒன்றில் இருந்தே ஆரம்பித்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு திருத்தப்பணிகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகுதியில், 40 மில்லியன் ரூபா உதிரிப்பாக செவாகவும் ஏனைய 60 சதவீதம் திருத்தச் செலவு, நிர்வாகச் செலவு, உதவியாளர் செலவு எனக் கணக்கிடப்பட்டுள்ளதனால் திருத்துவதற்கு முன்னர் இந்த உழவு இயந்திரங்கள் காணப்பட்ட பெறுமதியில் இருந்து 10 மில்லியன் ரூபா அதிகரித்து காணப்படவில்லை மாறாக வெறுமனே 5 மில்லியன் ரூபா பெறுமதி மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு அதிகமாக செலவு செய்து திருத்தம் செய்ததாக கூறப்படும் 11 உழவு இயந்திரங்கள் ஏன் பாவனையின்றி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா கமநல சேவைத்திணைக்களத்தினைக் கோரியபோது, மிக நீண்ட இழுத்தடிப்புக்களுக்குப் பின்னர் மூன்று உழவு இயந்திரங்கள் தற்போது மீண்டும் இயங்கவில்லையென கமநல சேவைத் திணைக்களம் அளித்துள்ள பதிலில் தெரிவித்துள்ளது.

மேற்படி, 11 உழவு இயந்திரங்களிலும் மேற்கொண்ட திருத்தப் பணியினை தனியாரிடம் கூறுவிலை கோரி மேற்கொண்டிருப்பின் சுமார் 600 ஆயிரம் (60 லட்சம்) ரூபாவுடன் மேற்கொண்டிருக்க முடியுமென வவுனியா மாவட்டத்தில் உழவு இயந்திர திருத்தகம் ஒன்றை நீண்டகாலமாக நடாத்தும் வாகன திருத்த உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், வவுனியா கமநல சேவைத் திணைக்களத்துக்குச் சொந்தமான உழவு இயந்திரங்களில் 11ஐ மட்டும் தெரிவுசெய்தமைக்கான காரணம், அவற்றை நீர்பாசன வாகனத் திருத்தும் பிரிவு ஆகியவற்றிடம் வினாக்களைத் தொடுத்தபோதும் அதற்கான உரிய பதிலகள் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1.84 | Leveling Box | No | 01 | 12,500.00 | 12,500.00 |
| 1.85 | Leveling York | No | 01 | 8,900.00 | 8,900.00 |
| 1.86 | Top Link Assy | No | 01 | 10,650.00 | 10,650.00 |
| 1.87 | Check Chain | No | 02 | 2,900.00 | 5,800.00 |
| 1.88 | Pin-Top Link | No | 01 | 550.00 | 550.00 |
| | | | | | 270,680.00 |
| 2.0 | Consumables | | | | |
| 2.1 | SAE 40, 6Ltr Can | No | 01 | 5,680.00 | 5,680.00 |
| | 1Ltr Can | No | 02 | 1,395.00 | 2,790.00 |
| 2.2 | SAE 30, 5Ltr Can | No | 02 | 5,680.00 | 11,360.00 |
| | 1Ltr Can | No | 02 | 1,395.00 | 2,790.00 |
| 2.3 | SAE 90, 20Ltr Can | No | 01 | 26,845.00 | 26,845.00 |
| | 5Ltr Can | No | 02 | 7,385.00 | 14,770.00 |
| 2.4 | Kerosene, cotton waste, emeri papers & etc. | Item | Allow | Sum | 4,500.00 |
| 2.5 | Diesel, for test-run | Ltr | 20 | 400.00 | 8,000.00 |
| 2.6 | WD 40 Can | No | 02 | 1,000.00 | 2,000.00 |
| 2.7 | Abro Sealastic | No | 03 | 840.00 | 2,520.00 |
| 2.8 | Hub grease, 500g Tin | No | 01 | 1,565.00 | 1,565.00 |
| 2.9 | Thread Lock | No | 01 | 650.00 | 650.00 |
| | | | | | 83,490.00 |
| 3.0 | Transport Charges | | | | |
| 3.1 | Transport charges for Vauniya to Rambewa (with OT, Subsistance of Driver, Mechanic & Helper) | Item | Allow | Sum | 11,000.00 |
| 3.2 | Transport charges for Rambewa to Vauniya (with OT, Subsistance of Driver, Mechanic & Helper) | Item | Allow | Sum | 15,000.00 |
| 3.3 | Transport charges for materials | Item | Allow | Sum | 5,000.00 |
| | | | | | 31,000.00 |
| 4.0 | Other Repairs | | | | |
| 4.1 | Tinkering for mudguard and bonnet | Item | Allow | Sum | 22,000.00 |
| 4.2 | Painting work for front wheel | Item | Allow | Sum | 8,500.00 |
| 4.3 | Painting work for rear wheel | Item | Allow | Sum | 12,000.00 |
| 4.4 | Painting work for mudguard | Item | Allow | Sum | 10,000.00 |
| 4.5 | Painting work for chasiss | Item | Allow | Sum | 9,500.00 |
| 4.6 | Painting work for bonnet | Item | Allow | Sum | 8,500.00 |
| 4.7 | Injector pump repair & replace (repair 4CY/A pump RSV, element, feed pump, bearing 30203, bearing 30204, service kit, bushing , flunger spring) D/Valve,DSLA144P949) | Item | Allow | Sum | 48,333.25 |
| 4.8 | Clutch pedal repair work with labour & materials | Item | Allow | Sum | 6,500.00 |
| 4.9 | King pin repair work with labour & materials | Item | Allow | Sum | 18,000.00 |

இவ்வாறு இந்த 11 உழவு இயந்திரங்களின் திருத்தத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப் பாகங்களின் மொத்த விலை 42 லட்சத்து 29 ஆயிரத்து 829 ரூபா 50 சதமாகவும், ஏற்றிச் சென்ற கூலி 3 லட்சத்து 41 ஆயிரம் ரூபாவும், வர்ணம் பூசிய செலவாக 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா சிட்டை இடப்பட்டுள்ளமை தொடர்பில் கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது இதற்கான திருத்தச் செலவு விபரங்களை மாவட்டச் செயலகத்தில் பெறுமாறுகூறியதன் அடிப்படையில் இவை மாவட்டச் செயலகத்தில் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரிப் பெற்ற விபரங்களில் இருந்து உறுதி செய்யப்பட்டன.

இதையெல்லாம் காணும் போது “பாமா விஜயம்” திரைபடத்தில் வரும் “வரவு எட்டணா, செலவு பத்தணா” என்கிற பாடலே நினைவுக்கு வருகிறது.

இதேநேரம் இதேகாலத்தில் இந்திய அரசினால் கிளிநொச்சிக்கு வழங்கப்பட்ட 100 உழவு இயந்திரங்களிற்கும் அந்த மாவட்ட கமநல சேவை நிலையம் அரச பெறுமதி கணிப்புத் திணைக்களம் மூலம் மேற்கொண்ட பெறுமதி கணிப்கில் 8 லட்சத்தில் இருந்து 12 லட்சத்தை எந்த உழவு இயந்திரத்தின் பெறுமதியும் தாண்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4.10 | Top link repair work with labour & materials | Item | Allow | Sum | 17,500.00 |
| 4.11 | Sliding bar repair work with labour & materials | Item | Allow | Sum | 14,500.00 |
| 4.12 | Repair silencer | Item | Allow | Sum | 4,500.00 |
| 4.13 | Alternator repair with labour & consumables | Item | Allow | Sum | 3,500.00 |
| 4.14 | Starter motor repair with labour & consumables | Item | Allow | Sum | 3,500.00 |
| 4.15 | Electrical repairs for whole wiring system with labour & consumables | Item | Allow | Sum | 10,000.00 |
| 4.16 | Gear box overhaul work for labour Machine work and Consumables | Item | Allow | Sum | 17,500.00 |
| | | | | | 214,333.25 |
| | Sub Total - A | | | | 599,703.25 |
| | Labour Charges | | | | |
| 5.1 | For Mechanic & Welder Subsistance and OT for other work | Item | Allow | Sum | 25,000.00 |
| | Total Labour Charge | | | | 25,000.00 |
| | Sub Total - B(sub total A+Total LC) | | | | 624,703.25 |
| | General | | | | |
| 7.1 | Cost for procurement activity (5% of A) | | | | 29,985.16 |
| 7.2 | Inspection & quality control (1% of B) | | | | 6,247.03 |
| 7.3 | Over heads (10% of B) | | | | 62,470.33 |
| | Grand Total | | | | 723,405.77 |

Prepared By:.................
Mrs.H.D.Wanninayake (Clerk)

Checked By:.................
Mr.R.M.B.A.Dissanayaka (MF)

Approved By:.................
Eng.E.J.M[illegible] Rathnayake
Mechanical Engineer
Regional Mechanical Engineer's Office
Irrigation Department
Rambewa

Copy: CME, North Central - For Information Please

Above mention repairs satisfactory attended

P.A.D.T Maldeniya
Chief Examiner of Motor Vehicles
Department of Motor Traffic
Vavuniya

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ரணிலிடம் பெட்டிகளை மாற்றிக் கொள்வதா தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு — சந்திரசேகரன்

பு. கஜிந்தன்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்துவது என்ற தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கான உரிமைகளுக்கா அல்லது ரணில் விக்ரமசிங்கவிடம் பெட்டிகளை மாற்றிக் கொள்வதற்காக என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்போது ஊடகங்கள் வாயிலாக தெரிய வருகின்றது ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்துவோம் என்கின்ற கருத்து இன்றைக்கு பேசப்படும் பொருளாக மாறி இருக்கின்றது.

ஆனால் ஒன்றை நாங்கள் இந்த இடத்தில் குறிப்பிட்டே ஆகவேண்டும் தமிழ் வேட்பாளர் அல்லது தமிழ் கட்சிகள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. அதன் மூலமாக இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுடைய உரிமைகள் தொடர்பான குரல் எழுப்புவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்றது, ஆனால் இந்த தேர்தலில் இருப்பது எங்களுக்கு தெரிகின்றது வேறு எதுவும் அல்ல, இப்போது இவ்வாறான அறிவிப்பின் மூலமாக ரணில் விக்கிரமசிங்க நினைத்துக் கொண்டிருக்கின்றார் தமிழ் மக்களுடைய வாக்கு வேற யாருக்கும் அல்ல ரணில் விக்ரமசிங்கவுக்கே கிடைக்கும் என்று ஆனால் இன்று மக்களுக்கு நன்றாக தெரியும் மக்கள் அனைவரும் குறிப்பிடுகின்றார்கள் ரணில் விக்ரமசிங்க என்கின்ற நரிக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்று கூறுகின்றார்கள்.

அதன் அடிப்படையை பார்க்கின்ற போது தமிழ் கட்சியினுடைய இவ்வாறான செயற்பாடு என்பது ஒரு புறத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகளுக்கா அல்லது ரணில் விக்ரமசிங்கவிடம் இருந்து ஏதாவது பெட்டிகளை மாற்றிக் கொள்வதற்காக என்கின்ற கேள்வி ஒன்று எழுகின்றது.

அதனால் நாங்கள் தேசிய மக்கள் சக்தி என்கின்ற வகையில் மிகவும் தெளிவாக சொல்லுகின்றோம் அதாவது தமிழ் கட்சிகள் இந்த வேளையில் மிகவும் நிதானமாக நடந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது, 75 வருடங்களாக இந்த நாட்டை ஆண்டவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கவில்லை, தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை தங்களுடைய பகடைக்காய்களாக பயன்படுத்தி இருக்கின்றார்கள். தமிழ் மக்களை அதாவது அங்கு செல்லுகின்ற இங்கு செல்லுகின்ற நிலைமைக்கு தள்ளிய பாவித்தனமான நடவடிக்கையை எடுத்தவர்கள் வேறு யாரும் அல்ல இந்த ரணில் ராஜபக்சக்களின் ஆட்சியாகும்.



மக்கள் விடுதலை முன்னணி என்கின்ற வகையிலும், தேசிய மக்கள் சக்தி என்கின்ற வகையிலும் நாங்கள் மிகவும் தெளிவாக சொல்லுகின்றோம் இம்முறை நடைபெறுகின்ற தேர்தலிலே, விசேடமாக ஜனாதிபதி தேர்தலிலே இனிமேலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ, அல்லது ராஜபக்சகளுக்கோ, அல்லது அங்கிருந்து வருகின்ற எந்த ஒரு வேட்பாளருக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். ஏனென்றால் இவர்களாலேயே தமிழ் மக்களுடைய நிலையை இந்த நிலைமைக்கு உள்ளாக்கிய பாவிகள் என்பது மக்களுக்கு நன்றாக தெரியும். அந்த நிலையை உணர்ந்து கொண்டு தமிழ் கட்சிகள் தங்களுடைய அரசியல் நகர்வுகளை மக்களுக்கு சாதகமானதாக முன்னெடுக்க வேண்டும் என்று நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

# சிங்கப்பூரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாணவிக்கு கௌரவிப்பு!



"சிறுவர் தலைமையிலான பரிந்துரைத்தல் மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு" எனும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேள்ட் விஷன் நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்டு, தென்னாசியா மற்றும் பசுபிக் கண்ட நாட்டு பிரதிநிதிகளுடனான மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சிங்கப்பூர் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட மாணவிக்கு கௌரவிப்பு நடைபெற்றது.

ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் தரம் பத்தில் கல்வி பயிலும் ஜெயசீலன் குஜிதா என்ற மாணவியே 03-10-2023 அன்று சங்கானை கலாச்சார மண்டபத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டார்.



இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து மூவர் தெரிவாகியிருந்த நிலையில் தமிழர் தரப்பில் இருந்து குஜிதா மாத்திரமே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரியில் 1,727 அமெரிக்க டொலர் செலவில் சூரிய மின்சாரம் — 2024ல் ஆரம்பிக்கப் திட்டம்!



கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 1200 ஏக்கரில் சூரிய மின்சாரத்தின் மூலம் (சோலர்) 700 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான வரைபடமும் இறுதி செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியன் சோலர் ஸ்ரீலங்கன் பிரைவேட் லிமிற்றட் கம்பனி குறித்த செயற் திட்டத்தினை செயல்படுத்தவுள்ள நிலையில் அதற்கான அமைச்சரவை அனுமதி கடந்த மாதம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்தால் செயல்திட்டம் செயல்படுத்தும் பகுதியில் உள சுமார் 7ஆயிரம் ஏக்கர் பரப்பளவு உள்ள பகுதியில் உள்ள செம்மண்குன்று மந்தக்ல் ஆறு மற்றும் குடாமுறுக்கி ஆறு ஆகிய பகுதிகளில் கிடைக்கும் மழை நீரை கடலுக்கு செல்ல விடாமல் குறுக்கு அணை அமைக்கப்பட்டு நிலத்தடி நீரை பாதுகாக்கும் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

இலங்கையின் மின்சாரத் துறையின் 6.5 வீத மின்சாரத்தை சேமிக்கும் நோக்கில் குறித்த செயற்திட்டம் அமையப் பெறுவதுடன் வளிமண்டலத்தில் காபன் அளவை குறிக்கவும் உதவுகிறது.

குறித்த திட்டத்தின் மேலதிகமாக பூநகரி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு 13.5மில்லியன் ரூபா செலவில் குடிநீர் தொட்டி அமைக்கப்படவுள்ளது.

குறித்த செயல் திட்டத்துக்கான ஆரம்பப் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் குறித்த திட்டத்தினை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

# கடந்தவையும் கடப்பவையும் - (73)

ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடம் சொன்னாலும் - இறுதியில்
எல்லோரும் தேர்ந்தெடுத்தார் நல்லூர் 'றியோ'வைத்தான்

ஒருமித்து முடிவெடுத்து பயணத்தைத் தொடர்ந்த போதும் - வண்டி
புகுவதற்கு முடியாது மூடிவிட்டார் வீதிகளை

திருவிழாக் காலம் என்றால் சொல்லவா வேண்டும் - அங்கு
பெருமளவில் களைகட்டும் சுற்றுப்புறச்சூழல் எல்லாம் - 'இனி

கனதூரம் நடந்து செல்ல முடியாது - நாளை
அழகாக வெளிக்கிட்டு வந்திடலாம் பூசைக்கு' - என்றபோதும்

குளிராக குடிக்கவென நினைத்த மனம்
எளிதாக விடவில்லை வேண்டாம் என்று

தெளிவாக விருப்பமதைச் சொன்னபோது - வண்டி
மெதுவாகத் திரும்பியது யாழ் நகரை நோக்கி

பெருவாரியாக சனக்கூட்டம் கடைகளுக்குள் - அங்கு
ஒருகாலம் இல்லாத ஒருகூட்டமும்

வருவோர் போவோர் பின்னால் பட்டத்தின் வாலாவாய் - இவர்
தருவார் என்பதுபோல் தொடருகிறார்

சிறுவயதுப் பெண்கள் சிலர் கைகளில் குழந்தைகளோடு
வெறுவயிறு பசிக்குது என்றவராய்க் கையேந்த

சாம்பிராணி விப்பவர்கள் என்றும் கூட
பின்தொடரும் பிள்ளைகளும் கண்ணெதிரில்

'ஒன்றேனும் வாங்குங்கள்' என்றவர்கள் கேட்டுநிற்க - யாழ்ப்பாணம்
நன்றாக வளர்ந்ததென்று புலம்பெயர் தேசத்தில்

புளுகித்தள்ளும் எங்களுக்குள் ஒழிந்திருக்கும்
பகுதியொன்றும் திறந்தவெளியில் தெரிகிறது

'பெடியளின் காலத்தில் இல்லையே இவர்கள்' என்றபோது
'வெடிகளோடு அவர்களும்தான் விடவில்லை இப்படி,

இங்கு இரப்பவர் எல்லோரும் எம்மவர் இல்லை
எங்கெங்கோ இருந்தெல்லாம் வருகிறார்கள்

பொல்லாத பொருளாதாரம் ஒருபுறமும் - இன்றைய
கொள்ளை நோயான போதைப்பொருள் மறுபுறமும்

நல்லவர் பலரும் நாசமாய் போவதற்கும்
கல்விக்கும் சிறார் வீதிக்கு வந்ததற்கும்

காரணமானதென கவலையுடன் கூறிய அங்கிள் - பின்
போராட்ட காலத்துப் பொல்லாத பாதிப்பும் - பலரை

சோற்றுக்கு இல்லாதவர் ஆக்கியதும் உண்மைதானே - அன்று
நாட்டுக்கெனப் போனவரும் உறுப்பிழந்து அலைக்களியும்

அவலநிலை இன்றும் சில இடத்தில் உள்ளதுதான்' - என்று
கவலையுடன் சொல்லி வாய் மூடுதற்குள்

சில்லுப் பூட்டிய தள்ளு வண்டியை தானே இயக்கி
மெல்ல நகர்ந்து யாசகம் கேட்கிறார் ஒருவர் - அவரைப்

பார்த்ததும் வேதனை மேலிட விரைந்துபோய் - கிட்டப்
பார்த்து கொடுக்க முடிந்ததைக் கொடுத்து மீளவும்

'தமிழர் அல்ல அவர்' என்று அங்கிளவர் சொன்னபோது
எவராக இருந்தாலும் அவர் மனிதர் - நம்மவர்

எளியவர்க்கு உதவுவதில் பாரபட்சம் காட்டமாட்டார் - என
தெளிவாக அறிந்துதான் வந்திருப்பார்' என்றவாறு

குளிராகக் குடிப்பதற்காய் கடையொன்றுள் புகுகின்றோம்...

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

# இந்திய உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்யத் தயாராகும் இலங்கை அரசு

- நடராசா லோகதயாளன்



இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தம் காரணமாக அதிகம் பாதித்த வடக்கு மாகாண விவசாயிகளின் நன்மை கருதி 2011ஆம் ஆண்டு இந்தியா வழங்கிய 500 உழவு இயந்திரங்களும் இரும்பாக காட்சி அளிக்கின்றன.

போரின் பின் வடக்கு மக்களை மீட்டெடுக்க என்னும் செயற் திட்டங்களின் கீழ் வடக்கின் 5 மாவட்டத்திற்கும் 500 உழவு இயந்திரங்களை இந்தியா வழங்க முன்வந்தபோது அதனை விவசாயிகளிடம் அல்லது வவிசாய அமைப்புக்களிடம் நேரடியாக வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாணாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர். இருந்தபோதும் அரசோ அதில் தமது பிடி இருக்க வேண்டும் எனக கருதி கமநல சேவை நிலையங்களிற்கு வழங்கி விவசாயிகளிற்கு குறைந்த விலையில் சேவையை வழங்குவதாக அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி வழங்கிய உத்தரவின் பெயரில் அவை கமநல சேவை நிலையங்களிற்கே வழங்கப்பட்டன.

இதில் 5 மாவட்டத்திற்கும் வழங்கிய 500 உழவு இயந்திரங்களுமே இன்று அநாதரவாகவும் பாவிப்பு இன்றியும் உள்ளதோடு பராமரிப்பும் இன்றியே உள்ளது.நாட்டில் இன்று 35 லடசம் ரூபா வரையில் உழவு இயந்திரம் விற்பனையாகும் நிலையில் இவையோ வெறும் 8 லட்சம்,10 லட்சம் ரூபா பெறுமதியிலேயே காட்சியளிக்கின்றன.

இதில் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ உள்ள 100 உழவு இயந்திரங்களில் 30 உழவு இயந்திரங்கள் மட்டுமே இயங்குவது தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வழங்கிய பதிலில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு இந்திய அரசின் அன்பளிப்பில் வடக்கிற்கு 500 உழவு இந்திரங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட 500 உழவு இயந்திரங்களில் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 100:உழவு இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட நூறு உழவு இயந்திரங்களும் மாவட்டத்தின் 10 கமநல சேவை நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இவை விவசாயிகளின் வயல் உழவிற்கு நியாயமான கட்டணத்தில் வழங்கும். ஏற்பாடு செய்யப்பட்டபோதும் அவை நான்கு ஆண்டுகளிற்கும் உட்பட்ட காலத்தில் பழுதடைந்தபோதும் எந்தவொரு உழவு இயந்திரங்களும் திருத்தப்பணியின்றியே கமநல சேவை நிலையங்களில் தற்போதும் தரித்து நிற்கின்றன.



இவ்வாறு தரித்து நிற்கும் 100 உழவு இயந்திரங்களினதும் இன்றைய சந்தைப் பெறுமதியாக 6 கோடியே 77 லட்சம் ரூபா மட்டுமே அரச திணைக்களத்தால் 2023ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 23 ஆம் திகதியில் கணிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இந்த 100 உழவு இயந்திரங்களும் திருத்தம் செய்வதற்கு உழவு இயந்திரங்களின் பெறுமதியின் 150 வீதமான 9 கோடியே 6 லட்சம் ரூபா தேவை எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு காணப்படும் உழவு இயந்திரங்களில் 30 உழவு இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கும் 70 உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்யவும் மாவட்ட கமநல ஆணையாளர் அலுவலகம் விவசாய அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப.பியுள்ளார்.

இதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 100 உழவு இயந்திரங்களில் 70 உழவு இயந்திரங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு நிதி அரச திறைசேரியின் வருமானத்திற்குச் செல்லவுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி இரணைமடு விவசாயிகள் சம்மேளணச் செயலாளர் மு.சிவமோகன் கருத்து தெரிவிக்கையில்,

இவ்வாறான நிலை ஏற்படும் எனபதனை அன்றே கணித்தே நாம் அதனை விவசாயிகளிடம் நேரடியாகத் தருமாறு கோருனோம். தற்போதுதன்னும் அவற்றை ஒவ்வொரு விவசாய அமைப்பிற்கு அல்லது சிறந்த விவசாயிகளிற்கு அல்லது வறுமைப்பட்ட விவசாயிகளிற்கு இலவசமாக வழங்கலாம். ஏனெனில் அவை விவசாயிகளிற்காக இந்திய அரசின் அனபளிப்பே அன்றி அரசிற்கான அன்பளிப்பு அல்ல என்றார்.



இதேநேரம் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் இவ்வளவு தரவுகள் பேணப்படுகின்றபோதும் ஏனைய மாவட்டங்களிடம் இவ்வாறான தரவுகளும் காணப்படவில்லை.

# கட்டாய உழைப்பில் ஈடுபட்டுள்ள மூன்று சீன நிறுவனங்களின் இறக்குமதிக்கு அமெரிக்கா தடை

- நடராசா லோகதயாளன்



உய்குர் சிறுபான்மையினரின் கட்டாய உழைப்பைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களை அமெரிக்க சந்தையில் இருந்து அகற்றும் முயற்சியின் ஒரு பகுதியாக மூன்று சீன நிறுவனங்களின் இறக்குமதிக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

ஜின்ஜியாங் தியான்மியன் ஃபவுண்டேஷன் டெக்ஸ்டைல் கோ லிமிடெட், சின்ஜியாங் தியான்ஷான் வூல் டெக்ஸ்டைல் கோ லிமிடெட் மற்றும் ஜின்ஜியாங் ஜாங்டாய் குரூப் கோ லிமிடெட் ஆகியவை உய்குர் கட்டாயத் தொழிலாளர் தடுப்புச் சட்ட நிறுவனப் பட்டியலில் சேர்க்கப்பட்டன, அரசாங்க பட்டியலில் 27 நிறுவனங்களின் எண்ணிக்கை உள்ளது.

உய்குர் சிறுபான்மையினர் மற்றும் பிற துன்புறுத்தப்பட்ட குழுக்களை உள்ளடக்கிய வணிக நடைமுறைகளின் விளைவாகவே இந்த மூன்று நிறுவனங்களும் நியமிக்கப்பட்டன என்று அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“கட்டாய உழைப்பைப் பயன்படுத்தும் நிறுவனங்கள், லாபம் ஈட்டுவதற்காக தனிநபர்களின் மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்யும் நிறுவனங்களை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்” என்று அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு செயலாளர் அலெஜான்ட்ரோ மயோர்காஸ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உய்குர்கள், கசாக்ஸ், கிர்கிஸ் அல்லது பிற துன்புறுத்தப்பட்ட குழுக்களின் உறுப்பினர்களை பிராந்தியத்திற்கு வெளியே ஆட்சேர்ப்பு மற்றும் போக்குவரத்து, துறைமுகம் அல்லது பயன்படுத்த சின்ஜியாங் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதற்காக இந்த மூன்று நிறுவனங்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சீனாவின் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர், சின்ஜியாங்கில் கட்டாய உழைப்பு பற்றிய குற்றச்சாட்டுகளை "நூற்றாண்டின் பொய்” என்று அழைத்தார், அவை சீனாவை இழிவுபடுத்துவதையும் அதன் வளர்ச்சியை அடக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன என்றும் கூறினார்.

“சாராம்சத்தில்,(அமெரிக்கா) சின்ஜியாங்கின் செழிப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது, சீனாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் சர்வதேச வர்த்தக விதிகள் மற்றும் சந்தை ஒழுங்கை அழித்து வருகிறது” என்று செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

Xinjiang Tianmian Foundation Textile Co நூல் மற்றும் பிற ஜவுளிப் பொருட்களைத் தயாரிக்கிறது என்று அமெரிக்க அறிக்கை கூறியது. Xinjiang Zhongtai Group Co பாலிவினைல் குளோரைடு (PVC) மற்றும் பிற ஜவுளி, இரசாயன மற்றும் கட்டுமானப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்கிறது. Xinjiang Tianshan Wool Textile Co மற்ற தயாரிப்புகளுடன் காஷ்மீர் மற்றும் கம்பளி ஆடைகளை விற்பனை செய்கிறது.



நிறுவனங்கள் அனைத்தும் சின்ஜியாங்கை அடிப்படையாகக் கொண்டவை. கருத்துக்கான கோரிக்கைகளுக்கு அவர்கள் அனைவரும் உடனடியாக பதிலளிக்கவில்லை.

2022 ஆம் ஆண்டில், Xinjiang Zhongtai குழுமம், Fortune இதழின் உலகளவில் சிறந்த 500 நிறுவனங்களின் பட்டியலில் அறிமுகமான சின்ஜியாங்கிலிருந்து முதல் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக மாறியது என்று மாநில செய்தி நிறுவனமான ஓைரைய தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் சட்டம், உய்குர் கட்டாயத் தொழிலாளர் தடுப்புச் சட்ட நிறுவனப் பட்டியல் (UFLPA), சின்ஜியாங்கில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்வதைத் தடை செய்கிறது அல்லது பட்டியலில் அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களால், இறக்குமதியாளர் கட்டாயப்படுத்தி உற்பத்தி செய்யப்படவில்லை என்பதை நிரூபிக்க முடியாவிட்டால் தொழிலாளர்.

சீனாவின் மேற்கு சின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் மற்றும் பிற முஸ்லிம் சிறுபான்மை குழுக்களுக்கு சீன அதிகாரிகள் தொழிலாளர் முகாம்களை அமைத்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் நம்புகின்றனர். பெய்ஜிங் எந்த முறைகேடுகளையும் மறுக்கிறது.

செவ்வாயன்று வெளியுறவுத் துறை அதன் வணிக ஆலோசனையை ஜிங்ஜியாங் விநியோகச் சங்கிலியில் புதுப்பித்தது, சீனாவின் “சின்ஜியாங்கில் நடந்து வரும் இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் அங்கு கட்டாய உழைப்பு பரவலாக பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகள்” ஆகியவற்றிற்கு கவனம் செலுத்தியது.

தொழிலாளர்களுக்கான கட்டாய உழைப்பு மற்றும் மனித உரிமைகள் அபாயங்களைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல் மற்றும் செயல்படுதல் உட்பட வணிகங்கள் உரிய விடாமுயற்சி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசரத்தை அது வலியுறுத்தியது.

உய்குர் கட்டாயத் தொழிலாளர் தடுப்புச் சட்டத்தின் அமலாக்கத்தின் வேகம் மற்றும் தரத்தால் சில உய்குர் குழுக்களும் ஆர்வலர்களும் விரத்தியடைந்துள்ளனர். சட்டத்தை அறிமுகப்படுத்த உதவிய செனட்டர் மார்கோ ரூபியோ, மேலும் நிறுவனங்களை பட்டியலில் சேர்க்குமாறு பிடன் நிர்வாகத்தை வலியுறுத்தினார்.

“சீனாவை தளமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் அடிமைத் தொழிலுக்கு உடந்தையாக இருக்கக்கூடும்” என்று ரூபியோ ஒரு அறிக்கையில் தெரிவித்தார். “மெதுவான வேகம் அடிமைத் தொழிலில் இருந்து லாபம் பெறுபவர்களை உற்சாகப்படுத்துகிறது.”

பட்டியலில் சேர்க்கப்பட்ட இரண்டு சீனாவை தளமாகக் கொண்ட நிறுவனங்களின் பொருட்களை அமெரிக்கா ஆகஸ்ட் மாதம் தடை செய்தது.

# கண்ணீர் அஞ்சலி #58



மலர்வு
06
-
06
-
1934

உதிர்வு
29
-
09
-
2023

## திருமதி. ரெஜினா ஞானபூசனம் இமானுவேல்

எங்கள் OSTBA உறுப்பினர் #123
புரட்டாதி 29, 2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION
OSTBA2019@GMAIL.COM WWW.OSTBA.CA
416-473-6880






# 11ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். குணசிங்கம் கந்தசாமி



தோற்றம்
05-02-1936

மறைவு
07-10-2012

உடுப்பிட்டி சன்னிதி வீதியை பிறப்பிடமாகவும், கனடா - ஸ்காபுரோவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். குணசிங்கம் கந்தசாமி அவர்களின் 11ம் ஆண்டு நினைவஞ்சலி.

எம் இதயங்களில் ஒளி வீசிய பூரண நிலவே!
எம் கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ
எம் அருமை தந்தையே!
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்திவிட்டு சென்றனையோ!
பூரண வாழ்வை வாழ்ந்து களித்து விட்டேன் என்று
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றனையோ!
நல்ல கணவராய் பாசமிகு தந்தையாய்! ஆசை மாமனாய்!
பிரியமிகு தாத்தாவாய்! அன்புச் சகோதரராய்!
குடும்ப ஒளிவிளக்காய்! பண்பிற்கோர் இலக்கணமாய்!
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அருமை தெய்வத்திற்கு
எமது அஞ்சலிகள்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்
குடும்பத்தினர் 416-432-5499

# இவ்வார ராசிபலன்

## 06-10-2023 வெள்ளி தொடக்கம் 12-10-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாயப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப்பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F

*(தொடர்ச்சி 34 பக்கம்)*


## இவ்வார ராசிபலன்

(33 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்னை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E




**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவா் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z




**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் வைபவம்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் வைபவம் எதிர்வரும் 28-10-2023 அன்று கனடாவின் ஸ்காபுறோ நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த வைபவத்தில் கனடா வாழ் மூத்த எழுத்தாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கௌரவத்தைப் பெறவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தற்போதைய தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் அதன் நிர்வாக சபை செயற்பட்டு வருகின்றது.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியைச் சூழவுள்ள பிரதேசத்தில் சி.சி.ரி.வி கமரா பொருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன

**- நடராசா லோகதயாளன்**

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் உள்ள மனிதப் புதை குழி அகழ்வுப் பணிகள் இடம்பெற்று தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ள அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கும் காலம் அறிவிக்கப்படாத நிலையில் அப் பகுதியை தொடர் கண்காணிப்பில் வைத்திருக்கும் நோக்கிலும், அப் பகுதி தொடரபில் சந்தேகம் எழுவதனை தவிர்க்கும் வகையிலுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது இந்த வகையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி காணும் பிரதேசத்தைச் சூழ கமரா பொருத்தும் பணி நேற்று முதல் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கான பணியினை யாழ்ப்பாணத்தில் உள்ள ஓர் கமரா பொருத்தும் வர்த்தக நிலையம் ஊடக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை, கொக்குத்தொடுவாயில் பணியாற்றிய அதிகாரிகளின் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் பணியாற்றிய அதிகாரிகளிற்கான கொடுப்பனவிற்கான சிட்டைகள் தயார் செய்து வழங்கியபோதும் அதற்கான பணம் இதுவரை கிடைக்கவில்லையென மாவட்டச் செயலகம் தெரிவிப்பதனால் கொடுப்பனவுகள் தாமதமடைவதாக சுட்டக்காட்டப்படுகின்றது.

இதுதொடர்பில் மாவட்டச் செயலக அதிகாரிகளிடம தொடர்புகொண்டு இப் பணிக்கான பணத்திற்கான அனுமதி ஏற்கனவே கிடைத்திருந்தமை தொடர்பில் கேட்டபோது,

இந்தச் செலவிற்கான அனுமதி கிடைத்திருந்தபோதும் இதற்கான தரவப் பணம் கிஜக்கவில்லை என்பதே சுட்டிக்காட்டப்பட்டது. இருந்தபோதும் மாற்று ஏற்பாடுகள் மூலம் விரைவாக இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனப் பதிலளித்தனர்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




**Contact Us Today**

**NESAN 416-908-5656**
*Subramaniam*

## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524





26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்


இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524


உதயம் 1435 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 6, 2023



# இலங்கையில் அரசியல் அழுத்தம் காரணமாக ஒரு பெரும்பான்மையினத்தைச் சார்ந்த உயரதிகாரி பதவி விலகினார் – *நடராசா லோகதயாளன்*

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உயிர் அச்சுறுத்தல் மற்றும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இப்போது அரசியல் அழுத்தம் காரணமாக பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த உயரதிகாரி வியாழக்கிழமை பதவி விலகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இலங்கையின் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் நிலந்த விஜயசிங்க அரசியல் அழுத்தம் காரணமாக பதவியில் இருந்து விலகியுள்ளார்.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளராக கடந்த 4 ஆண்டுகளாக பதவி வகித்த நிலந்த விஜயசிங்க இவ்வாறு அழுத்தம் காரணமாக பதவி விலகியுள்ளார். தற்போது பெரமுன கட்சியின் அங்கத்துவத்தில் உள்ள தவிசாளரை அக்கட்சியை சேர்ந்தவர்களே அழுத்தம் கொடுத்து நேற்று வியாழக்கிழமை (5) தினம் பதவி விலகல் கடிதத்தை வழங்கி வெளியேற வைத்துள்ளனர் எனவும் அறியப்படுகின்றது.

இதற்கமைய எதிர்வரும் திங்கட்கிழமை முதல புதிய தவிசாளர் ஒருவரை நியமிக்கும் நோக்கிலேயே தற்போதைய தவிசாளரை பதவி விலக நிர்ப்பந்திக்கக்பட்டதாக தற்போதைய தவிசாளர் தெரிவித்துள்ளார்.


இவ்வாறிருக்க. தற்போதைய தவிசாளர் நிலந்த விஜயசிங்காவும் ஓர் சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# Let's build a country where we can be who we are, without judgment, without discrimination.

## President of Canadian Tamil Congress Raveena Ratnasingam expresses support to Curve Lake First Nation community.

# நாம் ஒன்றுசேர்ந்து பாகுபாடு இல்லாத, நாமாக இருக்கக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்.

## – கனேடிய தமிழ் காங்கிரஸின் தலைவி ரவீனா ராஜசிங்கம்








கடந்த வாரம் பீற்றர்பொறோ நகரத்திற்கு சற்று அப்பால் உள்ள **Curve Lake First Nation community** என்னும் கனடாவின் மூத்த குடிகள் வாழும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கனேடிய தமிழ் காங்கிரஸ் ஆதரவு வழங்கும் வகையில் கருத்தரங்கு மற்றும் பேரணி ஒன்றை நடத்தியது அதில் தலைவி ரவீனா ராஜசிங்கம். மற்றும் மேற்படி கனடாவின் மூத்த குடிகள் அமைப்பின் தலைவர் **Chi Miigwich chief Knott and the members of council.** ஆகியோர் தலைமையில் கருத்தரங்கு மற்றும் பேரணி ஆகியன இடம்பெற்றன.


அதில் உரையாற்றிய ரவீணா ரட்னசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தினத்தை அனுசரிக்க நாங்கள் இன்று உங்களுடன் இங்கு கூடியிருக்கின்றோம். கர்வ் லேக் ஃபர்ஸ்ட் நேசன் சமூகத்திற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலங்களில் துரதிரஸ்டவசமாக குடியிருப்புப் பள்ளிகளில் இருந்து வீடு திரும்பாத குழந்தைகளுக்கு அஞ்சலி செலுத்தும் நாள், அதே நேரத்தில் உயிர் பிழைத்தவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களை அங்கீகரிக்கவும் நாங்கள் எமது சமூகம் சார்பாக கலந்து கொண்டுள்ளோம்

கனடிய தமிழ் காங்கிரஸ். மனித உரிமைகள், சமத்துவத்திற்கான வெற்றி மற்றும் அனைத்து வகையான பாகுபாடு மற்றும் சகிப்பின்மை ஆகியவற்றை நீக்குவதற்கு ஏனைய கனடிய சமூகங்களோடு இணைந்து செயற்பட்டு வருகின்றது இது எங்கள் பணிகளில் ஒன்றாகும். கனேடிய தமிழர்களான நாங்கள் உங்களுடன் ஒற்றுமையாக நிற்கிறோம், மேலும் கனடிய தேசத்தில் அறிவையும் குணப்படுத்துவதையும் வளர்ப்பதில் உறுதியாக இருக்கிறோம். இந்த நாளில் எமது சமூகத்தின் சார்பில் பல்வேறு தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கனடியத் தமிழ் காங்கிரஸுடன் இணைந்துள்ளனர் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்” என்றார். மேற்படி முக்கிய நிகழ்வில் பல தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

# மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணைமைந்தனின் நான்கு நூல்கள் ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன



மொன்றியால் வாழ் எழுத்தாளரும் நூலாசிரியருமான சண்முகராஜா வீணைமைந்தன் எழுதிய நான்கு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த 23 ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் வெளியிடப்பெற்றன

மேற்படி நான்கு நூல்களின் வெளியீட்டு விழா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரைகள் மற்றும் நூல்கள் பற்றிய ஆய்வுரைகள் ஆகிய இடம்பெற்றன.

முதலில் ஆரம்ப உரையாற்ற கனடா எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் அழைக்கப்பெற்றார்.

தொடர்ந்து வாழ்த்துரைகள் மற்றும் நூல்களின் ஆய்வுரைகள் ஆகியன இடம்பெற்றன. காத்திரமான நூல்களாக விளங்கிய எழுத்தாளர் வீணைமைந்தனின் படைப்புக்கள் நேர்த்தியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பெற்றன.

அழைக்கப்பட்ட நண்பர்கள் மற்றும் இலக்கியவாதிகள் வர்த்தகப் பிரமுகர்கள் நூலின் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். முதற் சிறப்புப் பிரதியை முன்னாள் கனடிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

# தமிழாழி பேரவையும் தமிழாழி தொலைக் காட்சியும் ரொறன்ரோவில் நடத்திய "தமிழாழி விழா – 2023



கனடா மொன்றியால் மாநகரை தளமாகக் “கொண்டியங்கும் “தமிழாழி பேரவை-யும்“ “தமிழாழி தொலைக் காட்சியும் இணைந்து ரொறன்ரோ மாநகரில் 30-09-2023 அன்று நடத்திய “தமிழாழி விழா-2023 சிறப்புற நடைபெற்றது

ரொறன்ரோ தேவாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவனங்களின் தலைவரும் கவிஞருமான உயிரவன் அவர்கள் கவனித்திருந்தார். அவருக்கு உதவியாக பல தொண்டர்கள் அங்கு இணைந்து நின்றனர்.

இங்கே காணப்படும் படத்தில் தமிழாழி நிறுவனத்தின் தலைவர் உயிரவன் அவர்கள் கௌரவிக்கப்படுவதையும் அருகில் சிறப்பு விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம்.